Koviloor Digital Library

திராவிட மொழி ஒப்பியல்

டாக்டர்.நா.செயராமன்

VTN0128

Koviloor Digital Library

Koviloor Digital Library

அழகப்பா பல்கலைக்கழகம் வளர் தமிழ் நூலகம் காரைக்குடி

பதிப்புரை

தமிழுணங்கின் பெருமைதனைத் தரணிக் குணர்த்த விழைந்த பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள், "கன்னடமுங் களிதெலுங்குங் கவின்மலை யாளமுந் துளுவும், உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல வாயிடினும்...நின் சீரிளமைத்திறம் வியந்து செயன் மறந்து வாழ்த்துதுமே!" என மனங்குளிர போற்றுகின்றார்! கன்னித்தமிழின் மேன்மையினை உலகுக்கு உரைக்க வந்த கால்டுவெல் துரைமகனாரும் "திராவிட மொழி ஒப்பிலக்கணம்" எனும் ஒப்பிலா நூலைத் தந்து பெருமையுற்றார்! இக்காலத்து இம்மொழிகளைப் பற்றி ஆராயும்நிலை வளர்ந்து வருதல் கண்கூடு! உலகத்து மொழி நூலறிஞர் பலரும், நம் திராவிட மொழிகளை ஆராய்ந்து வருகின்றனர்! இம்மொழிகளை நம்மனோரும் எளிதில் அறிந்து உணரும் வகையில், 'திராவிட மொழி ஒப்பியல்' எனும் இந்நூலை வெளியிடுவதில் பெருமையுறு கின்றோம்! 'சங்கஇலக்கியத்தில் பாடாண்திணை' எனும்பொருள் குறித்து ஆய்வியல் நடத்தி, 'டாக்டர்' பட்டம் பெற்றவரும், பல்லாண்டுகளாகத் தமிழ் பயிலும் மாணவர்க்கு 'ஒப்பியல்' குறித்து விரித்து உரைத்து வருபவருமான டாக்டர் திரு. நா. செயராமன் அவர்கள் இந்நூலை உருவாக்கியுள்ளனர். இதனை வெளியிடும் உரிமையை எமக்கு அளித்தஅன்னாருக்கு எம்நன்றி.

தமிழ்ப் பெருமக்கள் இந்நூலினை வாங்கி ஆதரவு நல்க வேண்டுகின்றோம்.

மதுரை—1,
31-7-1975

நாவலர் புத்தக நிலையத்தினர்.

Koviloor Digital Library

ஆசிரியர் முன்னுரை

மொழியியல்துறை, மொழியை அறிவியல் முறையில் ஆராயும் துறையாகும். அத்துறையில் திராவிடமொழி ஒப்பியல் இன்று ஓரளவு வளர்ச்சி பெற்றுளது. திராவிட மொழிகள் பலவற்றைப் பற்றிய தனித்தனி நூல்களும் ஒப்பியல்முறையில் எழுதப்பட்ட நூல்களும் இன்று பெருகி வருகின்றன. ஆயின் அவை ஆங்கிலத்திலேயே பெரும்பாலும் உள்ளன.

கல்லூரித் தமிழாசிரியர்களுக்கு மொழியியல் பயிற்சி தரும் கோடைகால வகுப்பு அண்ணாமலைப்பல்கலைக்கழக மொழியியல் துறையினரால் நடத்தப்பட்டது. அப்பயிற்சியே இத்தகையதொரு நூலை எழுதும் எண்ணத்தையும் திறனையும் எனக்களித்தது.

தியாகராசர் கல்லூரியில் தமிழ் இளங்கலை, முதுகலை மாணவர்களுக்கு ஒப்பியல், மொழிவரலாறு முதலிய பாடங்களைக் கற்பிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அவ்வாய்ப்பே, இந்நூலை எழுதத் தூண்டியது!

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தந்த பயிற்சியும் தியாகராசர் கல்லூரி தந்த வாய்ப்புமே இந்நூலுக்கு அடிப்படை.

கால்டுவெல்லின் ஒப்பிலக்கணமும் டாக்டர் வரதராசனரின் மொழிநூலும் இத்துறையில் உள்ள தமிழ் நூல்களாகும். அந்நூல்களுக்குப்பின் ஏற்பட்ட வளர்ச்சிகளை உள்ளடக்கியதாக இந்நூல் வெளி வருகிறது.

ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள ஒப்பியல் நூல்கள் [Dravidian Phonology, Dravidian Nouns, Dravidian Verb Morphology] இந்நூலுக்கு ஆதாரமாயமைந்துள.

இந்நூலை வெளியிட முன்வந்த நாவலர் புத்தக நிலையத்தார்க்கு எனது நன்றி. கனரா வங்கியினர் அளித்த பொருட்கடன்உதவி நன்றியுடன் நினைவு கொள்வதற்குரியது. இந்நூல் அச்சிடும் பணியில் நண்பர் அருணகிரியின் உதவி நினைத்தற்குரியது.

மதுரை—1,
31-7-1975

நா. செயராமன்.

Koviloor Digital Library

பயன்பட்ட நூல்கள்

1. History of Grammatical Theories in Tamil.
—Dr. P.S. Subramanya Sastri.
2. History of Tamil Language — T. P. Meenakshi Sundaram.
3. Collected papers — M. B. Emeneau.
4. Phonemics of old Tamil — C. R. Sankaran. M.A.,
5. An outline of Colloquial Kannada—William Bright.
6. A Study of Tamil Verbs — Dr. V. Sp. Manickam.
7. Kolami - A Dravidian Language—M. B. Emeneau.
8. Descriptive Analysis of Tulu—D.N.Shankara Bhat.
9. Structure of Malto—A Sisir Kumar Das.
10. Historical Grammar of old Kannada—Govind Swamirao Gai.
11. A Grammar of Kannada—K. Gushalappa Gowda.
12. An Introduction to Modern Telugu—P. S. Subramanyam.
13. Evolution of Malayalam—A. C. Sekhar.
14. A Descriptive Grammar of Gondi.
-P.S.Subramanyam.
15. Post-nasal Voiceless Plosives in Dravidian
N.Kumarasami Raja.
16. Dravidian Comparative Phonology.
A Sketch-M. B. Emeneau.
17. Dravidian Verb Morphology—P. S. Subramanyam.
18. Dravidian Nouns—S. V. Shanmugam.
19. Dravidian Linguistics—Seminar papers.
20. Third seminar on Dravidian Linguistics.
21. Collected papers on Dravidian Linguistics.
—Prof. T. Burrow.
22. Studies in Tamil Linguistics — P. Kothandaraman.

Koviloor Digital Library

23. The Grammatical Structure of Dravidian Languages-Jules Bloch.
24. A Grammar of the TamilLanguage-Constantus Joseph Beschi.
25. Studies in Indian Linguistics-1968.
26. Dravidian Etymological Dictionary.
27. இலக்கணஉலகில் புதிய பார்வை—டாக்டர் பொற்கோ.
28. திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம்—டாக்டர் கால்டுவெல்
29. இந்தியப்பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்ற நான்காவது கருத்தரங்கு மலர்.
30. ஐந்தாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை.
31. ஆறாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை.
32. மொழிநூல்—டாக்டர் மு.வ.
33. தமிழ் மொழி வரலாறு—டாக்டர் தெ. பொ. மீ.
34. தொல்காப்பிய மொழியியல்.

Koviloor Digital Library

உள்ளுறை

பக்கம்

திராவிடம் எனும் சொல் வழக்கு 1

திராவிட மொழிகள் 2

I ஒலியன் இயல் 15

1. திராவிட மொழியில் உள்ள உயிர் ஒலியன்கள் 16

[மூக்கின உயிர்கள்-இகர எகர, உகர ஒகர மாற்றங்கள்-உயிர் ஒலி இயைபு-உடம்படுமெய்-உயிர் இடம் பெயரல்-அடிச்சொல் உயிர் குறுகல்-உயிர் நீட்சி]

2. மெய் ஒலியன்கள் 30

[மொழி முதல் ககரம்-மொழி முதல் சகரம்-மொழி முதல் யகரம்-மெய்யொலி மாற்றங்கள்-அசையழுத்தம்-தொடரழுத்தம்]

II பொருளன் இயல் 46

[சொல்லாக்கம்-மொழியின் மூவகை நிலை-அடிச்சொல்லோடு சேரும் இணைப்புக்கள்]

1. பெயர் 49

[திணை]

2. பால் பகுப்பு 50

3. வேற்றுமை 59

4. மூவிடப் பெயர்கள் 68

5. சுட்டுப் பெயர் 76

6. வினுப் பெயர்கள் 78

7. எண்ணுப் பெயர்கள் 79

III வினைச் சொல் 89

1. திணை பால் உணர்த்தும் முறை 89

[தன்மைப் பன்மை]

Koviloor Digital Library

2. காலம் காட்டும் முறை 92

[இறந்த காலம்-நிகழ் காலம்-எதிர் காலம்-பிற கால வேறுபாடுகள்]

3. தன்வினை, பிறவினை 103

[கால இடைநிலை மாறுபாடு]

4. வினை எச்சம் 109

[இறந்த கால வினை எச்சம்-நிபந்தனை வினை எச்சம்-சலுகைப் பொருள் வினை எச்சம்-இறப்பில் கால வினை எச்சம்-செயவென் எச்சம்-பிற நிகழ்கால வினையெச்ச விகுதிகள்]

5. வினையடை 113

6. பெயரெச்சம் 114

7. பெயரடை 116

8. ஏவல் 117

9. வியங்கோள் 120

10. எதிர்மறை 121

[உருவிலி உருபன்-இறந்த கால எதிர் மறை-வினையெச்சத்தில் எதிர் மறை-பெயரெச்சத்தில் எதிர் மறை-எதிர் மறைத் தொழிற் பெயர்-எதிர் மறை வினையடிகள்]

11. செயப்பாட்டு வினை 128

12. தொழிற் பெயர் 130

13. வினையாலணையும் பெயர் 131

IV தொடர் 132

[பெயரடைத் தொடர்-வினையடைத் தொடர்-பாலிட இயைபு-தொடர் முறை-இணைப்பு விகுதிகள்-இணைப்பு வினை]

பிழை திருத்தம் 138

Koviloor Digital Library

ALAG... LIBRARY - KARAIKUDI-623003 -

திராவிடம் எனும் சொல் வழக்கு

திராவிடமொழி, என்பது தென்னிந்தியாவில் பேசப்படும் மொழிக் குழுவைக் குறிக்கவும் திராவிடநாடு என்பது தென்னிந்தியாவைக் குறிக்கவும் இன்று வழங்கப்படுகிறது.

திராவிடம் என்ற சொல்லைத் தான் கையாண்டதற்குக் கால்டுவெல் அவர்கள் பல காரணங்களைக் கூறுகிறார். கி.பி. ஏழாம்நூற்றாண்டில் வாழ்ந்த குமாரிலபட்டர் 'ஆந்திர-திராவிட பாஷா' என்ற தொடரைக் கையாண்டுள்ளார். இதில் தமிழ் மொழியைத் திராவிட என்று குறித்துள்ளார். மனுஸ்மிருதியில் பார்ப்பனர்களிடமிருந்து பிரிந்த இனங்களைக் கூறும்போது திராவிடர், காம்போஜர், யவனர் என்று குறிக்கப்பட்டுளது. இதில் திராவிடர் எனும் சொல் தென்னிந்தியமக்களைக் குறிக்கக் காணலாம். பாகவத புராணம் சத்தியவிரதர் என்பவரைக் குறிக்கும்போது 'திராவிடமன்னர்' என்று குறிக்கிறது. இவ்வாறு வடநாட்டு அறிஞர் பலரும் திராவிடம் எனும் சொல்லைக் கையாண்டிருப்பதால் தமிழ் உள்ளிட்ட மொழிக் குழுவைக் குறிக்கத் திராவிடம் என்ற சொல்லை மேற்கொண்டதாக அவர் விளக்குகிறார்.

கி.பி.முதல் நூற்றாண்டில் பஞ்சதிராவிட என்ற சொல் வழக்கு காணப்படுகிறது என்று கூறும் திரு. சட்டர்ஜி திரமிட, திரவிட, திராவிட என்னும் மூன்று சொற்கள் வழங்கப்படுவதை விளக்குகிறார். தமிழை மட்டும் குறிக்கவும் தமிழ் உள்ளிட்ட மொழிக்குழுவைக் குறிக்கவும் என இருபொருளில் இச்சொற்கள் வழங்கின. இன்று மொழிக் குழுவைக் குறிக்கவே அச்சொல் வழங்குகிறது என அவர் விளக்குவார். *

தமிழ் என்ற சொல்லே இங்ஙனம் மாறி வந்திருக்க வேண்டும் என்பார் டாக்டர் மு.வ.

திராவிடம் என்பது இன்று தென்னிந்தியா அளவில் நின்றுவிடாமல் இந்தியா முழுவதிலும் வழங்கும் திராவிடமொழி இனத்தைக் குறிக்க வழங்கப்படுகிறது.

---

* Dravidian-SunitKumar Chatterji.

Koviloor Digital Library

திராவிட மொழிகள்

மக்கள் பேசும் ஆற்றலைப் பெற்றபோது அனைவரும் ஓரிடத்தில் கூடி வாழவில்லை. பல்வேறு நாடுகளாக, இனங்களாகப் பிரிந்து வாழ்ந்தனர். எனவே மக்கள் மொழி என உலகப்பொது மொழி உருவாகாமல் பல்வேறு மொழிகள் தோன்றின.

அன்னமி, சித்தியம், துரானியம், ஐரோப்பிய மொழிகள், செமிட்டிக்இனம், உலாப்இனம் என்று உலகில் பல்வேறு மொழி இனங்கள் காணப்படுகின்றன.

இந்தியாவில் 1) அஸ்டிரிக் 2) திராவிடம் 3) சீனதிபெத் 4) இந்தோஆரியம் என நான்கு இன மொழிகள் பேசப்படுகின்றன என்பார் திரு. சட்டர்ஜி. ஆயினும் இன்றைய நிலையில் இந்திய மொழிகளை,

1) திராவிடமொழிகள்
2) ஆரிய திராவிடமொழிகள்
3) ஆரியமொழிகள்

என மூன்றாகப் பகுக்கலாம் என்பார் டாக்டர் அகத்தியலிங்கம்.

இந்தியாவில் உள்ள மொழிகள் அனைத்தும் சமஸ்கிருதத்திலிருந்து தோன்றியவையே எனும் கருத்து நெடுநாளாக இருந்து வந்தது. 19 ஆம் நூற்றாண்டில் வில்லியம் கேரி (William Carey) என்பார் தமிழ், தெலுங்கு முதலிய தென்னிந்திய மொழிகள் வடமொழிகளிலிருந்து வேறுபட்டவை என்று கருதினார். அடுத்து மாக்ஸ்முல்லர் திராவிடமொழிகளைத் தனி இனமாக முதன் முதலில் பிரித்துக் கூறினார். 1856 இல் கால்டுவெல் 'தென்னிந்திய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' எனும் நூலை எழுதினார். அதற்குப் பிறகே திராவிடமொழி இனம் அங்கீகரிக்கப்பட்டு உறுதியாக்கப்பட்டது.

திராவிட மொழிகளைக் கால்டுவெல்,

1) திருந்தியவை 2) திருந்தாதவை என இரண்டாகப் பிரித்தார்.

Koviloor Digital Library

I திருந்திய மொழிகள்

1) தமிழ்	4) கன்னடம்
2) மலையாளம்	5) துளு
3) தெலுங்கு	6) குடகு

II திருந்தா மொழிகள்

1] துதம்	4] கந்தம் அல்லது கூ
2] கோதம்	5] ஒரோவன்
3] கோண்டு	6] இராஜ்மகால்

இப்பன்னிரண்டு மொழிகளையே கால்டுவெல் முதன் முதலாக ஓரினப்படுத்தி உரைத்தார்.

திருந்தாத் திராவிடமொழி பற்றிய ஆய்வு தொடர்ந்தது. மக்கட் தொகைக் கணக்கெடுப்பின் போது புதிய மொழிகள் பல புலனாயின. இந்தியமொழி பற்றிய கணக்கெடுப்பு (Linguistic Survey of India) வெளியிட்ட அறிக்கைக் குறிப்புக்கள் பல புதிய மொழிகளை அறிமுகப்படுத்தின. கொலாமி, நாய்கி, குவி முதலிய புதிய மொழிகள் திராவிட மொழிக்குழுவில் சேர்க்கப் பட்டன.

திரு இராமசாமி ஐயர் அவர்கள் திருந்தாத திராவிட மொழி ஆய்வில் கவனம் செலுத்தினார். அடுத்து பிளாக், பர்ரோ ஆகியோரது முயற்சி குறிக்கத்தக்கது. இருபதாம் நூற்றாண்டின் நாற்பதுகளில் திராவிடமொழிகள் மூன்றாகப் பகுக்கப்பட்டன.

1) தென் திராவிட மொழிகள்
2) நடு திராவிட மொழிகள்
3) வட திராவிட மொழிகள்

கால்டுவெல் தென்னிந்திய மொழிகளாகத் திராவிடமொழி யினைக் கருதினார். ஆயின் அது இந்தியா முழுதிலும் பரவிய இந்திய மொழிக்குழுவாகக் கருதப்பட்டது.

பர்ரோ, பட்டாச்சார்யா ஆகியோரது நல்லாய்வின் பயனாககோண்டி, பெங்கோ, மண்டா, பார்ஜி முதலிய பல மொழிகள் அறிமுகமாயின. இவ்வாறு இருபத்தோரு மொழிகள் திராவிட மொழிகளாகக் கூறப்பட்டன.

Koviloor Digital Library

1857

A. தென் திராவிட மொழிகள்

1) தமிழ்
2) மலையாளம்
3) கன்னடம்
4) துளு
5) குடகு
6) தோடா
7) கோடா
8) தெலுங்கு

B. நடு திராவிட மொழிகள்

I கொலாமிபார்ஜி குழு

1) கொலாமி
2) நாய்கி
3) பார்ஜி
4) கத்பா

II கோண்டி—குவிகுழு

1) கோண்டி
2) பெங்கோ
3) மண்டா
4) கொண்டா
2) குவி
6) கூய்

C. வடதிராவிட மொழிகள்

I வடகிழக்குக்குழு

1) குருக்
2) மால்டோ

II வடமேற்குக் குழு — பிராகூய்

பர்ரோ, எமனோ ஆகியோர் 1961இல் தொகுத்த திராவிடச் சொல் அகராதி (A Dravidian Etymological Diotionary) மேலும் திராவிட மொழிகளை ஆராயப்பயன் பட்டது.

நடு ~~இந்திய~~த் திராவிட மொழிகள் பல தனி இயல்புகளைக் கொண்டுள்ளமை ஈண்டு உரைத்தக்கது,

1) பெண்பால் எனும் தனிப்பாகுபாடு தென்திராவிட மொழிகளில் மட்டுமே உளது. நடு திராவிட மொழிகளில் ஆண், ஆணல்லாதவை எனும் பகுப்பே ஒருமையிலும் பன்மையிலும் காணப்படுகிறது. மூலதிராவிட இயல்பும் அதுவே ஆகும்.

2) புதிய பெண்பால் விரவுப்பெயர்கள் காணப்படுகின்றன. பிற திராவிடமொழிகளில் இல்லாத அடிச்சொல்லோடு ஆள் விகுதியை இணைத்து அச் சொற்கள் அமைந்துள.

3) தென்திராவிட மொழிகளில் அஃறிணையில் பன்மை விகுதி இணையவேண்டுமெனும் கட்டாயம் இல்லை. ஆனல் நடு திராவிட, வடதிராவிட மொழிகளில் அஃறிணையில் பன்மை விகுதி இணைந்தே வரும். மூலதிராவிட இயல்பும் அதுவே.

Koviloor Digital Library

4) வேற்றுமை ஏற்கும் மூவிடப்பெயர்கள் முதல் மெய்களாகிய ய, ந ஆகியவற்றை இழந்து அன், அம், இன், இம் என்றே நடுதிராவிட மொழிகளில் வரும்.

5) நடுதிராவிட மொழிகளில் படர்க்கை ஆண்பால் வடிவமாக அவன்த் என்பது காணப்படுகிறது. தென்திராவிட மொழிகளில் 'அவன்' என்றே உளது. ஆண் அல்லாப் பால்விகுதியாக 'த்' சேர்க்கப்பட்டிருக்கலாம்.

6) நடுஇந்திய திராவிட மொழிகளில் இறந்தகால வினையெச்சத்திற்கு விகுதி சேர்ப்பதும் அவ்விகுதிகளாக சி, இ இருப்பதும் தனி இயல்புகளாம்.

7) காலஇடைநிலைக்கு முன் எதிர்மறை இடைநிலை சேர்ந்து அமையும் வினையமைப்பு தனி இயல்பாக உளது.

8) எதிர்மறை வினையெச்ச விகுதியாக அக [aka] என்பதை தெலுங்கு, கோண்டி, பார்ஜி கொண்டுளது தனி இயல்பாகும்.

9) நடுதிராவிட மொழிகள் சில சொற்களுக்குப் பொருள் கூறுவதில் ஒற்றுமை காணப்படுகிறது.

10) சில அடிச்சொற்கள் நடுதிராவிட மொழிகளில் மட்டுமே காணப்படும்.

மேற்கூறிய தனி இயல்புகளைக் கூறும் திரு. P. S. சுப்பிரமணியம் அவர்கள்* ஆந்திரப்பிரதேசம், ஒரிஸா, மகாராஸ்டிரா, மத்தியப்பிரதேசம் ஆகிய பகுதிகளில் பேசப்படும் கொலாமி, நாய்கி, பார்ஜி, கதபா, தெலுங்கு, கோண்டி, கொண்டா, கூய், குவி ஆகிய ஒன்பது மொழிகளை நடுதிராவிட மொழிகளாகப் பகுப்பர்.

திரு பட்டாச்சார்யா அவர்கள் மேலும் சில தனிஇயல்புகளை விளக்குவார். அவர் தெலுங்கு மொழியைத் தென்திராவிட மொழியாகவே கொண்டு விளக்குகிறார்.

நடுதிராவிட மொழிகளில் மொழிமுதல் ககரம் சகரமாவதில்லை. மொழியிடை ககரம் ஜ, வ, ய என மாறும். ளகரம் நடுதிராவிட மொழிகளில் காணப்படவில்லை. அது லகரமாகவோ டகரமாகவோ மாறிவிடுகிறது. சகரம் (C) நடுதிராவிட மொழி

* Dravidian Linguistics. P. 107—134

Koviloor Digital Library

களில் S, h எனமாறும். மெய்யிரட்டித்து ஒலித்தல் தென்திராவிட மொழிகளில் இருப்பதுபோல் நடுதிராவிட மொழிகளில் மிகுதியாக இல்லை.

இவ்வாறு பல தனி இயல்புகளைக் கொண்டுள்ளபோதிலும் நடுதிராவிட மொழிகள் திராவிடமொழியின் அடிப்படைக் கூறுகளில் ஒன்றுபட்டுள்ள தன்மையைத் திரு பட்டாச்சார்யா விளக்குகிறார். நெடில் உயிர் தனி ஒலியனாகக் கருதப்படுதல், சந்தியக்கரம் காணப்படாமை, யகர வகர உடம்படுமெய் வருதல், திராவிடவேர்ச்சொற்கள் மாறாமல் உள்ளமை, இருமை எனும் எண் பகுப்பு இல்லாமை ஆகிய இயல்புகள் அம்மொழிகளை வடமொழியிலிருந்து வேறுபடுத்தித் திராவிட மொழிக் குழுவில் சேர்க்கின்றன என அவர் விளக்குகிறார்.

திராவிடமொழிகள் மொத்தம் 23 என்று டாக்டர் அகத்திய லிங்கம் அவர்கள் பகுத்துக் கூறுகிறார்.

திராவிடமொழிகள்

தென் திராவிடம்	நடுதிராவிடம்	வடதிராவிடம்
1] தமிழ்	1] தெலுங்கு	1] குரூக்
2] மலையாளம்	2] கோண்டி	2] மால்தோ
3] கன்னடம்	3] கோயா	3] பிராகூயி
4] கோத்தா	4] கொண்டா	
5] தோடா	5] பெங்கோ	
6] துளு	6] மண்டா	
7] குடகு	7] கூய்	
8] கொரகா	8] கூவி	
	9] நோலாமி	
	10] நாயக்கி	
	11] பர்ஜி	
	12] கதபா	

[தமிழகப் பழங்குடி மக்கள்—முன்னுரை]

Koviloor Digital Library

1. தமிழ்

'திராவிடமொழிகளுள் மிகவும் தொன்மை வாய்ந்த திருந்திய மொழி தமிழேயாம். அது சொல்வளம் மிகுந்தது. பண்டைச் சொல் இலக்கணத் தொல் வடிவங்களில் பெரும்பாலானவற்றை இகவாது கொண்டு மிளிர்வது. இதனுலேயே தமிழுக்குத் தலைமையிடம் அளிக்கப்படுகிறது' என்று கூறுவார் டாக்டர் கால்டுவெல்.

'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்' என்று கூறப்பட்டாலும் இன்று உலகின் பல பாகங்களிலும் தமிழ் பேசப் படுகிறது.

தமிழ்நாடு, இலங்கையின் வடகிழக்குப் பகுதி, மலேசியா, சிங்கப்பூர், பர்மா, இந்தோனேசியா, இந்தோசீனு, நடு, தென் ஆப்பிரிக்கா, பிரிட்டிஷ்கயானு, பிஜி, மொரீசியஸ், மடகாஸ்கர், திரிணிடாட், மார்டினிக் ஆகிய பகுதிகளில் தமிழ் பேசப்படுகிறது.

பேசுவோர் தொகை 3,05,60,000. கி.மு. 7ஆம்நூற்ருண்டைச்சார்ந்த தொல்காப்பியம் இதன் மிகப்பழைய நூலாகும்.

2. தெலுங்கு

தமிழ் நாட்டின் வடக்கே உள்ள ஆந்திர நாட்டின் மொழி இது. ஆந்திர பிரதேசத்திலும் கிழக்கு ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளிலும் இம்மொழி பேசப்படுகிறது.

பேசுவோர் தொகை மூன்றே முக்கால் கோடி ஆவர் [3,76,70,000] கி. பி. 575 ஆம் ஆண்டுக் கல்வெட்டுமுதல் எழுத்துச் சான்ருகும். 11ஆம் நூற்ருண்டுமுதல் இலக்கியங்கள் காணப்படுகின்றன. தேன் போன்ற இனிமை உடைய மொழி எனும் பொருளில் தெனுகு> தெலுகு> தெலுங்கு என்று பெயர் பெற்றிருக்கலாம் என்பர். மூன்று கலிங்கநாடுகள் சேர்ந்து திரிகலிங்கம் என்று பெயர் பெற்றுக் காலப்போக்கில் தெலுங்கு என்ருயிற்று என்றும் திரிலிங்கம் என்பதே தெலுங்கு என்ருயிற்று என்றும் கூறுவர்.

நன்னயர் எழுதிய 'மகாபாரதமு' முதல் தெலுங்குஇலக்கியமாகும். இதன் எழுத்துமுறை தேவநாகரி முறையை ஒட்டி அமைந்ததாகும். வடமொழிக்கலப்பு மிகுந்த மொழி இதுவே.

Koviloor Digital Library

3. கன்னடம்

மைசூர் மாநிலத்தில் இம்மொழி பேசப்படுகிறது. பேசுவோர் தொகை 1,74,20,000. நீலகிரியில் உள்ள படகர் பேசுவது பழைய கன்னடமாகும். மதுரை மாவட்டத்தில் கம்பம், கூடலூர் பகுதியில் இம்மொழி பேசுவோர் உளர்.

கர்நாடகம் என்பது திரிந்து கன்னடம் என்று ஆயிற்று என்றும், அது வடசொல் என்றும் சிலர் கூறுவர். டாக்டர் குண்டர்ட் என்பார் கரு+நாடு+அகம் என்ற தமிழ்ச்சொல்லின் திரிபே கன்னடம் என்று கூறுவார். கன்னடம் பழைய கன்னடம் [ஹள கன்னடம்] புதுக் கன்னடம் [ஹொச கன்னடம்] என இருவகைப்படும். இதன் எழுத்துமுறை தெலுங்கை ஒட்டி அமைந்ததாகும். கன்னடமும் தெலுங்குமே வடமொழிச் சொற்களை மிகுதியாகப் பெற்றுள்ளன. இம்மொழியில் கி.பி.450 முதல் கல்வெட்டுச்சான்று காணப்படுகிறது. கி.பி. 9 ஆம் நூற்றாண்டு முதல் இலக்கியங்கள் தோன்றின.

4. மலையாளம்

தமிழ்நாட்டின் மேற்குப் பகுதியாகிய சேரநாடே இன்றைய மலையாள நாடாகும். இதனைத் தமிழோடு ஒத்த இன மொழி என்று கொள்வதைவிடத் தமிழின் கிளைமொழி என்று கொள்வது பொருந்தும் என்று கால்டுவெல் கருதுகிறார். சில நூற்றாண்டுகளுக்கு முன் சேரநாட்டில் தமிழே பேச்சு மொழியாகவும் இலக்கியமொழியாகவும் இருந்துவந்தது. சேரநாட்டுத் தமிழே இலக்கியத் தொடர்பு குறைந்தமையாலும் சோழ பாண்டிய நாட்டுத் தமிழோடு உறவு குறைந்தமையாலும் வடமொழிச் சார்பு மிகுந்தமையாலும் மிகமிகத் திரிபுற்று வேறொரு மொழியாக உருப்பெற்று மலையாளம் என்று பெயர் பெற்றது.

இம்மொழி பேசுவோர் 1,70,20,000. 9 ஆம் நூற்றாண்டு முதல் கல்வெட்டுக்கள் உள. 12 ஆம் நூற்றாண்டு முதல் இலக்கியங்கள் தோன்றின. அதற்கு முன்பாகப் பிராமணிப் பாட்டு, சாஸ்தாப்பாட்டு, ஓணப்பாட்டு, திருவாதிரைப்பாட்டு போன்ற பாட்டு வகைகள் தோன்றின. பெரும்பாலும் இவை தமிழ்ப் பாடல்களாக இருப்பினும் புதுமொழியின் அம்சங்கள் கலந்துள்

Koviloor Digital Library
15236 894.811 L5

ளன. இராமசரிதமே மலையாளத்தில் எழுந்த முதல் சரிதமாகும். இதிலும் தமிழின் செல்வாக்கு மிகுதியாகக் காணப்படுகிறது.

பழைய மலையாள இலக்கியத்தில் தமிழ் எழுத்துக்களே மிகுதியாக உள்ளன. கிரந்த எழுத்தை ஒட்டி மலையாளத்திற்கு எழுத்துக்கள் அமைந்தன. ஆதலால் வடமொழி அளவின்றிக் கலந்தது.

வினைச்சொல்லில் பால் காட்டும் ஈறுகள் இணையாமலிருப்பது இம்மொழியின் தனி இயல்பாக அமைந்துளது.

தமிழின் கிளைமொழியாகக் மலையாளத்தை கால்டுவெல் கூறுகிறார். பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை தமிழிலிருந்தே மலையாளம் தோன்றியது என்று விளக்குகிறார். டாக்டர் குண்டர்ட் போன்றோர் இக்கருத்தை ஏற்கவில்லை. மலையாள இலக்கிய வரலாற்றினை எழுதிய P.K. பரமேசுவரன் நாயர் திராவிடமொழியிலிருந்து தெலுங்கு, கன்னடம் தோன்றியது போலவே மலையாளமும் நேரடியாகத் தோன்றியது. அது தமிழினின்றும் தோன்றிய கிளைமொழி அல்ல. தமிழுக்கும் மலையாளத்திற்கும் அமைந்துள்ள ஒற்றுமைக்குக் காரணம் வரலாற்று முறையிலும் நிலஅமைப்பு முறையிலும் உள்ள தொடர்பேயாகும் என்று விளக்குகிறார். *

மலையாளத்தில் தெக்கம் (தெற்கு) வடக்கம் (வடக்கு) என்ற இருமொழிப் பிரிவுகள் உள்ளதாகக் கூறுவர்.

5. துளு

தென் கன்னடக் கடற்கரைப் பகுதியிலும், காசர்கோடு தாலுகாவாகிய கேரளாவின் வடக்கு முனையிலும் பேசப்படுகிறது. பேசுவோர் தொகை 9,40,000. இதனைத் திருந்திய மொழி எனக் கால்டுவெல் கருதுகிறார். இலக்கியவளம் இம்மொழியில் இல்லாவிட்டாலும் இம்மொழி பேசுவோர் நாகரிகம் மிக்கவர்களாகவே காணப்படுகின்றனர். பிரிகேல் என்பார் இதற்கு இலக்கணம் எழுதியுள்ளார். (A Grammar of Tulu Language—Brigel—1872)

* History of Malayalam Literature.—P. 5.

 Koviloor Digital Library

துளு என்பதற்கு மென்மை அல்லது பணிவு என்பது பொருள் என்பர். ''தோகைக் காவின் துளு நாடன்ன'' என்று அகநானூற்றில் துளுநாடு பற்றிய குறிப்பு உளது.

இதற்கெனத் தனிஎழுத்துக்கள் இல்லை. மலையாள எழுத்துக்களைச் சற்று மாற்றி எழுதி வந்தனர். 1842 இல் பேசில் மிஷனைச் சார்ந்த பாதிரியார்கள் கன்னட எழுத்துக்களில் சில நூல்களை அச்சிட்டனர்.

6. குடகு

இம்மொழி பேசும் மக்கள் மேற்குமலைச்சரிவுகளில் அமைந்துள்ள ஊர்களில் வாழ்கின்றனர். மைசூர், வடமலபார், தென் கன்னடம் ஆகியவற்றை எல்லையாகக் கொண்டுள்ள பகுதிகளில் இம்மொழி வழங்கப்படுகிறது. கூர்க் என அப்பகுதி வழங்கப்படுகிறது.

மேற்கு எனும் பொருளுடைய குட என்னும் தமிழ்ச்சொல்லிலிருந்து குடகு எனும் சொல் தோன்றியிருக்கலாம்.

இதற்கு இலக்கிய வளமும் எழுத்து முறையும் இல்லை. டாக்டர் மோக்லிங் இதனை ஆய்ந்துள்ளார். இது கன்னடம் பேசும் நாட்டை அடுத்திருந்த போதிலும் தமிழ், மலையாளத்தோடு உறவு கொண்டிருந்தது என்கிறார் அவர். இது பழங்கன்னடத்திற்கும் துளுவிற்கும் இடைப்பட்டதெனத் தோன்றுவதாகக் கால்டுவெல் குறிக்கிறார். இம்மொழியின் இலக்கணம் ஒன்றும் சில பாட்டுக்களும் மேஜர் கோல் (Major Cole) என்பாரால் வெளியிடப்பட்டுள. [An Elementary Grammar of the Coorg Language—Cole. R. A. 1867] இதனைப் பேசுவோர் தொகை 80,000.

7. தோடா (Toda)

நீலகிரியில் வாழும் துதவர்களால் இம்மொழி பேசப்படுகிறது. பேசுவோர் தொகை 800.

தொதுவன் என்பது கூட்டத்தான் என்று பொருள்படும். தோழன் என்ற தமிழ்ச்சொல்லோடு தொடர்புடையது என்பார் டாக்டர் போப். கால்டுவெல் அதனை ஏற்கவில்லை.

Koviloor Digital Library

இதன் இலக்கணத்தைப் போப் ஆய்ந்துள்ளார். [A Brief Outline of the Tuda Language—G. U. Pope]

திரு எமனோ அவர்கள் தோடா மொழியினை விரிவாக ஆராய்ந்துள்ளார். [Collected Papers.—M. B. Emeneau]

8. கோதம் (Kota)

இம்மொழியும் நீலகிரி மாவட்டத்தில் பேசப்படுகின்றது. புலால் உண்ணாத ஆயர் இனத்தவர்கள் இவர்கள். எருமையே இவர்கள் வாழ்க்கையின் மையமாக உளது.

இவர்களிடையே கருத்தாழம் மிக்க வாய்மொழிப் பாடல்கள் பல உள்ளன.

இப்மொழி பேசுவோர் 900. திரு. எமனோ இம்மொழி இலக்கணத்தையும் பாடல்களையும் ஆய்ந்துள்ளார்.

9. கோண்டி (Gondi)

ஆந்திர மாநிலத்தில் அடிலாபாத் மாவட்டம், மத்தியப் பிரதேச மாநிலத்தில் சிந்துவாரா, பெதுல், பாஸ்டர், சந்தா, பாலகாட், நாக்பூர், வார்தா, யோட்மால், பந்தரா முதலிய மாவட்டங்கள் ஆகிய பகுதிகளில் இம்மொழி பேசப்படுகிறது.

இப்மொழி பேசுவோர் 15,00,000.

இம்மொழி பேசுவோர் ஆங்காங்கு பரந்து வாழ்கின்ற காரணத்தினால் இம்மொழியில் பல்வேறு கிளைமொழிகள் தோன்றியுள்ளன.

கோண்டி மொழி இலக்கணத்தைத் திரு. P. S. சுப்பிரமணியம் ஆய்ந்துள்ளார். [A Descriptive Grammar of Gondi—P. S. Subramanian]

கோண்டி மொழியின் கிளைமொழியான மரியர் மொழி இலக்கணத்தை மிட்செல்என்பார் எழுதியுள்ளார். [A Grammar of Mari-Gondi—Mitchell.] ட்ரென்ச் என்பார் இம்மொழியை ஆய்ந்துள்ளார். [Gondi—Trench. 1919&1921]

10. கோயா (Koya)

கோண்டியின் கிளைமொழியாக இது கருதப்பட்டது. டாக்டர் அகத்தியலிங்கம் இதனைத் தனி மொழியாகக் கருது

Koviloor Digital Library

கிறார். இது கம்மம் மாவட்டத்தில் பத்ராசலம் அருகே பேசப்படு கிறது.

11. கொண்டா (Konda or Ku:bi)

விசாகப்பட்டினப் பகுதிகளிலும் கோராபுட் மாவட்டங் களிலும் இம்மொழி பேசப்படுகிறது. 1951 இல் இம்மொழி யினைத் திரு. பட்டாச்சாரியா கண்டறிந்தார். பேசுவோர் தொகை 13,000. திரு. கிருட்டிணமூர்த்தி இம்மொழியை ஆய்ந்துள்ளார். [Konda or Ku:bi, A Dravidian Language- BH. Krishnamurthy-1969]

12. பெங்கோ (Pengo)

கோராபுட் மாவட்டத்தில் இம்மொழி பேசப்படுகிறது. பேசுவோர் தொகை 1,300. 1957,58இல் நடந்த கணக்கெடுப் பின்போது பர்ரோ, பட்டாச்சார்யா இருவரும் இதனைக் கண்டறிந்தனர். [The Pengo Language, Burrow, T. S. Battacharya-1970]

13. மண்டா [Manda]

கோராபுத், கலகண்டி மாவட்ட எல்லைகளில் இம்மொழி பேசப்படுகிறது. 1964இல் பர்ரோ, பட்டாச்சார்யா இருவரும் இதனைக்கண்டறிந்தனர்.

14. கூய் [Kui]

ஒரிசா மாநிலத்தில் புல்பனி [Pulbani] கஞ்சம் மாவட் டங்களிலும் கோந்த்மால் அருகேயும் இம்மொழி பேசப்படு கிறது. பேசுவோர் தொகை 5,10,000. இதனைக் கந்தம் என்றும் கூறுவர்.

வின்பீல்ட் இம்மொழி இலக்கணத்தை எழுதியுள்ளார். [A Grammar of the Kui Language— W.W. Winfield 1928] பர்ரோ, பட்டாச்சார்யா இருவரும் இதனை ஆய்ந் துளர்.

15. குவி [Kuvi]

கஞ்சம், கலகண்டி, கோராபுட் மாவட்டஙகளிலும் ஆந்தி ராவில் உள்ள விசாகப்பட்டின மாவட்டத்திலும் இம்மொழி பேசப்படுகிறது. பேசுவோர் தொகை 1,00,000. இதன்

Koviloor Digital Library

15205

இலக்கணத்தை ஸ்குல்சு என்பார் எழுதியுள்ளார். [A grammar of the Kuvi Language — F.V.P. Schulze. 1911]

16. கொலாமி [Kolami]

ஆந்திரப்பிரதேச அடிலாபாத் மாவட்டம், மத்தியப்பிரதேச யோட்மால், வார்தா மாவட்டங்களில் இம்மொழி பேசப்படுகிறது. பேசுவோர் தொகை 50,000.

எமனோ இம்மொழி பற்றி நூல் எழுதியுள்ளார். [Kolami, A Dravidian Language — M.B. Emeneau. 1955]

17. நாய்கி [Naiki]

சந்தா மாவட்டத்தில் இம்மொழி பேசப்படுகிறது. பேசுவோர் தொகை 1,500.

இம்மொழி பற்றி பட்டாச்சார்யா எழுதியுளார். [Naiki of Chanda Bhatta Charya-1961]

13. பார்ஜி [Pargi]

மத்தியப்பிரதேசத்து பாஸ்டர் மாவட்டத்தில் 20,000 பேர் இம்மொழி பேசுகின்றனர். முதலில் கோண்டியின் கிளைமொழியாகக் கருதப்பட்டு, பின்னர் தனிமொழியாகக் கருதப்பட்டது.

பர்ரோ, பட்டாச்சாரியா 1953இல் இதுபற்றி எழுதியுள்ளனர்.

இம்மொழி பேசுவோர் உழவர். வடமொழிச் சொல்லாகிய பிரசா (மக்கள்) என்பதிலிருந்து இப்பெயர் வந்ததென்பர். இதில் நான்கு கிளைமொழிகள் இருப்பதாகக் கூறுவர். இம்மொழி பற்றி திரு. R. சண்முகம் ஒரு கட்டுரை எழுதியுளார். [Phonology and Noun Morphology of Parji - R. Shanmugam - Dravidian Linguistics - P. 177.]

19. கத்பா [Gadba]

சிரிகாகுலம், கோராபுட் பகுதியில் இம்மொழி பேசப்படுகிறது. பேசுவோர் 8,000. ஒல்லாரி, சாலூர் இரண்டும் இதன் கிளைமொழிகள் என்பர். திரு. பட்டாச்சாரியா ஒல்லாரி பற்றி எழுதியுளார். [Ollari, A Dravidian Speech. 1957]

20. கொரகா

தென்திராவிட மொழிகளுள் ஒன்று. அண்மையில் இது

Koviloor Digital Library

கண்டுபிடிக்கப்பட்டது.

21. குருக் அல்லது ஒரோவன் [Kurukh]

பீகார் மாநிலத்தைச் சேர்ந்த பகல்பூர், சோடா நாகப்பூர் பகுதிகளிலும் ஒரிஸ்ஸா மாநிலத்தில் சுந்தரகர், சம்பல்பூர் மாவட்டங்களிலும் மத்தியப் பிரதேசத்தில் ராயகர், சர்குசா மாவட்டங்களிலும் இம்மொழி பேசப்படுகிறது. இம்மொழி பேசுவோர் 11,41,804 பேர்.

ஆன் என்பார் இதன் இலக்கணத்தை எழுதி உள்ளார். [Kurukh Grammar - F. Hahn. - I900]

மால்டோ மொழியினரும் இவர்களும் ஓரின மக்களாகப் பாட்னு மாவட்டத்தில் வாழ்ந்து வந்தனர். பிறகு அங்கிருந்து விரட்டப்பட்டு ஒரு பகுதியினர் ராஜ் மகால் குன்றுகளிலும் மற்ருெரு பிரிவினர் சோடாநாகபுரிப் பகுதியிலும் குடியேறினர். இன்றும் இவர்களிடையே பழக்கங்கள் ஒற்றுமையுடையனவாக உள.

22. மால்டோ-இராஜ்மகால் (Malto)

பீகாரில் இராஜ்மகாலி குன்றுகளில் வாழும் 90,000 பேர் இம்மொழி பேசுகின்றனர்.

இம்மொழியை டுரோஸ் என்பார் ஆய்ந்துள்ளார். [Introduction to the Malto Language- E. Droese. 1884]

23. பிராகூய் (Brahui)

மேற்குப் பாகிஸ்தானிலும் பலுசிஸ்தானத்திலும் இம் மொழி பேசப்படுகிறது. பேசுவோர் தொகை 3,00,000. கால்டுவெல் இதனைச் சேர்க்காமல் விடப் பின்வந்தோர் திராவிடமொழிகளுள் ஒன்ருகச் சேர்த்தனர்.

பிரே என்பாரும் எமனே என்பாரும் இம்மொழிபற்றி ஆய்ந்துள்ளனர். [The Brahui Language - Bray, D. S. 1909. Brahui and Dravidian Comparative Grammar - 1962]

நீலகிரி மலையில் வாழும் மக்கள் பேசும் படகா, குருபா ஆகிய மொழிகளும் திராவிடக்குழுவில் சேர்க்கப்பட்டுள்ளன.

24. குரும்பர் மொழி

நெடுநாளாகக் கிளைமொழியாகவே இது கருதப்பட்டது

Koviloor Digital Library

இவர்கள் தொகை 9,000. மைசூர், கேரள, தமிழ் நாட்டு எல்லை மலைப்பகுதிகளில் இவர்கள் வாழுகின்றனர்.

கன்னடத்தின் கிளைமொழியாக இது கருதப்பட்டது. ஆயின் திரு. உபாத்யாய இதனைத் தனித் திராவிடமொழி என நிறுவுகிறார். [Kurubа - A Dravidian Language - U. P Upadhyaya, Third Seminar on Dravidian Linguistics. —P. 307]

25. படகர்மொழி [Badaga]

நீலகிரி மலையில் பேசப்படுகிறது. பேசுவோர் தொகை 85,000.

இவ்வாறு இதுவரை 25 மொழிகள் திராவிட இனத்தைச் சேர்ந்தனவாகக் கூறப்படுகின்றன. கிளைமொழிகள் பல காலப் போக்கில் தனிமொழியாகக் கருதப்படுவதால் இம் மொழிகளின் எண்ணிக்கை நாளடைவில் அதிகமாகக் கூடும்.

I ஒலியன் இயல்.

உண்ணுதற்குப் படைக்கப்பட்ட வாய்முதலியஉறுப்புக்களை மனிதன் ஒலிக்கப் பயன் படுத்திக் கொண்டான். வாயிலிருந்து எழுப்பப்படும் ஒலிகளுக்கு ஓர் உருவம் கொடுத்து அவற்றிற்குப் பொருள் கற்பித்து மொழியை உருவாக்கினான்.

மொழிக்கு அடிப்படை ஒலிகள் ஆகும். மனிதன் வாயிலிருந்து பிறக்கும் அனைத்து ஒலிகளும் மொழிக்குப் பயன்படா. குறிப்பிட்ட சில ஒலிகளே மொழிக்குப் பயன்படும்.

ஒரு மொழியின் அடிப்படையான ஒலிகளுக்கு — முதல் ஒலிகளுக்கு 'ஒலியன்' (Phoneme) என்று பெயர். மிகக் குறைந்த, பொருள் வேறுபாட்டிற்குக் காரணமாகும் ஒலி அல்லது ஒலிகளின் குழு ஒலியன் எனப்படும். வடிவங்கள் ஒத்துப் பொருளை வேறுபடுத்தாத சில ஒலிகள் இருக்கும். அவை குறிப்பிட்ட இடத்தில் மட்டுமே வரல் வேண்டுமெனும் வரையறை காணப்படும். அத்தகைய ஒலி மாற்றொலிகள் Allophone) எனப்படும். உருவமொத்த மாற்றொலிகள் ஒரு குழுவாக இணைந்து ஓர் ஒலியனாகும்.

Koviloor Digital Library

(எ-டு)	மணம் மணல்		ம், ல் - பொருள் வேறுபடுத்துவதால் அவை ஒலியன்கள் எனப்படும்.
	பகல்	(h)	h, k, g முதலியவை மாற்றொலி களாகக் கருதப்பட்டு 'க' — ஒலியன் எனப்படும்.
	பக்கம்	(k)	
	பங்கு	(g)	

நுரையீரலிலிருந்து வெளிப்படும் மூச்சுக் காற்று குரல்வளையில் உள்ள தசைநார்களின் அதிர்ச்சியாலும் பல், அண்ணம், இதழ், நா முதலிய உறுப்புக்களின் அசைவாலும் மூக்குவழியாகக் காற்றை வெளிப்படுத்தலாலும் உருவங்கள் மாறி ஒலிகளாகப் பிறக்கின்றன.

அவ்வாறு பிறக்கும் மொழிக்கு அடிப்படையான ஒலிகள் இருவகையாகப் பகுக்கப்படும். வாயில் தடையின்றி உயிர்ப் பளவாக ஒலிக்கப்படும் ஒலி உயிர் என்றும் மெய் உறுப்புக்களால் தடைப்பட்டு ஒலிக்கப்படும் ஒலி மெய் என்றும் பிரிக்கப்படும்.

1. திராவிட மொழியில் உள்ள உயிர் ஒலியன்கள்

மூல திராவிட உயிர் ஒலியன்களாகப் பத்து கூறப்படும்.

இ	ஈ	உ	ஊ
எ	ஏ	ஒ	ஓ

அ ஆ

அ (*a) — இவ்வொலி திராவிடமொழிகள் அனைத்திலும் உளது. தோடாவில் ஒ என்றும் பார்ஜியில் சில இடங்களில் எ என்றும் இருளர் மொழியில் Ö என்றும் ஒலிக்கப்படும். அங்ஙனம் மாறி ஒலிக்கக் குறிப்பிட்ட வரையறையினைக் கூற இயலவில்லை.

ஆ (*a:) — திராவிடமொழிகள் அனைத்திலும் உளது. தோடாவில் ஓ என்றும் பார்ஜியில் ஏ என்றும் ஒலிக்கப்படுகிறது.

இ (*i) — அனைத்துத்திராவிட மொழிகளிலும் காணப் படுகிறது. இகரமும் எகரமும் தொடர்புடையனவாக உள்ளன.

ஈ (*i:) — எல்லா மொழிகளும் இதனைக் கொண்டுள.

உ (*u) — எல்லா மொழிகளிலும் உளது. தோடா w!,wa என்னும் ஒலிகளை அடிக்கடி பயன்படுத்துகிறது. உகரமும் ஒகரமும் தொடர்புடையனவாக உள.

ஊ (*u:) — எல்லா மொழிகளிலும் உளது.

Koviloor Digital Library

எ [*e] — பிராகூய், தோடா, பார்ஜி தவிரப் பிற மொழி களில் உளது. தோடா Ö, பார்ஜி அ, கோண்டி அ, ஆ, பிரா கூய் இ, அ ஆகிய ஒலிகளைப் பயன்படுத்துகின்றன. பிராகூயில் எகர ஒலியே காணப்படவில்லை.

ஏ [*e :] — தோடா, பார்ஜி தவிர எல்லா மொழிகளி லும் உளது. தோடா Ö ஒலியையும் பார்ஜி ஆ ஒலியையும் கொண்டுள.

ஒ [*O] — தோடா, கோண்டி, பிராகூய், மண்டா மொழிகள் தவிரப் பிறமொழிகள் இதனைக் கொண்டுளது.

தோடா - வ [wa] வி [wi] இ, [i] ஒலிகளையும் கோண்டி அகர ஒலியினையும் பிராகூய் ஓ, உ, அ ஒலிகளையும் மண்டா உகர ஒலியையும் கொண்டுள. பிராகூயில் ஒகர ஒலியே இல்லை.

ஓ [*O :] — தோடா, மண்டா தவிரப் பிற மொழிகளில் உளது. தோடா வ [wa], வி [wi], இ (i) ஒலிகளையும் மண்டா ஊகார ஒலியையும் பயன்படுத்தும். தோடா மொழி ஓகார ஒலியை அருகியே பயன்படுத்தும்.

குற்றியலுகரம் : உகரத்தின் மாற்றொலியாக இது கருதப்படும். தனிக்குறிலடுத்து வரும் போது தவிரப் பிற இடங்களில் சொல்லுக்கு இறுதியில் வல்லின மெய்யினை அடுத்து வரும் போது உகரம் குறுகி ஒலிக்கும் என்பர் தமிழ் இலக்கண நூலார். இதழ் குவியும் முயற்சி இதற்குக் குறைவாகும். இக்காலத்தே மெல்லினத்தோடும் இடையினத் தோடும் இணைந்துவரக் காணலாம். (எ-டு) கல்லு, மண்ணு.

இக் குற்றியலுகரம் ஐரோப்பிய மொழிகளிலும் வடமொழி யிலும் இல்லை.

தமிழில் உள்ளது போலவே பழைய மலையாளத்திலும் குற்றியலுகரம் அமைந்துள்ளதென்பார் திரு. சேகர். *

தெலுங்கிலும் கன்னடத்திலும் பெரும்பாலான சொற்கள் உகரத்தில் முடியக் காணலாம். ஆனால் அவை குறுகி

* In Early old Malayalam as in Tamil, the final u of forms like iraṇṭu, when they formed the first part of Campounds like iraṇṭu - viḷakku appears to have been enuciated is a Kuṟṟiyal - ukaram, — Evolution of Malayalam—A. C. Sekhar. P. 20.

Koviloor Digital Library

ஒலிக்கின் றதா என்பது ஆய்தற்குரியது.

ஐ, ஔ [ai, au]

ஐ, ஔ இரண்டும் தமிழில் நெடில் ஒலியன்களாகக் கூறப் படுகின்றன.

மலையாளத்தில் ஐ உளது. அங்கு 'ஐ' அகரமாக மாறி ஒலிப்பது பெரும்பான்மை. மொழி இடையில் ஐ அகரமாக வும் மொழியிறுதியில் எகரமாகவும் அது மாறி ஒலிக்கிற தென்பர். ஔகாரம் கல்வெட்டுக்களில் காணப்படவில்லை. எனினும் பழைய மலையாளத்தில் இருந்ததென்பர்.

கன்னடத்தில் ஐகாரம் இருவகையாக எழுதப்படுகிறது என்பர். அய் வத்து

ஐ நூர்பரும்.

கன்னடத்தில் ஔகாரம் மொழியிடையில் மட்டுமே வரும்.

தெலுங்கிலும் ஐ, ஔ எனும் ஒலிகள் உள.
(எ-டு) அய்து, அவ்னு.

இவ்விரு ஒலிகளை மூல திராவிட ஒலியன்களாகக் கருத வில்லை திரு. எமனோ.

ஐ, ஔ இரண்டும் நெடில் ஒலியன்களாகக் கருதப்பட்ட போதிலும் ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம் என்று அவை குறுகி வழங்குவதே பெரும்பான்மை.

அ+ய் = அய் = ஐ என்று தொல்காப்பியர் கூறுகிறார். அதையொட்டிப் பிற்காலத்தார் அ+வ்=அவ்=ஔ என்றும் கூறுவர். எனவே அய், அவ் என்றும் அவை வழங்கப்படும்.

நெட்டெழுத்துக்கள் தமக்கடுத்து ய், ர், ல், ழ், ள் முதலிய மெய்களைச் சேர்த்துச் சொற்களாக அமையும். [ஆய், ஆர்.] ஆயின் ஐ, ஔ அங்ஙனம் அமைய இடம் தரா. இன்னும் ஒலியமைப்பாலும் இலக்கண அமைப்பாலும் யாப்பிலக்கணத் தாலும் பார்க்கும்போது ஐ, ஔ இரண்டும் நெடிலல்ல; அய், அவ் என்னும் கூட்டொலிகளே என்று விளக்குவார் திரு. கோதண்டராமன்.*

---

* Studies in Tamil Linguistics. P. 80. இலக்கண உலகில் புதிய பார்வை — பக். 34.

Koviloor Digital Library

புணர்ச்சி விதியில் உள்ள சிக்கல் காரணமாகவும் நிலை இ போன்ற அளபெடை வந்துள்ளமையாலும் ஐகாரத்தைத் தனி ஒலியனாக இலக்கணிகள் கொண்டனர்; ஐகாரத்தை ஒட்டி ஔகாரத்தையும் கொண்டனர் எனக்கூறும் டாக்டர் செ. வை. சண்முகம் அய், அவ் என்றே ஐ, ஔ என்னும் ஒலியன்களைக் கருதலாம் என்று விளக்குகிறார்.*

ஐ என்பது தமிழ் பெயர்ச் சொல்லாகவும் இரண்டாம் வேற்றுமை உருபாகவும், முன்னிலை ஒருமை விகுதியாகவும் வியப்புப் பொருளுடைய உரிச்சொல்லாகவும் வழங்கிவரும் நிலையை விளக்குவர் திரு. ச. வே. சுப்பிரமணியன் அவர்கள் †

தொல்காப்பியர் காலத்தில்தான் ஐ, ஔ என்னும் ஒலிகள் வரத்தொடங்கின. ஔ சமசுக்கிருத ஒலியைப்பின்பற்றியமைந்ததேயாகும்; அது தமிழில் நிலைபெறவில்லை. அகர இகரம் சேர்ந்தமைந்ததே ஐகாரம். அதுபின்னர் அய் என்று வழங்கலாயிற்று என்று விளக்குவார் தொ. பொ. மீ.§

ஐ, ஔ இரண்டும் சந்தியக்கரம் என்பர். ஆயின் அவை சந்தியக்கரமல்ல; கூட்டொலி என்று விளக்குவார் டாக்டர் மு. வ. திராவிட ஐகாரம் 'எ' 'இ' க்களின் இணைவால் தோன்றியதென்பார் டாக்டர் கால்டுவெல்.

அகர இகரம், அகர உகரம் என்னும் உயிர்களின் சேர்க்கையாக இருந்து பின்னர் உடம்படுமெய்களாக முறையே ய், வ் வந்தபின் அய், அவ் என்று நிற்க இ, உ உயிர்கள் மறைந்தன என்று கொள்ள வாய்ப்புண்டு.

சமசுக்கிருதத்திலுள்ள ஐ, ஔ என்னும் ஒலிகளிலிருந்து தமிழ்ஒலிகள் வேறுபட்டவை.சமசுக்கிருதத்திலுள்ள ஐ-ஆய் என்றே இலக்கணப்படி கருதப்படும்;அது ஆ,ஏ என்பவற்றின் சேர்க்கையில் வந்தது. அவ்வாறே ஔ என்பது ஆவ் என்றே ஒலிக்கப்படும்.ஆதலால் தமிழில்உள்ள ஐ,ஔ என்பனசமசுக்கிருத ஒலியிலிருந்து வேறுபட்டவை. அவ்வொலிகளைக் கண்டே சமசுக்கிருத ஒலிகளும் (ஆய், ஆவ்) மாறி ஒலிக்கப்பட்டன என்று விளக்குவார்

---

* நான்காவது கருத்தரங்குமலர் — பக் 368.

† ஆறாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை - 664

§ A History of Tamil Language P. 64-66

Koviloor Digital Library

டாக்டர் P. S. சுப்பிரமணிய சாஸ்திரியார்.*

மூக்கின உயிர்கள்

தமிழில் உள்ள தனி இயல்பாக மூக்கின உயிர்கள் உள. மூக்கின உயிர்கள் தனி ஒலியன்களாகக் கருதப்படும். திராவிட மொழியின் இயல்பாக மூக்கின உயிர்கள் கருதப்படவில்லை. [நான்காவது கருத்தரங்குமலர். — பக். 356]

மொழியிறுதியில் உள்ள மூக்கினமெய் மறைய அதற்குப் பதிலாக அதற்கு முன்னுள்ள உயிர் மூக்கினமாக ஒலிக்கப்படு வதைக் காணலாம்.

வந்தான் — வந்தா.

கன்னடம், தமிழ் ஆகியவற்றிலுள்ள சொற்களை ஒப்பிட்டு நோக்கினுல் கன்னடத்தில் மூக்கின ஒலி குறைந்திருப்பதைக் காணலாம்.

கன்	தமிழ்
இரடு	இரண்டு
குட்ட	குன்று
கர்பு	கரும்பு
பர்து	பருந்து
மரகுத்திகா	மரங்கொத்தி

தமிழில் கூடு - கூண்டு; பூடு - பூண்டு; ஊசல் - ஊஞ்சல்; ஏடா - ஏண்டா; ஏடி - ஏண்டி: முதலிய சொற்கள் மூக்கொலி பெருதும் பெற்றும் வரக்காணலாம். முதலில் மூக்கொலியின்றி ஒலிக்கப்பட்டுப் பின்னர் உயிர் மூக்கினமாக ஒலிக்கப்பட்டு அதைத் தொடர்ந்து மூக்கின மெய் சேர்ந்திருக்க வேண்டு மென்பர்.

டாக்டர் கால்டுவெல் தமிழர்கள் மூக்கொலியில் பெரு விருப்புடையவர்கள் எனக் கூறுகிருர். அத, அகு, இகு, எகு என்பனவே அந்த அங்கு, இங்கு, எங்கு என்று மூக்கொலி பெற்றுவந்ததென்பார் அவர்.

---

* History of Grammatical Theories in Tamil - P. 31, 32]

Koviloor Digital Library

வடமொழிச் சொற்கள் சில மூக்கின ஒலிகளாக மாறித் தமிழில் ஒலிப்பதும் உண்டு.

கோதுப—கோதுமை, கோதும்பை.

இகர எகர உகர ஒகர மாற்றங்கள்

திராவிடமொழிகளில் இகர எகரங்களிடையே மாற்றம் காணப்படுகிறது. உகர ஒகரங்களிடையே மாற்றம் காணப் படுகிறது.

தமிழ், மலையாளத்தில் உள்ள இகர, உகரங்கள். கன், தெலு, துளுவில் எகர ஒகரங்களாக இருக்கக் காணலரம்.

தமிழ், மலே	—	கன், துளு, தெலு
இலே, இல	—	எலெ, எலெ.
இறங்கு, இறங்ங்ு	—	எரகு, எரகுனி, எராகு
குடை, குட	—	கொடெ,கொடெ,கொடகு

பேச்சுத்தமிழிலும் மலேயாளத்திலும் இம்மாற்றங்கள்காணப்படுகின்றன.

[எ-டு] எலே, எடம், ஒலகம், ஒனக்கு.

சில குறிப்பிட்ட மெய்களோடு (Cerebra!s; liquids) அகரம் தொடர்ந்து வருமெனில் அதற்கு முன் உள்ள இகர உகரங்கள் கன்னடம், துளு, தெலு, புதுத்தமிழ், புது மலேயாளம் ஆகியவற்றில் எகர ஒகரங்களாக மாறும் என்று திரு. K V. சுப்பையா கூறுவார். *

திரு. L. V. இராமசாமிஐயர் அவர்கள் "இகர உகரத்தை அடுத்து இதழ் குவியா உயிரும் இரட்டிக்காத மெய்யும் வருமெனில் அவை எகர ஒகரங்களாக மாறும். இம்மாற்றம் பேச்சுத்தமிழ், கன். தெலு, துளு ஆகியமொழிகளில் காணப் படுகிறது." என்று கூறுவார்.

ஆயின் இக்கருத்துக்களைப் பேராசிரியர் T. பர்ரோ மறுத்து மொழிகிறார்.

இகர உகரங்களே முந்திய வடிவங்கள் என்றும் அவையே எகர ஒகரங்களாக மாறின என்றே பலரும் கருதுகின்றனர்.

---

* Primer of Dravidian Phonology-Indian Antiquary.

Koviloor Digital Library

ஆயின் எகர ஒகரமே முந்திய வடிவங்கள் என்று சில எடுத்துக்காட்டுக்களைத் தருகிறார் பர்ரோ.

தமிழ் — பெண் > பிணவல்
செம் > சிவ
எல் > இலங்கு
பெறு > பிற
ஒடி > உடை
ஒடு > உடன்
கொழுந்து > குழ
சொரி > சுர
தொய் > துயங்கு

இச் சொற்களில் எகர, ஒகரங்களிலிருந்தே இகர உகரங்கள் தோன்றியமை புலனாம் என்பார் பர்ரோ.

எனவே எகர ஒகரங்கள்தான் முந்தியவை; தெலு, கன். சொற்களில் உள்ள எகர ஒகரங்களே முந்தியவை. தமிழ், மலையாளம் இகர உகரங்களை அவ்விடங்களில் கொண்டுள்ளன என்றும் கூறுதல் இயலாது.

இரண்டு [தமிழ்] என்பதுதான் மூல திராவிடச்சொல். அது கன்னடத்தில் எரடு என வருகிறது.

அவ்வாறே நிலம் (தமிழ்) நெல (கன்)
விலை பெலெ
உரை ஒரெ
புது பொச
முனை மொனெ

என மாறுகின்றன.

இகர எகரங்கள் அகரத்துக்கு முன்னால் வரும்போது உகர ஒகரத்தோடு தடுமாறுகின்றன. தமிழ், மலையாளத்தில் இகர உகரமாகவே இருக்க கன், தெலு.வில் எகர ஒகரங்களாக இருக்கின்றன. இத்தடுமாற்றம் மூல மொழியிலேயே இருந்திருக்க வேண்டும். பிறமொழிகள் தனி இயல்புடன் வளர்ந்தன என்று முடிவு கூறுகிறார் பர்ரோ.

கன்னடத்தில் மட்டும் ஒருதனி இயல்பு காணப்படுகிறது.

Koviloor Digital Library

இகர உகரத்துக்கு முன்னால் எகர ஒகரங்கள் வந்தால் அவை இகர உகரங்களாக மாறுகின்றன.

தமிழ் எதிர் கன்	இதிர்
எலி	இலி
செவி	கிவி
ஒடி	உடி
நொடி	நுடி

இம்மாற்றம் மொழிக்கலப்பால் ஏற்பட்டதென்பார் பர்ரோ.

வரலாற்று முறையில் நோக்கும்போது இகர உகர உயிர் வடிவங்களே முந்தியனவயாக இருக்கக் காணலாம். தமிழில் இகர உகர வடிவங்களே இலக்கியத்தில் இருக்கக் காணலாம். கன். உள் (8, 9 ஆம்நூற்) > ஒள், ஒலிகே (8, 9, 10 நூற்)
முதல் (8 ஆம் நூற்) > மொதல் (9, 10 நூற்)
கன்னடத்தில் உகர வடிவம் முந்தியதாக இருக்கக் காணலாம்.

மலையாளத்தில் பேச்சு வழக்கில் இம்மாற்றம் உள்ளது; தென் கேரளக் கல்வெட்டுக்களில ஒகர வடிவமே மிகுந்துள்ளது எனக் கூறும் திரு. சேகர் இகர உகரங்களே எகரஒகரங்களாயின எனக் கூறுகிறார்.*

திரு. கிருட்டிணமூர்த்தி இதுபற்றி விளக்கும்போது "அடிச் சொல்லோடு சேரும் இடைச் சொற்களில் இகர உகர உயிர்கள் இருந்தால் உயிர்கள் மாறாமல் இருக்கும். அடிச்சொல்லையடுத்து அகர உயிருடைய இடைச்சொல் வருமென்றால் தமிழ், மலையாளத்தில் இ, உ, அ எனும் உயிர்களும் கன், தெலுங்கில் எ, ஒ, அ எனும் உயிர்களும் காணப்படும்." என்று கூறுகிறார்.

மூலதிராவிட எகர ஒகரங்கள் தமிழ் மலையாளத்தில் இகர உகரங்களாகவும் மூலதிராவிட இகர உகரங்கள் தெலுங்கு கன்னடத்தில் எகர ஒகரங்களாகவும் மாறுமென்பது விளங்கும். மேலும் அவர் மூலதிராவிட இகரமும் எகரமும் அகரத்துக்கு முன்னால் மூல தென்திராவிட மொழிகளில் எகரமாக ஒன்றுபடுகின்றன; உகர ஒகரம் ஒகரமாக ஒன்றுபடுகின்றன என்று விளக்குகிறார்.

---

* Evolution of Malayalam P. — 19,20

Koviloor Digital Library

தமிழ், மலையாளம் அகரத்துக்கு முன்னால் மூலதிராவிட எகர ஒகரத்தை இகரஉகரமாக வழங்குகிறது என விளக்குகிறார்.

எகரஒகரம் மூலஒலிகளா இகரஉகரம் மூலஒலிகளா என்று கண்டறிய வேர்ச்சொற்களைக் கண்டறிதல் வேண்டுமென்றும் அவர் விளக்குகிறார்.

உயிர் ஒலி இயைபு (Vowel Harmony)

இகரத்தையும் உகரத்தையும் அடுத்தடுத்து ஒலிப்பது கடினமாகும். ஒரு சொல்லில் அவை அமையுமானால் அவ்விரண்டில் ஒன்று மற்றொன்றாக மாறி ஒலிக்கக் காணலாம்.

கத்திக்கு,பெட்டிக்கு—எனும்சொற்களில்இகரத்தையடுத்து உகரம் வருகின்றது. அந்த உகரத்தை இகரமாக மாற்றி விடுகிறது முன்னர் உள்ள இகரம். எனவே கத்திக்கி, பெட்டிக்கி என்றே ஒலிக்கப்படும்.

இவ்வாறு ஓர் உயிருக்கேற்ப மற்றொரு மாற்றப்படும் நிலையை உயிரொலி இயைபு எனப்படும். மாற்றும் உயிராற்றல் என்றும் இது கூறப்படும்.

ஐகாரத்தை யடுத்தும் உகரம் இகரமாகும்:

[எ-டு] அத்தைக்கி

தெலுங்கில் இத்தகைய உயிரொலி இயைபு மிகுதியாகும். ஏனெனில் உயிர்களை மிகுதியாகப் பயன்படுத்தும் மொழி தெலுங்காகும்.

கத்தி+லு=கத்துலு
கோடி+லு=கோடுலு [குரங்குகள்]
பில்லி+லு=பில்லுலு [பூனைகள்]

இச்சொற்களில் சொற்களோடு சேரும் 'லு' உருபு சொற்களில் உள்ள இகரத்தை உகரமாக மாற்றிவிடுகிறது.

இரண்டாம் வேற்றுமை உருபுகளாக னு, னி என்னும் இரு வடிவங்கள் இருந்து சொல்லிறுதிக்கேற்பச் சேருகின்றன.

அவு, இவி; தி, து; யி,வு;

என்று இருவித விகுதிகள் இருப்பது இங்கு குறிக்கத்தக்கதாகும்.

வரும்விகுதி சொல்லிறுதியை மாற்றுவது போலச் சொல்லிறுதிக்கேற்ப விகுதியும் மாறுவதுண்டு.

Koviloor Digital Library

தானி+கு=தானிகி 15230
ஆவு+னி=ஆவுனு

தமிழில்

நாளன்றி+போகி=நாளன்று போகி
பதனன்றி+புக்கு=பதனன்று புக்கு

எனும் சொற்களில் இகரம் உகரமாகியதற்கும் உயிரொலி இயை பே காரணம் என்பார் டாக்டர் மு. வ.

பேச்சுத் தமிழில் பெருவழக்காய் உளது.

இடுக்கி—இடிக்கி
முழுங்கு—முழுங்கு
நுணுகி—நுணிகி
புலி—பிலி
சிறிது—சிறுசு
பெரிது—பெருசு
குருசில்—குரிசில்
பரிதி—பருதி
நெருஞ்சி—நெரிஞ்சி
அருநெல்லி—அரிநெல்லி
முனி—மினி

மலையாளத்தில் இம்முறைக்கு மாறாக

அரும்பு—அரிம்பு
கரும்பு—கரிம்பு

என்று மாறுகின்றன.

கன்னடத்தில் வினைச்சொற்களில் உள்ள உயிருக்கேற்ப விகுதியில் உள்ள உயிர் மாறும் எனக் கூறுகிறார் கால்டுவெல்.

முனி—மினி என்று கன்னடத்திலும் மாறுகிறது.

உடம்படுமெய்—விட்டிசைத் தடுப்பு

உயிரில் முடியும் சொல்லும் உயிரில் தொடங்கும் சொல்லுக் இணையும்போது நிலைமொழி உயிருக்கும் வருமொழி உயிருக் கும் நடுவில் ஏற்படும் தடை விட்டிசை எனப்படும்.

வடமொழியில் இங்ஙனம் இரண்டு உயிர்கள் வரும்போது இரண்டும் சேர்ந்து மற்றோர் உயிராக மாறி ஒலிக்கும்.

Koviloor Digital Library

கஜ+இந்திரன்=கஜேந்திரன்
இராம+ஈசுவரம்=இராமேசுவரம்
மகா+உபாத்யாய=மகோபாத்யாய
மகா+உன்னதம்=மகோன்னதம்

தமிழில் பரு+அரை=பராரை என்று வருவது மிக அருகிய வழக்கு.

தமிழ் உள்ளிட்ட திராவிடமொழிகளில் இரண்டு உயிர்களுக் கிடையே ஏற்படும் விட்டிசையைத் தடுக்க உடம்படுமெய் வரும்.

தமிழில் தொடக்ககாலத்தில் உயிர் ஒலிகள் சேர்ந்து வந்தன என்றும் தொல்காப்பியர் காலத்திலும் அதற்குப் பின்னருமே உடம்படுமெய் சேர்ந்தன என்றும் கூறுவார் தெ. பொ. மீ.

தழீஇ என்றே முதலில் வழங்கின என்றும் தழுவி என்று பின்னர் மாறின என்றும் கூறுவார்.

உடம்படுமெய்களாக வருபவை அரை உயிர்கள் எனக் கருதப்படும் ய், வ் என்பன.

வர+இல்லை=வரவில்லை
மணி+ஆரம்=மணியாரம்

கன்னடத்தில் அ, உ எனும் உயிர்களை யடுத்து வகரமும் எ, இ உயிர்களை யடுத்து யகரமும் வரும்.

குடி+ஓ=குட்யோ [குடித்தல்]
குடி+அத்தெ=குட்யத்தெ [அது குடித்தது]
மகு+இன=மக்வின [குழந்தையினுடைய]
[An Outline of Colloquial Kannada P.15]

இங்கு உயிர்கள் மறைய அவற்றிற்குப் பதிலாக வ், ய்எனும் மெய்கள் இடம்பெறுவதைக் காணலாம்.

மலையாளத்தில் வ், ய் எனும் மெய்கள் உயிர்களுக்கிடையே வரும்.

[எ-டு] திரு—வ்—அமுது; பொது—வ்—ஆள்
பூமி—ய்—உம்; பரி—ய்—ஆவது

லீலாதிலகம் யகர உடம்படுமெய்யை மட்டுமே கூறுகிறது. வகர உடம்படுமெய் மெல்ல வழக்கிறக்க யகரமே முழுதும் இடம் பெற்றதென்பர்.

Koviloor Digital Library

உடம்படுமெய்யின்றியும் சில கல்வெட்டுத் தொடர்கள் உள்ளன.

[எ-டு] இத்தனைஇலும், பொதுஆளும்

தெலுங்கில் உயிர்கள் சேரும்போது வடமொழிபோல மற்றோர் உயிர் வருவதுண்டு.

அதி—ஆ=அதே
கத்தி—ஆ=கத்தே

இருகுறில்கள் வரும்போது ஒருகுறில்உயிர் விடப்படல் உண்டு.

பனி+உண்டி=பனுண்டி
அக்கட+உன்னுடு=அக்கடுன்னுடு

கன்னடத்திலும் இம்முறை உண்டு.

சாபி+அரு=சாப்ரு (சாயிபுகள்)
குட்யோ+அனு=குட்யோனு (குடித்தவன்)

[An Outline of Colloquial Kannada P. 16]

தெலுங்கில் க், ன், ர், ம் எனும் நான்கு மெய்கள் உடம்படு மெய்களாக வரும் என்பார் கால்டுவெல்.

அறுகுரு பதகொண்டு நாயுடுகாரு	க்
தின்னகா+ஏகனு=தின்னகானேகனு ஒக+ஒக=ஒகனொக	ன்

தமிழில் அந்த+இது=அந்தனிது என்று சில இடங்களில் வழங்கும்.

பொத+இல்லை=பொதரில்லை — ர்
நிகநிக+அணி=நிகநிகமணி — ம்

மகரம் வகரத்தின் திரிபென்பார் டாக்டர் மு. வ.

[எ-டு] என்னவோ > என்னமோ

இலக்கியக் கன்னடத்தில் மகரம் உடம்படுமெய்யாக வரும்.

குரு+அம்=குருமம்

துளுவில் இவள் என்பதற்குப் பதில் இமள் என வந்து மோள் என ஆயிற்று என்பர். எனவே அங்கும் மகரம் உடம்படுமெய் யாக வந்துளது.

கூய் முதலிய திருந்தாமொழியிலும் உடம்படுமெய் உளது.

Koviloor Digital Library

உடம்படுமெய்களால் திராவிட மொழிகளின் ஒட்டுநிலை காக்கப்படுவதோடு அடிச்சொல் சிதையாமல் காக்கப்படுகிறது.

உயிர் இடம் பெயரல்

ஒருசொல்லில் $V_1C_1V_2C_2$ என்று உயிரும் மெய்யும் இருந்தால் உயிர்கள் இடம்பெயர்ந்து ஒலிக்கும். அங்ஙனம் இணையும் உயிர்களில் ஒன்று மறைய மற்றொன்று நெடிலாகும்.

$$V_1\,C_1\,V_2\,C_2\,V_3 \rightarrow C_1\,V_1\,V_2\,C_2\,V_3 \rightarrow C_1\,\overline{V}\,C_2\,V_3 —$$

அவரு — வ் அஅரு — வாரு

இம்மாற்றம் தெலுங்கில் பெரிதும் காணப்படும்.

வீரு, தானி, தீனி முதலிய சுட்டுச் சொற்களிலும் ரோலு, கோரு, லேது, காது, லோ முதலிய சொற்களிலும் இம்முறை காணப்படுகிறது. முதல்மெய் (C^1) இருக்குமென்றால் இரண்டாவது மெய் ர, ற (r or ṟ) ஆக இருக்கும்; முதல்மெய் இல்லை யெனில் இரண்டாவது மெய் ட, ல, ள வாக இருக்கும் என வரையறை கூறுகிறார் திரு. கிருட்டிணமூர்த்தி.

கூய் மொழியிலும் இதுபோல மாற்றம் காணப்படுகிறது. குவி மொழியிலும் காணப்படுகிறது. அவைகளின் வழி அமைப்பில் சிற்சில வேறுபாடுகள் உள. பிராகூய் மொழியில் உள்ள மாற்றத்தை எமனோ விளக்கியுள்ளார்.

தலை — கூய் ; த்லெள
குவி — த்ராயு
அரவு — தெலு - த்ராசு
கூய் - ஸ்ராசு
குவி - ராசு
மரம் — தெலு. ம்ரானு

தமிழில் உவகை > ஓகை என்றும் உவா > வாவு என்றும் மாற இதுவே காரணமாகும்.

அடிச்சொல் உயிர்குறுகல்

வினையடிச் சொற்கள் விகுதிகள் சேராதபோது நெடில் உயிரையும் உயிரொலியுடைய விகுதிகள் சேரும்போது குறில் உயிரையும் கொண்டுள்ள நிலையைக் காணலாம். நெடில்

Koviloor Digital Library

உயிரே அடிப்படை ஒலி என்றும் அதுவே குறிலாக மாறு கிறது என்றும் கூறுவர்.

தெலுங்கு வினையடிச் சொற்களில் இந்நிலையை ஆராய்ந்து உள்ளார் திரு. கிருட்டிணமூர்த்தி. ஏனைய திராவிட மொழி களிலும் இந்நிலை காணப்படுவதால் இது மூல திராவிட முறை என்றே கொள்ளப்படும் என்பார் எமனோ.

தமிழ் - ஆர் - அரற்று
கன் - ஆர் - அர்பிசு
துளு - ஆர்குனி - அரடுனி
தமிழ் - கார் - கரி
பார் - பர
போர் - பொரு
காண் - கண்

நெடில் உயிர் சில இடங்களில்வினை வடிவத்திலும் சில இடங்களில் பெயர் வடிவத்திலும் காணப்படுகிறது.

வினைச்சொற்களில் குறுகிய வடிவமும் அதிலிருந்து தோன்றும் பெயர்ச் சொல்லில் நெடில்வடிவமும் காணப்படு வதும் உண்டு.

தமிழ் மின் — மீன் (தமிழ், கன், மலே, குடகு) கன்-மிஞ்சு
தமிழில் முதனிலை நீண்ட தொழிற் பெயர் இத்தகைய அமைப்புடையனவே. கொள் - கோள்

மூவிடப் பெயர்களிலும் எண்ணுப்பெயர்களிலும் நெடில் குறுகும் நிலையைக் காணலாம்-

நாம் — நம்
நீ — நின்
ஆறு — அறு
ஏழு — எழு
மூ — மு
கன்— ராஜ்ய— ரஜ்ய
தாயி — தய்
வீர — விர
பதினாறு — பதினறு
கார்த்திக — கர்த்திக

Koviloor Digital Library

சாசிர — சசிர
மூல — மூல

கன்னடத்திலும் சில சொற்களில் இம் மாற்றம் காணப் படுகிறது.

உயிர் நீட்சி

சில சொற்களில் உள்ள மெய்யெழுத்து மறைய அதற்கு ஈடாக முன் உள்ள உயிர் நீளும்.

பகல்> பால்; மிகுதி> மீதி; பெயர்> பேர்;
தொகுப்பு> தோப்பு; பொழுது> போது;
பசுமை> பாசிலே; அருமை> ஆர்

என்று பண்புச் சொல்லில் ஆவி நீளும் எனத் தமிழ் இலக் கணிகள் கூறுவர்.

2. மெய் ஒலியன்கள்

மூலதிராவிட மெய்ஒலியன்கள் க்,ச்,ட்,ப்,ற்,ஞ்,ண்,ன்,ம்,ய், வ்,ர்,ற்,ல்,ள் எனும் பதினைந்தாகும் என்பார் எமனோ.

க *K:- இவ்வொலி பெரும்பாலான திராவிட மொழிகளில் மாறுதலின்றி உளது. குருக், பிராகூய் மொழியில் kh என்றும் மால்டோ மொழியில் q என்றும் ஒலிக்கப்படும்.

மொழிமுதல் ககரம் சகரமாதல்—அண்ணமெய் ஆதல்

மொழிமுதல் ககரம் தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் இ,ஈ,எ,ஏ எனும் உயிர்களோடு சேர்ந்து வரும்போது சகரமாக மாறுகிறதென்பர்.

	இ		சி
க் +	ஈ	} =	சீ
	எ		செ
	ஏ		சே

கன்னடத்தில் மட்டும் மொழி முதல் ககரம் மாருமல் உளது என்று கூறுவார் திரு.பர்ரோ.

கன்னடம்	தமிழ்	மலையாளம்	தெலுங்கு
கெதரு	சிதர்		
	சிதரு	சிதருக	செதரு

Koviloor Digital Library

கன்னடம்	தமிழ்	மலையாளம்	தெலுங்கு
கெதலு	சிதல்	சிதல்	செத, செதலு
கெரெ	சிரை	சிரெக்க	
கெலெ	சிலை	சிலெக்க	செலகு
கெர்பு	செருப்பு	செரிப்பு	செப்பு

என்னும்சொற்களில் மொழிமுதல்ககரம் இ,எனும்உயிர்களோடு வரும்போது கன். மாறாமலும் தமி., தெலு., மலை. மொழியில் மாறியும் வந்துள்ளன.

அசோகர் கல்வெட்டில்'கேரள புத்ர'என்றதொடர் காணப்படுகிறது. தமிழில் சேரன் என்று உளது. கேரன் என்றே தொடக்ககாலத்தில் வழங்கிவந்ததென்றும் அதனைய கல்வெட்டு மேற்கொண்டதென்றும் பின்னர் தமிழ் மொழி முதல் ககரத்தைச் சகரமாக்கிச் சேரன் என்று வழங்கியது என்றும் பேராசிரியர் பர்ரோ விளக்குகிறார்.

ட், ண், ள் முதலிய வளைநாஒலிகள் தொடருமாயின் கி, கீ, கெ, கே என்பவற்றில் உள்ள ககரம் சகரமாவதில்லை; ககரமாகவே இருக்கும். காரணம் வளைநா ஒலிகளேயாகும்.

கிளி, கிட, கிழங்கு, கெழு, கிளர், கிள்ளு, கீழ், கேள்.

இத்தன்மை தமிழ், மலையாளத்தில் மட்டுமே உளது. தெலுங்கில் இவ்வரையறை இல்லை என்பர்.

ஐகாரத்தையடுத்துத் தெலுங்கு மட்டும் ககரத்தைச் சகரமாக்குகிறது.

கை - தமிழ், மலை, கன் — செய் - தெலு
கை (கசப்பு) - தமிழ், மலை, கன் — சேது - தெலு
கயிறு (தமிழ்) கயிறு [மலை] — சேரு - தெலு

தமிழிலும் தெலுங்கிலும் வேறுபட்ட இரு நிலைகள் காணப்படுவதால் அது மூல திராவிட முறையாக இருக்கமுடியாது; மொழிகளின் தனிவளர்ச்சி என்றே கொள்ளப்படும்.

முற்கூறிய விதிகளுக்கு மாறாகக் கன். ககரத்தைச் சகரமாக்கியும் ஏனையமொழிகள் மாற்றாமலும் வழங்கும் நிலையைச் சில சொற்களில் கண்ட பர்ரோ அவற்றைப் பிறமொழிச் சொல் கலப்பெனக் கூறுகிறார், (கிச்சிலி, கீரை, கீரி.)

Koviloor Digital Library

இ, எ, ஈ, ஏ எனும் உயிருக்கு முன்வரும் ககரம் கன்னடத்தில் மாருதிருக்கத் தமிழ், தெலு, மலையாளத்தில் சகரமாக மாறும் என்றும் அதற்குக் காரணம் அண்ணமெய்யாதல் என்றும் பேராசிரியர் பாரோ வலியுறுத்துகிருர். * ஆயின் இச் செய்தி இன்னும் ஆராய்தற்குரியதாகும். ககரம் மாறியது என் பதற்குப் பதில் சகரம் மாறியது என்றுகூறிப் புதுவிதி வகுக்க வாய்ப்புளது.

வடஇந்தியத்திராவிட மொழிகளாகிய பிராகூய், குருக், மால்டோ முதலிய மொழிகளில் அண்ண மெய்யாதலுக்கு நேர் மாருன நிலை காணப்படுகிறது. இ, ஈ எனும் உயிரோடு வரும்போது மொழிமுதல் ககரம் மாருது உளது; எஞ்சிய உயிர்களுக்கு முன்னர் மாறுகிறது. குருக், பிராகூயில் kh மால்டோவில் q என மாறுகிறது என்பார் பாரோ.

மொழியிடையில் ககரம் 'g' என்றே பெரும்பாலும் ஒலிக்கப் படுகிறது. தமிழ் மலையாளத்தில் மாருமல் உளது. kh. வ் ய், எனப் பலவாறு பிற திராவிட மொழிகளில் ஒலிக்கப்படுகிறது.

மொழியிடையில் இரட்டித்துவரும்போதுதமிழ், மலையாளத் தில் மாறவில்லை. கன், குட, துளு. தெலு மொழிகளில் குறிலை யடுத்து மாருமலும் நெடிலையடுத்து தனிக்குறிலாகவும் மால்டோவில் q.k ஆகவும் எஞ்சிய மொழிகளில் தனிக்குறிலாக வும் வழங்குகிறது.

மூக்கினத்தையடுத்துத்

தமிழ் - ங்க்
மலை - ஙங்

என்றும் குடகு, தெலு, கன் மொழிகளில் g, ṅg என்றும் வழங்கப்படுகிறது.

ச் *C:-

தமிழ், மலை, தெலு மொழிகளில் மாருமலும் கன்னடத்தில் c, s என்றிருமுறையிலும் ஒலிக்கப்படுகிறது. பெங்கோ, மண்டா, குவிமொழிகளில் h என மாறுகிறது.

மொழி முதல் சகரம்

தமிழும் மலையாளமும் வடமொழிச் சொற்களைக் கடன்

---

* Collected Papers - T. Burrow.

Koviloor Digital Library

பெறும்போது மொழிமுதல்சகரத்தைஇழக்கும். தெலு கன்னடத்தில் மிக அருகியே இந்நிலை காணப்படுகிறது என்பார் பர்ரோ.

தமிழ்	சமசுக்கிருதம்	தமிழ்	சமசுக்கிருதம்
அரண்	சரண	எட்டி	ஸ்ரெஷ்டின்
ஆடை	சாடா	ஓணம்	ஸ்ரவண
ஆலை	சாலா	அந்தி	சந்தி
உல்கு	சுல்க	அமர்	சமர்
அமண்	சமண்	அமையம்	சமயம்
அவிட்டம்	சவிஸ்தா	அவை	சபா

எனவே இச்சொற்கள் சமசுக்கிருதத்திலிருந்து வந்தன என்றும் அவ்வாறு வந்தபோது மொழிமுதல் சகரத்தை இழந்தன என்றும் கூறுவார் பர்ரோ.

இந்நிலை குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு மாறியது. அப்போது மொழிமுதல் சகரம் இழக்கப்படவில்லை. சங்கிலி, சாத்து, சிகரம் போன்ற சொற்கள் அக்காலத்தவை.

மொழி முதல் சகர இழப்பு தென்திராவிட மொழிகளுக்கிடையேயும் காணப்படுகிறது என்று கூறிப் பல சொற்களை எடுத்துக்காட்டுவார் பர்ரோ.

'சதியபுதோ' என்று அசோகர்கல்வெட்டில் உள்ள தொடர் சதியமான் என்ற சொல்லின் திரிபு என்றும் அதுவே பிற்காலத்தில் சகரத்தை இழந்து அதியமான் என்று மாறியது என்றும் பர்ரோ கூறுகிறார்.

மொழிமுதல்சகரத்தை இழக்காத தென்திராவிடச்சொற்கள் பல உள. சரி, சா, சாத்து, சால், சாறு, சாற்று, சிந்து, சிலந்தி, சுர, சுரு, சூல், சூள், செருக்கு, செல் என்று பல சொற்கள் தென்திராவிட மொழிகளில் சகரத்தை இழவாமல் உள்ளன.

மொழிமுதல் சகரத்தைத் தென்திராவிட மொழிகள் அனைத்தும் இழத்தல், அனைத்தும் சகரத்தை இழவாதிருத்தல், சில தென்திராவிட மொழிகள் இழக்கச் சில இழவாதிருத்தல் என்று ஒரு குழப்பமான நிலையே காணப்படுகிறது. எனவே குறிப்பிட்ட சில காலங்களில் குறிப்பிட்ட சில மாறுதல் ஏற்பட்டதாகக் கொள்ளவேண்டும் என்று கூறுகிறார் பர்ரோ.

Koviloor Digital Library

ஓரிரு திராவிடமொழிச் சமசுக்கிருதச் சொற்களுக்கிடையே (அந்தி-சந்தி; அவை-சபை; அமணர்-சமணர்; அமயம்-சமயம்) உள்ள ஒப்புமையைக் கண்டு அனைத்துச் சொற்களும் கடனாக வாங்கப்பட்டன எனக் கொளல் ஏற்புடையதன்று.

தொல்காப்பியர் மொழிமுதல் சகரம் வரலாகாதென விதி கூறுவதும் பின்னர் சங்கு, சவட்டி, சமழ்ப்பு முதலிய சொற்கள் உருவாகியிருப்பதும் இங்கு நினைவு கொள்ளத்தக்கவை.

மொழியிடையில் தமிழ் மலையாளம் சகரத்தைக்கொண்டுள. கன்.s, தெலு.ச,s, துளு'ஜ' ஒலிகளைக்கொண்டுள. மொழியிடையில் இரட்டிக்கும் சகரம் தமிழ், மலை, கன், தெலு, துளு, குடகு மொழிகளில் உளது. கன். —s— ஒலியையும், தெலு. இரட்டிக் காமலும் வழங்கும். மூக்கினத்தை யடுத்து ஒலிக்கும் சகரம் தமிழில் —ஞ்ச—, மலை. —ஞ்ஞ, ஞ்ச; கன்னடத்தில் —j—, —s—, ñj, தெலு. ன்ஜ என்று ஒலிக்கப்படுகிறது.

ட் *ṭ:- மொழிமுதலில் இவ்வொலி வராது. மொழியிடையில் 'ḍ' என்றே பெரும்பாலும் ஒலிக்கப்படுகிறது. தமிழ்,மலையாளத்தில் இரட்டித்து வரும்.பிறமொழிகளில் இரட்டித்தும் தனித்தும் வரும். மூக்கினத்தோடு வரும்போது 'ṇḍ' என்றும் 'ḍ' என்றும் வரும்.

ற் *ṟ:- தமிழ்,மலை,கன்,தெலு,தோடா ஆகிய மொழிகள் இவ்வொலியைக் கொண்டுள. எஞ்சிய மொழிகள் ர; d எனும் ஒலிகளாக மாற்றி வழங்குகின்றன. தமிழ்,கன்,தெலு. மொழிகளில் 'ர'கரமே இன்று வழங்குகிறது. இரட்டித்துவழங்கும்ஒலி தமிழ், மலையாளத்தில் மட்டுமே உளது. கன்,குடகு—த்த, த
தெலு.—ட்ட், ட்
என வழங்கும் மூக்கினத்தையடுத்துத் தமிழில் மட்டுமே வரும். மலையாளத்தில்—ந்நஎன்றும் கன்.ந்த்என்றும் துளு, தெலுங்கில் 'ண்ட்' என்றும் வழஙகும்.

த் *t:- எல்லா மொழிகளிலும் இவ்வொலி உளது. மொழியிடையே-d-என்றே வழங்கும். இரட்டித்து வரும்போது தமிழ், மலையாளத்தில் இரட்டித்தும் கன், குடகு, துளு, தெலுங்கில் இரட்டித்தும், தனித்தும் வரும். மூக்கினத்தை யடுத்து வரும் போது மலையாளத்தில் 'ந்ந்' என்றும் ஏனைய மொழிகளில் 'ந்த'

Koviloor Digital Library

(nd) என்றும் வழங்கும்.

ப் *p:- எல்லா மொழிகளிலும் மொழி முதலில் மாருது வரும். இக்காலக் கன்னடத்தில் 'h' என வழங்கும். மொழியிடையில் பகரத்திற்குப் பதில் வகரம் வரும்.

தமிழ், மலே. இரட்டித்து வழங்கக் கன், தெலு, துளு, குடகு மொழியில் இரட்டித்தும் தனித்தும் வழங்குகின்றன. மூக்கினத்தை யடுத்து கன். வகரமாகவும் தெலு. மகரமாகவும் இன்னும் சில மொழிகள் மகரமாகவும் ஒலிக்கின்றன.

ஞ் *ñ:- தமிழ், மலே, துளு, குடகு மொழியில் மட்டுமே இவ்வொலி மொழி முதலில் வருகிறது. இம்மொழிகளில் மட்டுமே இஃது ஒலியனுகச் கருதப்படுகிறது.

மலேயாளம் மட்டுமே மொழிமுதல் ஞகரத்தை இழவாமல் இன்றுவரை காத்துளது. இக்காலத் தமிழில் நகரம் ஞகரத்தின் இடத்தில் வரும்.

'ஆ' எனும் நெடிலோடு ஞகரம் வரும்போது ஞா > நே என்று மாறும். அவ்வாறே எ, அ எனும் உயிர்களுக்கு முன்னர் வரும் ஞகரம் நகரமாக மாறும்.

தமிழ், ஞகிழ்—நெகிழ்
ஞண்டு—நண்டு
ஞெமிண்டு—நிமிண்டு

தொல்காப்பியர் மொழி முதலில் 'ஞ' (ஞ்+அ) வரலாகாது என்று கூறியுள்ளார். சங்க காலத்தில் ஞமலி, ஞரல் முதலிய சொற்கள் தோன்றியுள்ளன. இக்காலத்தில் நகரமே காணப்படுகிறது.

மலேயாளத்தில் உள்ள ஞ,ஞெ ஆகியவை ந,நெ என மாறுகின்றன.

ஞமல் > முஞல் > முயல்
மயில் > மஞில் > ஞமில்

என்று ஞகரமும் மகரமும் இடம் மாறி வந்துள்ளன என்பார் பர்ரோ. ஆயின் ஞமலி என்பதற்கு மயில் எனும் பொருளின்றி நாய் என்ற பொருள் இருப்பது குறிக்கத்தக்கது.

இ, உ, ஒ எனும் உயிர்களேயடுத்து ஞகரம் நகரமாவது திராவிட இயல்பாக உளது.

Koviloor Digital Library

ண் *ṇ:- தமிழ், மலை, கன்,குடகு மொழியில் மாறாது வழங்கத் துளு,தெலுங்கில் 'ன'காரமாக மாறுகிறது. இன்னும்பலதிராவிட மொழிகளில் னகரமாகிறது. மொழிமுதலில் வருவதில்லை.

ந் *n, ன *ṉ:- தமிழில் நகரம் னகரம்ஆகியஒலிகள் வழங்கு முறையில் ஓர் ஒழுங்கு காணப்படுகிறது.

	ந்	ன்
மொழிமுதல்	+	—
இடையில் உயிருடன்	—	+
இறுதியில்	—	+
இடையில் இரட்டித்து	—	+

தொல்காப்பியர் நகர ஈற்றுச் சொற்களாக இரண்டு கூறு கிறார் (பொருந், திருந்). பொருந் என்னும் அடிப்படையில் பொருநன், பொருநை முதலிய சொற்கள் தோன்றியுள்ளன. இவைதவிர நகரத்தை இறுதியிலோ இடையிலோகாண்பதரிது. இச்சொற்களும் இன்று வழக்கிறந்தன.

நகரம் னகரம் இரண்டும் ஒன்று வருமிடத்தில் மற்றொன்று வருவதில்லை என்ற மாற்றொலியன் இலக்கணத்திற்கு உட்பட்டு வருகின்றன. மேலும் இவை ஒத்தசூழலில் உறழ்வு இணைகளாக அமைவதில்லை. எனவே இவை மாற்றொலியன்களாக வழங்கு கின்றன எனலாம்.

தமிழ், மலையாளம் தவிரப் பிறமொழிகளில் நகரம் மாறாமல் உளது.

ம் *m:- அனைத்துத் திராவிட மொழிகளிலும் மாறாமல் உளது.

ய் *y:- மொழியிடையிலும் இறுதியிலும் யகரம் எல்லாமொழி களிலும் மாறாதுளது. கூய் மொழியில் ஐ, கோண்டியில் 'ஈ' என மாறி வழங்கும்.

மொழிமுதல் யகரம்

பழந்தமிழில் மொழிமுதலில் 'யா' வந்துபின்னர் யகரமெய் கெட 'ஆ' என மாறியது.

யானை—ஆனை	யாமை—ஆமை
யாடு—ஆடு	யாண்டு—ஆண்டு
யாறு—ஆறு	யார்—ஆர்

Koviloor Digital Library

பழந்தமிழில் 'யா' உளது; இடைக்காலத்தமிழில் யா, ஆ எனும் இரண்டும் உள; இக்காலத்தில் ஆ மட்டுமே உளது.

தன்மையில் யான், நான், யாம், நாம் எனும் இருவடிவங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் யகரமே முந்தியதென்றும் அது நகரமாக மாறியதென்றும் கூறுவார் பர்ரோ.

தன்மைப் பெயர்களில் ஆ, ஏ எனும்இருவடிவங்கள் காணப் படுகின்றன.

தெலு—ஏனு; ஏனுகு—கன்—ஆனு. ஆனெ. மூலதிராவிடத்தில் ஆ, ஏ எனும் இரண்டும் கலந்த வடிவம் இருந்ததென்பார் சுப்பையா. ஆயின் 'இஆ' என மூலதிராவிடத்தில்இருந்து ஆ, ஏ என மாறியது என்பார் பர்ரோ. அவ்வாறு மாறும்போது இக் காலத் தமிழ், கன், தோடா, மலே.—ஆ
தெலு, கோண்டி, குருக், மால்டோ—ஏ
என மாறும்.

யார் எனும் சொல்லில் மொழிமுதல்யகரம் தமிழ், மலே, கன். மொழிகளில் இன்றும் வழங்கும். கன்னடம், துளு ஆகிய மொழிகளில் மொழிமுதல் யகரம் தகரமாக மாறக் காணலாம்.

தாரு, [யார்] தாவ [யாவை] யகரம் மறையாமல் ஜ, த (d) என இக்சொல்லில் மாறியுள்ளது.

தன்மைப்பெயர் யா வேற்றுமை ஏற்கும்போது எ என மாறுகிறது. யா > ய என மாறிப் பின் அது அ, எ என மாறியதென் பார் பர்ரோ.

மொழியிடையில் யகரம் சகரமாகவும் ககரமாகவும் மாறும்.
பெயர் > பெசர்; பையன்கள் > பசன்கள்;
வியாழன் > விசாழன்.

வ் *v:- மொழிமுதலிலும் இடையிலும் தமிழ், மலே, தெலு. மொழிகளில் மாருமல் உளது. துளுவில் 'b', கன், குடகு மொழிகளில்b, வ என்றும் பிறமொழிகளில் f, w என்றும் மாறிஒலிக்கும்.

ர் *r:- எல்லா மொழிகளிலும் மாருமல் உளது. ர, ற வேறுபாடு பெரும்பாலும் எல்லாமொழிகளிலும் மறைந்து வருகிறது. மலே, கொண்டா மொழிகளில் மட்டும் ர, ற வேறுபாடு உளது.

ல் *l:- எல்லா மொழிகளிலும் மாருமல் உளது. மொழியிடை

Koviloor Digital Library

யில் இரட்டித்து வரும்போது தமிழ், மலே, கன், குடகு, தெலு. மொழிகளில் இரட்டித்தும் சிலமொழிகளில் தனித்தும்வழங்கும்.

ள் *ḷ:- தமிழ், மலே, கன், குடகு மொழிகளில் ளகரமாகவும் துளு, தெலு. முதலிய பிற மொழிகளில் லகரமாகவும் வழங்கும். இரட்டிக்கும்போதும் அவ்வாறே மாறும். கொண்டா, பெங்கோ, மண்டா, மால்டோ முதலிய மொழிகள் இரட்டிக்கும்போது லகர மாகவே வழங்கும்.

ழ் *ḻ:- தமிழ், மலே. தவிரப் பிற மொழிகளில் ள், க், ய், ட், ஷ், வ் எனப் பலவாருக மாறி வழங்கும்.

கன்—ள்	கொலாமி } — ர
தெலு—ட் (ḍ)	நாய்கி }
துளு—ர	நாய்கி—ய்

தமிழில் ழகரம் பேச்சுவழக்கில் ள், ய், ச் என மாறிவழங்கும். மறைவதும் உண்டு. [பொழுது > போது]

வீரசோழியத்தில் ழகரம் ளகரமாக மாறுவதற்கு இலக் கணமே கூறப்படுகிறது. கன். தெலு. மொழிகளில் ஓரளவு மறைந்து வருகிறது.

ங் *ṅ:- மகரத்தின் மாற்றொலியாக இது கருதப்படும். மொழி யிடையே ககரத்திற்கு முன்வரும் மகரம் ஙகரமாகும். தமிழ், மலே, கன், துளு, மலே. ஆகிய மொழிகளில் இவ்வொலி உளது.

மெய்யொலி மாற்றங்கள்

அண்ணமெய் ஆதல் [Palatalization]

அடியண்ணத்தில் பிறக்கும் ககரம் முதலண்ணத்தில் பிறக் கும் தகரம் இரண்டும் இ, ஈ, எ, ஏ, ஐ எனும்உயிர்களுக்குமுனனும் பின்னும் வரின் அவையிரண்டும் இடையண்ண ஒலியாகிய சகர மாக மாறும்.

மொழிமுதல் ககரம் சகரமாக மாறியதைப் பர்ரோ விளக்கி யுள்ளார்.

சிரித்த—சிரிச்ச	ஐந்து—அஞ்சு
பிரித்த—பிரிச்ச	பெரிது—பெருசு
நைந்து—நஞ்சு	சிறிது—சிறுசு

Koviloor Digital Library

என்னும் சொற்களில் தகரம் சகரமாகவும் நகரம் ஞகரமாகவும் மாறக் காணலாம்.

பல்லினமாதல் (Dentalisation)

பெற்றமனம்—பெத்தமனம்
மற்றவர்—மத்தவர்
வெற்றிலை—வெத்தலை
நேற்று—நேத்து

எனும் சொற்களில் றகரம் பல்லினமாகிய தகரமாக மாறும். இது பல்லினமாதல் எனப்படும்.

ஓரினமாதல் (Assimilation)

சொற்கள் இணையும்போது வேறு வேறு இன ஒலிகள் இணைந்து வர நேரிடும். அங்ஙனம் வரும்போது ஓரினம் பிறஒலிகளைத் தன் இனமாக மாற்றிவிடும். அஃது ஓரினமாதல் எனப்படும்.

மரம்+கிளை=மரக்கிளை
மேன்பாடு—மேம்பாடு
நல்செள்ளை—நச்செள்ளை
நல்கீரன்—நக்கீரன்
நன்செய்—நஞ்சை
வன்சினம்—வஞ்சினம்

ஆகிய சொற்களில் இம்மாற்றத்தைக் காணலாம்.

கன்னடம்: எர்தனு—எத்தனு
எர்பத்தும்—எப்பத்து
இர்து—இத்து (iddu)

என்னும் கன்னடச் சொற்களில் இம்மாற்றம் காணப்படுகிறது.

ஓரினமாதல் மூவகைப்படுமென விளக்குவார் மு. வ.

1] நிலைமொழித் திரிபு — குமரன்+கோட்டம்=குமரக் கோட்டம்.
2] வருமொழித் திரிபு — ஆண்+தகை=ஆண்டகை
3] இருமொழித் திரிபு — கல்+தாழை=கற்றாழை.

நிலைமொழி மெய் திரிபடைதல் நிலைமொழித் திரிபெனப் படும்.

மக்கள்+பண்பு=மக்கட்பண்பு

Koviloor Digital Library

வாள்+படை=வாட்படை

வருமொழி முதல்மெய் திரிதல் வருமொழித் திரிபாகும்.

மண்+நல்லது=மண்ணல்லது

பொன்+நீண்டது=பொன்னீண்டது

இரண்டும் திரிதல் இருமொழித் திரிபாகும்.

நல்+திணை=நற்றிணை

பால்+நுரை=பானுரை

நல்+நூல்=நன்னூல்

வேறுபட்ட ஒலிகளை ஓரினமாக்குதல் போல ஓரின மொழிகளை வேறினமாக்கலும் உண்டு.

அசைகெடல் Haplology.

ஒருசொல்லில் ஒரே ஒலிப்புடைய அசைகள் பல இருந்தால் அவற்றில் ஒன்று மறையும்.

அருமருந்தன்ன பிள்ளை—அருமந்தபிள்ளை

ஆதன்+தந்தை=ஆந்தை

பூதன்+தந்தை=பூந்தை

இவற்றை மரூஉ என்பர் இலக்கணிகள்.

அடிச்சொற்களில் மெய்கெடல்

தெலுங்கு, கன்னடத்தில் இம்மாற்றம் பெரிதும் உளது. அவ்வாறு மறையும் மெய்கள் ர, ல, ழ முதலியனவாகும்.

வருக்கை—பக்கே [கன்னடம்]

இருப்பை—இப்பா [தெலுங்கு] இப்பே [கன்னடம்]

எருக்கு—Egge [கன்னடம்]

கருங்காலி—கக்காலி [கன்னடம்]

இரும்பு—இனுமு [தெலுங்கு]

மருந்து—மந்து [தெலுங்கு] மத்து [கன்னடம்]

பருப்பு—பப்பு [தெலுங்கு, பேச்சுத் தமிழ்]

தமிழிலும் துளுவிலும் இம்மாற்றம் அருகிக் காணப்படுகிறது.

மெய்யிடம்பெயரல் (Metathesis)

தசை—சதை விசிறி—சிவிறி

இடரி—இரடி வைகாசி—வைசாகி

கொப்பளம்—பொக்களம்
குதிரை —குருதை
நிலக்கடலே—நெடக்கடலே
பிர்துவிபல்லவ—பிர்துவிவல்லப (கன்னடம்)
பாணராசியுவம்—பாரணசியுவம் (கன்னடம்)
கொப்பூழ்—பொக்கிளி (தெலுங்கு)
பொக்கூழ் (மலேயாளம்)

இச்சொற்களில் மெய்கள் இடம் மாறி ஒலிக்கக் காணலாம். ஒலி உறுப்புக்கள் விரைவு காரணமாகப் பிறழ்ந்து ஒலிப்பதே இம்மாற்றத்திற்குக் காரணம்.

உயிர்கெடல்

சொற்களுக்கிடையே உள்ள உயிர் ஒலி கெடுவதுண்டு.

போகும்போது—போம்போது
மருளும்—மருண்ம்
போலும்—போன்ம்
கலுழும்—கலுழ்ம்

என இலக்கிய வழக்கில் உகரம் மறையக்காணலாம்.

சாந்துணையும் [சாகுந்துணையும்] என்று திருக்குறளில் இருக்கக்காணலாம்.

இரட்டித்த மெய்கள் தனிமெய்யாதல் (Degemination)

குறில் உயிரையடுத்து மெய்கள் இரட்டித்து வந்து அதனையடுத்து உயிர் வந்தால் இரட்டித்த மெய் தனி மெய் ஆகும். [(C^1) V C^2 C^2 — (C^1) V C^2 — V]

தர்மக்கெ—தர்மகெ [கன்னடம்]
மக்களு —மகளு ,,
கட்டெ —கடெ ,,
வட்டவார—வடவார ,,
அப்ப —அப ,,
அல்லி—அலி ,,
உள்ள—உள ,,

தெலுங்கிலும் கன்னடத்திலும் இம்மாற்றத்தை அதிகம் காணலாம்.

) (C¹) VC² C² — (C¹) VC² — V)]

Koviloor Digital Library

வல்லொலி மெல்லொலி மாற்றம்

கடல்
பக்கம் } — k

அகம் — h

அங்கம் — g

என்று ககரத்திற்கு மூன்றுவித ஒலிகள் இன்றைய தமிழில் உள. அவ்வாறே

ச் — c, s, j

ப் — p, b, f

ட் — ṭ, ḍ

த் — t, d

என்று வல்லின ஒலிகளுக்கு மெல்லின ஒலிகளும் வழக்கில் உள்ளன.

கால்டுவெல் வல்லொலி மெல்லொலி மாற்றம் என்னும் தலைப்பில் இதனை ஆராய்கிறார்.

மொழி முதலிலும் இரட்டிக்கும் போதும் ஒலிப்பிலா அடைப்பிலா அடைப்பொலியாக ஒலிக்கும். (k, c, t, ṭ, q)

உயிர்களுக்கிடையேயும் மூக்கினத்தையடுத்தும் ஒலிப்புடை அடைப்பொலிகளாக ஒலிக்கும். மூல திராவிடத்திலும் இம் முறை இருந்தது என்று கால்டுவெல் விளக்குகிறார். அவர் கருத்தை P. S. சுப்பிரமணியசாஸ்திரியார் மறுத்துரைக்கிறார். இன்றைய பேச்சுத் தமிழில் மட்டுமே இம் முறை காணப்படுகிறது. முந்திய இலக்கண இலக்கியங்களிலோ பிற திராவிட மொழிகளிலோ இம் முறை இல்லை என அவர் விளக்குகிறார்.

மொழி முதலில் தமிழ் k, c முதலிய ஒலிப்பிலா அடைப்பொலிகளைக் கொண்டுளது. கன்னடம், தெலுங்கு மொழிகள் g, j முதலிய ஒலிப்புடை அடைப்பொலிகளைக் கொண்டுள்ளன. தமிழில் உள்ளதே மூல திராவிடமுறை என விளக்குவார் திரு. சுப்பையா *

ஆயின் இக்கருத்தை மறுத்து தெலுங்கு, கன்னட மொழியில் உள்ளதே மூல திராவிடமுறை என்று சிலர் கூறுவர். †

* Indian Antiquary 1909. † Jules Bloch—Sanskrit and Dravidian, K. Godavarma—BSSOS. VIII P. 562.

Koviloor Digital Library

திரு. பர்ரோ தெலுங்கு, கன்னடத்தில் உள்ளது போல் g, d, j முதலிய ஒலிப்புடை அடைப்பொலிகள் மொழி முதலில் வருவது மூல திராவிட முறையன்று; அம்மொழிகளில் ஏற்பட்ட வளர்ச்சி என விளக்குகிறார். ஒலிப்புடை அடைப்பொலியில் தொடங்கும் சொற்களாக இல்லை என்றும் அவர் கூறுகிறார்.

தமிழ், மலையாளத்தில் ஒலிப்புடை அடைப்பொலிகள் மாற்றொலியன்களாகவே கருதப்படும். சிற்சில இடங்களில் அது பொருள் மாறுபடுத்துவதும் உண்டு.

ஐயோ ! பாவம் [p]
முகபாவம் [b]
ஒரு பலம் [p]
மிகுந்த பலம் [b]

தெலுங்கு கன்னட மொழிகளில்

Alagappa University
Central Library
15230

k, kh, g, gh
c, ch, j, jh
ṭ, ṭh, ḍ, ḍh
t, d, dh
p, ph, b, bh

முதலிய ஒலியன்கள் இன்றுள்ளன.

முக்கினமும் ஒலிப்பிலாத் தடையொலியும்

மூக்கினத்தையடுத்து ஒலிப்புடைத் தடையொலி வருவதே மூலதிராவிடமுறை எனும் கால்டுவெல் கருத்தை மறுத்து மொழியும் P. S. சுப்பிரமணிய சாஸ்திரியார் தெலுங்கிலும் கன்னடத்திலும் மூக்கினத்தையடுத்து ஒலிப்பிலாத் தடையொலிகள் வந்துள்ளதை எடுத்துக்காட்டுவார்.

தெலுங்கு — iṅku, vaṅki, kaṇta, enta, āta, aṭuka, impu,

கன்னடம் — iñcu, vaṅki, unṭu, enta, impu,

இந்நிலை பற்றி ஆராய்ந்த திரு. N. குமாரசாமிராசா பின்வருமாறு விளக்குகிறார்.

Koviloor Digital Library

மூலதிராவிட NP [Nasal+Plosive]

தமிழ், மலையாளம்—NN, NP

தெலுங்கு முதலிய பிற திராவிடமொழிகள் NB, B

மூலதிராவிட மொழியில் மூக்கினமும் ஒலிப்பிலா அடைப்பொலியும் இணைந்துவரும் நிலை தெலுங்கு முதலிய மொழிகளில் ஒலிப்புடை அடைப்பொலியாக மாறியுளது.

*NPP

தெலுங்கு NP

தமிழ் PP

மூலதிராவிட மொழியில் மூக்கினத்தையடுத்து ஒலிப்பிலா அடைப்பொலி இரட்டித்து வருமெனில் தெலுங்கில் மூக்கினமும் ஒலிப்பிலா அடைப்பொலியாக வரும். தமிழில் மூக்கினம் மறைய வல்லினம் இரட்டித்து வரும்.

தோண்ட்டப > தோட்டம்—தமிழ்
தோட—தெலுங்கு

இப்புதுமுறையைக் கொண்டு மேலும் பல சிக்கல்கள் தீர்க்கப் பட்டுளளன. [Post-Nasal Voiceless Plosives in Dravidian N. KumarasamiRaja]

அசை அழுத்தம்

சொற்கள் மட்டுமன்றிச் சொற்களை ஒலிக்கும் முறையும் பொருளை வேறுபடுத்துவதுண்டு. அவை மேற்கூற்றெலியன்கள் (Suprasegmentals) எனப்படும்.

ஐரோப்பிய மொழிகளில் உள்ளதுபோல் மிகுதியாகத் திராவிட மொழிகளில் இல்லை.

தமிழில் ''எடுத்தல் படுத்தல் நலிதல் உழப்பின்
திரிபும் தத்தமில் சிறிது உளவாகும்''
(நன்னூல்)

Koviloor Digital Library

என்று ஒலிக்கப்படும் முறையை இலக்கணிகள் கூறுவர். 'தபு' எனும் சொல் இருவகையாக ஒலிக்கப்பட்டு இருபொருளில் பயன்படுத்தப்படுமென்பார் தொல்காப்பியர்.

'வந்தான்' எனும் சொல் வினைமுற்றாகவும் வினையாலணையும் பெயராகவும் பயன்படும்போது ஒலிக்கப்படும் முறையிலும் வேறுபடுமென விளக்குவார் சேனாவரையர். ஆங்கிலத்திலும் Present, Permit முதலிய சொற்கள் அங்ஙனம் ஒலிக்கப்பட்டுப் பெயராகவும் வினையாகவும் பயன்படும்.

சந்தி:— சொற்களைப் பிரித்துச் சொல்வதாலும் இணைத்துச் சொல்வதாலும் பொருள் வேறுபடக் காண்கிறோம். அது சந்தி எனப்படும். அது நெருங்குசந்தி (Close Juncture), பிரிசந்தி (Open Juncture) என இருவகைப்படும். பலகை,குன்றேறுமா, செம்பொன்பதின்தொடி. தலைவிதிவசம் முதலிய தொடர்கள் பலவகையாகப் பிரிந்து பல பொருள் தரும்.

> ''எழுத்தியல் திரியாப் பொருள்திரி புணர்மொழி
> இசைத்திரிபால் தெளி வெய்தும் என்ப''
>
> (நன்னூல். 391)

என்பது இலக்கணம்.

சொற்களுக்கு இடையே இடம்விட்டு எழுதுவதாலும் இந்நிலை உணர்த்தப்படுவதுண்டு.

கன்னடத்திலும் இச்சந்தி காணப்படுகிறது.

இரலாகி
அட்டலாதம் } — நெருங்குசந்தி

கொல சல்லாது—பிரிசந்தி

நிலைமொழியிற்றில் மெய்யும் வருமொழி முதலில் உயிரும் வந்தால் நெருங்குசந்தியும் மாறிவந்தால் பிரிசந்தியும் வரும் என்பர். *

தொடரமுத்தம் (Intonation)

சொற்களைச் சொல்லும் முறையில் செய்தியாகவோ, வினாவாகவோ, வியப்பாகவோ தொடரைப் பயன்படுத்தலாம். இங்

* A Grammar of Kannada. 144.

Koviloor Digital Library

ஙனம் தொடர்முழுதும் மொத்தமாக ஒலிக்கும் வேறுபாட்டைத் தொடர் அழுத்தம் என்பர்.

'அவன் கல்லூரியில் படிக்கிருன்' எனும் தொடரை மூன்று முறையில் ஒலித்து 1] அவன்தான் படிக்கிருன் 2] வேறிடத்தில் இல்லே கல்லூரியில் படிக்கிருன் 3] அவன் வேறெதுவும் செய்ய வில்லே. படிக்கிருன் என்னும் மூன்று பொருளே உணர்த்தக் காணலாம்.

தெலுங்கில் இத்தொடர் அழுத்தம் அமைந்துள்ளமை விளக்கப்படும்.

தொடர்களில் உள்ள இடைவெளியை (pause)யடுத்து ஒலி யழுத்தம் கொடுக்கப்படும் முறையில் பொருள் வேறுபடும். அத் தகைய இடைவெளி முற்றின் பின் உள்ள இடைவெளி, எச்சத் தின்பின் உள்ள இடைவெளி என இருவகைப்படும். முறையே அவை முற்றுப்புள்ளி, கால்புள்ளி ஆகியவற்ருல் குறிக்கப்படும்.

II பொருளன் இயல் (Morphology)

சொல்லாக்கம் (அடிச்சொல், ஒட்டுநிலேயமைப்பு)

ஒலி தனித்தோ தொடர்ந்தோவந்துபொருள்தரின் அதனைப் பொருளசை என்பர். ''எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின் பதமாம்'' என்பது நன்னூலார் விளக்கம். மொழி யியலார் கருத்தும் அம்முறையிலேயே அமைந்துளது. *

பொருளசை இருவகைப்படும். தாமே தனித்துப் பொருள் தருவன உரிமைப்பொருளசை என்றும்,தனித்துப்பொருளின்றிப் பிறசொல்லோடு சேர்ந்தே பொருள்தருவன சார்புப்பொருளசை என்றும் கூறப்படும்.

செல், படி—உரிமைப் பொருளசை.

கிறு, ஆன்—சார்புப் பொருளசை.

நன்னூலார் பதவியலில் ஆறு உறுப்புக்களேக் கூறுவார், பகுதி, விகுதி, இடைநிலே, சந்தி, சாரியை, விகாரம் என்று.

---

* Morphemes are the smallest individually meaning ful elments in the utterances of a language—Hocket

Koviloor Digital Library 34343

அடிச்சொல் பகுதியாகும். ஏனையவை பின் இணைப்புக்களாகும்.

அடிச்சொல் முதலில் நிற்க அதனையடுத்து ஏனையவை இணையும்.

படி+த்+த்+ஆன்=படித்தான்

ஆங்கிலம் முதலிய இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் இவ்விணைப்புச் சொற்கள் அடிச்சொல்லுக்கு முன்னும் வரும். ஆயின் திராவிடமொழியில் இவ்விணைப்பு பின்னரே இணையும்.

தமிழில் அடிச்சொல் இலக்கண நூலார் படைப்பல்ல. அவை தொன்றுதொட்டு மக்களிடையே வழங்கி இலக்கியத்தில் இடம் பெற்றதாகும். வினை அடிச்சொற்கள் அனைத்தும் ஏவலாக வருவதை நன்னூல் கூறும். இவ்வியல்பு பிராகூயில் இன்னும் காணப்படுகிறது.

அடிச்சொற்களில் பெயர்,வினை என்னும்வேறுபாடு தொடக்கத்தில் இல்லை.

பூ, காய், சொல், மலர், அடி,கடி முதலிய சொற்கள் பெயராகவும் வினையாகவும்வரும்.எனவே மொழியின் தொடக்கத்தில் பெயர், வினை என்ற பாகுபாடு இல்லாமல் இருந்து பின்னர் ஏற்பட்டு இருக்கவேண்டும் என்பர்.

மொழியின் மூவகை நிலை

சொற்கள் உருவாகும் முறையை ஒட்டி மொழி மூவகையாகக் கூறப்படும்.

1) தனிநிலை 2) ஒட்டுநிலை 3) உட்பிணைப்புநிலை

தனிநிலை:— சொற்கள் ஒன்றோடொன்று ஒட்டாமல் தனியே நின்று முற்றுச் சொற்றொடராக அமைந்து பொருள் உணர்த்தும் நிலை தனிநிலை எனப்படும்.

அடிச்சொல்லே தனித்து நின்று சொல்லாகும். அம்மொழியில் எல்லாச்சொற்களும் அடிச்சொல்லாகும். விகுதி,இடைநிலை முதலிய துணைச்சொற்கள் இல்லை. தமிழில் கல்பார்,பூதாபோன்ற தொடர்கள் இத்தகைய தனிநிலையமைப்புடையன.

ஒட்டுநிலை:— அடிச்சொற்களோடு இணைப்புக்கள் பல ஒட்டி நிற்கும் நிலை ஒட்டுநிலை ஆகும். அடிச்சொற்கள் சிதைவதில்லை.

Koviloor Digital Library

கண்+அன்=கண்ணன்
பார்+த்+த்+ஆன்=பார்த்தான்

சித்தியமொழியினம், மலேயா, பாலினேசியன், சப்பானிய மொழி,கொரியமொழி ஆகியவை ஒட்டுநிலையமைப்புடையவை. திராவிடமொழியும் ஒட்டுநிலையமைப்புடையவையே.

உட்பிணைப்புநிலை:— அடிச்சொற்கள் சிதைந்து உருத் தெரியாமல் ஒன்றுபட்டுப் பிணைந்திருத்தல் உட்பிணைப்பு எனப்படும். இவ்வகை மொழியில் அடிச்சொல் தெளிவாயிரா. பகுதி, விகுதி எளிதில் பிரித்தறிய முடியாது.

ஐரோப்பிய மொழிகள், சமசுக்கிருதம் முதலியவை உட்புணைப்பு நிலையுடையன. இவற்றின் பகுதி ஒன்றே பலவகையாகப் பிரிந்து பலவகைப் பொருள் உணர்த்தும்.

So-like—Such
Who-like—Which என்று உட்பிணைப்பு நிலையில் சேரும் என்பர்.

கொண்டு+வா=கொணு. காமம்+வரு=காமறு போன்ற சில தமிழ்ச்சொற்களில் உட்பிணைப்பு நிலை காணப்படுகிறது.

அடிச்சொல்லோடு சேரும் இணைப்புக்கள்

அடிச்சொல்லோடு இணைபவை மூவகையின. 1) ஒலித்துணை ஆவன. 2) பொருள் சிறப்புப்பயப்பன. 3) இலக்கண வேறுபாடு உணர்த்துவன.

பவணந்தியார் பதவியலில் கூறும் சாரியை, சந்தி, விகாரம் என்பன ஒலித்துணையாக வருபவை. விகுதி, இடைநிலைகள் இலக்கண வேறுபாடு உணர்த்துவனவாம். பகுதி அடிச்சொல்லாகவோ பொருள் சிறப்புப் பயக்கும் இணைப்புக்கள் சேர்ந்த அடிச்சொல்லாகவோ இருக்கும்.

அடிச்சொற்கள் ஒலிப்பதற்கு எளிமையாக மாற்றுவதற்குச் சிலஒலிகள் சேரும்.அவற்ருல் பொருள் மாறுபடுவதில்லை.அவை ஒலித்துணையாக வருவனவாம். பெரும்பாலும் உயிர்களே ஒலித்துணையாக வரும்.உயிர்களிலும் உகரமே பயின்றுவரும்.குற்றியலுகரம் அங்ஙனம் ஒலித்துணையாக வருவதாகும்.

 Koviloor Digital Library

தமிழ், தெலு, கன் ஆகிய மொழிகளில் எல்லாச் சொல்லும் பெரும்பாலும் உகரத்தில் முடிந்திருக்கும்.

சில அடிச்சொற்களோடு விகுதிகள் சேர்ந்து பொருள் மாற்றம் ஏற்படுத்தும். அவைகள் பொருட்சிறப்புப் பயப்பனவாம்.

அழு - அழுகு - அழுங்கு - அழுக்கு - அழுந்து - அழுத்து அழுகை.

நள் - நட்பு - நண்பன் - நண்ணூர் - நட்டார்,

பால், இடம், எண், காலம், தன்வினை, பிறவினை, எதிர்மறை ஆகியவை உணர்த்தச் சேர்பவை இலக்கண வேறுபாடுணர்த்துவனவாம்.

அடிச்சொற்களோடு இவ்வுறுப்புக்கள் சேரும்போது அடிச்சொற்கள் சிதையாமல் இருப்பதே, திராவிடமொழியின் இயல்பாகும். ஆயின் சில சொற்களில் சிலவேறுபாடுகள் மட்டும் ஏற்படுவதுண்டு.

இணைப்புக்களாக இன்று பயன்படுபவை ஒருகாலத்தில் தனிச்சொல்லாக இருந்து பின்னர் மாறியவை ஆகும். பொன்> இரும்பொன்> இரும்பு மான்> பரிமான்> பரிமா.
சில பிறழ்பிரிப்பால் தோன்றியுள.

ஆகு+இன்று> ஆகின்று - கின்று.

1. பெயர்

சொற்களில் பொருள்களைக் குறிப்பன பெயர்ச்சொல் எனப்படும். செயலைக்குறிப்பன வினைச்சொல் எனப்படும். வேற்றுமை ஏற்பது பெயர் என்றும் காலம் உணர்த்துவது வினை என்றும் மொழியியலார் கூறுவர்.

திராவிடமொழிகளில் பெயர்ச்சொற்கள் திணை, பால், எண், இடம் உணர்த்தும்.

திணை

தமிழில் திணை மூவகையாகக் கூறப்படும். உயர்திணை, அஃறிணை, விரவுத்திணை என்பன அவை.

Koviloor Digital Library

பகுத்தறிவுடைய மனித இனத்தை உயர்திணை என்றும் ஏனைய உயிரினங்களையும் உயிரில்லா இனங்களையும் அஃறிணை எனப்பிரிப்பர் தமிழ் இலக்கணிகள்.

திராவிட மொழிகளில் திணை, பால், எண் இடம் ஆகியவை தனித்தனியே உணர்த்தப் படுவதில்லை. படர்க்கையில் திணை, பால், எண், இடம் ஆகியவற்றை ஒரே விகுதி உணர்த்திவிடும். தன்மை முன்னிலையில் ஒருமை பன்மை மட்டும் உணர்த்தப் படும்.

2. பால் பகுப்பு

சுட்டுப்பெயர்கள், ஆக்கப்பெயர்கள் ஆகியவை பால் உணர்த்தும் ஈறுகளைக் கொண்டுள்ளன.

பால்வேறுபாடு உயிர் உடையவை, உயிர் அற்றவை என்ற அடிப்படையிலோ, ஆண், பெண் என்னும் உடலமைப் பின் அடிப்படையிலோ வேறு வடிவம், பண்பு அடிப்படையிலோ அமையவில்லை. மன உணர்வை அடிப்படையாகக் கொண்டுள் ளது என்பார் பிளாக்.

தமிழில் ஐந்துவகைப் பால் பகுப்பு உளது.



மலையாளம், கன்னடம், துளுவிலும் இப்பகுப்பே உளது.

தெலுங்கில் 1] ஆண்பால்
2] ஆணல்லாப்பால் [Non-Masculine]
3] பலர்பால் [Epicene Plural]

Koviloor Digital Library

4] பலவின்பால் [Neutral Plural]

என நான்கு பகுபபு உளது.

கொண்டா, கோண்டி. கோயா, கூய், குவி, கொலாமி, நாய்கி, பார்ஜி, கதபா ஆகிய மொழிகளில்

1) ஆண் ஒருமை
2) ஆண் அல்லா ஒருமை
3) ஆண் பன்மை
4) ஆண் அல்லாப் பன்மை

எனும் பால் பகுப்பு காணப்படுகிறது.

பிராகூய்மொழியில் மட்டும் பால் பகுப்பு காணப்படவில்லை. எண்பகுப்பே உளது.

அ) ஆண் ஒருமை

தமிழில் 'ன்' - ஆண்பால் விகுதியாகும். அது அன், ஆன், வன், நன், ஞன், இயன். ஓன், அனன், அவன், த்தன், க்கன் எனப்பல மாற்று வடிவங்களைக் கொண்டிருக்கும்.

மலையாளத்தில் - அன், ஆன், ஓன், க்கன் என்பன.
கன்னடத்தில் - ம், ந. அன், உருவிலி உருபு
- இக [iga]
தெலுங்கில் - அன், ன்று, [ண்டு]
துளுவில் - எ, இகெ [ige]
குடகுமொழியில் - ஏன்.

திராவிடமொழி பலவற்றிலும் காணப்படும்விகுதிகள் அன், வன், க்கன், இகன், அகன், அவன், அந்து, அக், த்தன் என்பனவாகும்.

அவற்றுள் அன், வன், கன் ஆகியவை மூலதிராவிட விகுதிகளாகக் கருதப்படும்.

அன் விகுதி பெரும்பாலான மொழிகளில் உளது.

தமிழ் - மகன் துளு - மகெ (mage)
மலை - மகன் தெலு - மகடு (magiḍu)
கன் - மகன்
குடகு - மொவென்

வன் என்னும் விகுதி கள்வன், செல்வன் ஆகியசொற்களில் உளது. தென், வடதிராவிடமொழிகளில் இவ்விகுதி உள்ள

Koviloor Digital Library

தால் மூல திராவிட விகுதியாகக் கருதப்படும்.

க்கன் - தென், நடுதிராவிடமொழிகளில் உளது. மூல திராவிட மொழிக்குரியதாகக் கருதப்படும்.

அகன் - தோடா, பெங்கோ மொழியில் இவ்விகுதி உளது.

தமிழில் உள்ள ஆன்விகுதி அகன் என்பதிலிருந்து வந்த தென்பார் திரு. S, V. சண்முகம்.

தமிழ், மலே. குடகு - தட்டான்
தோடா - தொட்க்ன்

தட்டகன் என்பதே மூலவடிவம் ; அது தட்டான் என மாறிய தென்பர்.

பெருமகன் > பெருமான்
கோமகன் > கோமான்

என்னும் வடிவங்களும் அவ்வாறு மாறியுள.

இகன் எனும் விகுதி தென்திராவிடமொழிகளில் அமைந் துளது. (தமி. வணிகன்)

(கன். கணிக (ga:niga)
(துளு. கணிகெ.)

அவன் - தமிழ், துளு, மலே மொழிகளில் உளது.

அந்து - நடுதிராவிடமொழிகளில் மட்டுமே உளது. அது அன் என்ற வகுதியோடு அஃறிணை விகுதி து சேர்ந்தமைந்த தாகும்.

அக் - கொலாமி, நாய்கி, பார்ஜி, கதபா மொழிகளில் உளது.

த்தன் - ஒருத்தி எனும் வடிவத்தைப் பார்த்து அமைந்த ஒருத்தன் எனும் சொல்லில் இவ்வடிவம் உளது.

கன், வன், அன் என்னும் மூன்றிலும் ஓர் ஒழுங்கு காணப் படுகிறது.

வன் — ளகரத்தையடுத்து [கள்வன்]
அன் — பிற மெய்யையடுத்து.
கன் — உயிர்களையடுத்து.

தமிழில் கன் - இடைக்காலத்தில் மட்டுமே காணப்படுகிறது. [சிறுக்கன்]

Koviloor Digital Library

குடகு மொழியில் கன் — கெ
அன் — எ

என மாறியுள. துளுமொழி னகாத்தை இழந்து எ, வெ, இகெ, கெ எனும் வடிவங்களைக் கொண்டுளது.

தெலுங்கில் அகரம் மட்டும் உளது. (அண்ண, மக) அன், கன் என்பவற்றோடு 'து' சேர்ந்து வருகிறது.

குருக்கில் உள்ளச (s) விகுதியின் தோற்றம் விளங்கவில்லை.

ஆ) பெண்பால்

பெண்பால் எனும் தனிப்பகுப்பு பெங்கோ, தமிழ், கன், கபச, குருப்பர், குடகு, மால்டோ, கோதா ஆகிய மொழிகளில் காணப்படுகிறது. எஞ்சிய மொழிகளில் பெண், அஃறிணையோடு சேர்த்துப் பேசப்படும்.

தமிழில் அள், இ என்பன பெண்பால் விகுதிகள் ஆள், ஒள், த்தி, ச்சி, வி, மி, ஆத்தி, அனி என்று பல மாற்று வடிவங்களைக் கொண்டுள.

குடகு — அதி, இ, சி, அசி, அ.
கன் — அள், இ, தி.
துளு — இ. தி, எத்தி.
தெலு — 7 ஆம் நூற். கல்வெட்டில் 'ஆளு' - புதுத் தெலுங்கில் 'அளு'.
மலை — இ, அள், த்தி, அத்தி, ஆத்தி, அம்மை.

ஆண்பால் விகுதிகளைப்போலப் பெண்பால் விகுதிகள் பரவலாகவோ ஒருங்காகவோ காணப்படவில்லை.

த்தி, அள், க்கி, அத்தி, அகத்தி, அச்சி என்பன திராவிட மொழிகளில் காணப்படுகின்றன.

த்தி, இ, அள் என்பன மூலதிராவிட வடிவங்களாகக் கருதப் படும்.

த்தி — ஒருத்தி, புலைத்தி, கொசத்தி முதலிய சொற்களில் உளது. ஒவ்வொருமொழியிலும் ஒவ்வொரு சொல்லில் இவ் விகுதி காணப்படுகிறது.

அன் — சில சொற்களில் மட்டுமே இவ்விகுதி உளது.

Koviloor Digital Library

தென், நடுதிராவிடமொழிகளில் 'மகள்' எனும் ஒரே சொல் இவ்விகுதியைப் பெற்றுளது.

நடுதிராவிடமொழிகளில் 'தள்' என்று இவ்விகுதி அமைந்துளது.

இ — இதுவே பரவலாகக் காணப்படுகிறது. 'மாமி' எனும் சொல் தமிழ், தோடா, குடகு, துளு, கொலாமி, பார்ஜி, நாய்கி மொழிகளில் காணப்படுகிறது.

இகரம் வினைமுதலைக் [agentive Noun] குறிக்கவும் பயன்படுவதுண்டு.

[எ-டு] திண்ணைதூங்கி. மரங்கொத்தி

க்கி :— முதுக்கி எனும் சொல் கோதா, கன், குடகு மொழிகளிலும். சிறுக்கி எனும் சொல் தமிழ், மலையாளத்திலும் உள.

அத்தி :— தென்னிந்தியத் திராவிட மொழிகளிலும் தெலுங்கிலும் இவ்விகுதி உளது.

தமிழ் — குறத்தி.
கன் — கொறவதி

அகத்தி :— தோடாமொழியில் மட்டும் இவ்விகுதி உளது. தமிழ், மலையாளத்தில் 'ஆத்தி' உளது.

அச்சி :— இக்காலத் தமிழ், கோதம், குடகு மொழியில் அச்சி உள்ளது.

மி ;— தமிழில் உளது.

மலையாளத்தில் உள்ள அம்மை, சிறுமி என்பது மரியாதையைக்குறிக்க வழங்கும் (உமையம்மை) த்தி, இ. அள் என்னும் மூல விகுதிகள் மூலதிராவிட மொழிக்குரியன. அவற்றிடையே ஓர் ஒழுங்கு முறை காணப்படுகிறது.

அள் — ககரத்தையடுத்து
த்தி — உகரத்தையடுத்து
இ — மூக்கினத்தையடுத்து.

தமிழ், கன், துளு, தெலுங்கு மொழிகளில் 'அய்' விகுதி காணப்படுகிறது.

தமிழ் — பரத்தை, அத்தை
கன் — காதலெ, நீரெ [எ]

Koviloor Digital Library

துளு — அம்ம [அ]
தெலு — கொரவத [த]
பாருத [த]

அக்கை, தங்கை, அம்மை, அத்தை முதலிய பெண் உறவுப் பெயர்களில் உள்ள விகுதி பிறசொற்களுக்கும் பரவியிருத்தல் வேண்டும் என்பர்.

த்தி என்பது அண்ணமெய்யாகி ச்சி என்று தமிழ், மலே, கோதமொழிகளில் வழங்குகிறது. (எடு) பறைச்சி.

குடகு இறுதி ளகரத்தைச் சில இடங்களில் இழக்கிறது.

ஆண்பால் விகுதிக்குப்பின் பெண்பால் விகுதி சேர்ந்து அருகிக் காணப்படுகிறது.

[எ-டு] பார்ப்பனி, (தமி, மலே)
தோழந்தள் — நடுதிராவிடமொழிகள்.

இருபெண்பால் விகுதிகளை இணைப்பதும் உண்டு. [எ-டு] மைத்துனி - மைத்தினிச்சி. (தமிழ், மலே, குடகு) கூனித்தி [மலே]

இ) பலர்பால்

தமிழ், கன், கசபா, தெலு, குருக், மால்டோ, குடகு, மலேயாள மொழிகளில் பலர்பால் விகுதி அமைந்துளது.

ஆண்பன்மை, பெண்பன்மை எனும் பகுப்பு பெங்கோ, கூய், குவி, கோயா மொழியில் காணப்படுகிறது.

தமிழில் ரகரமும் கள விகுதியும் பலர்பால் காட்டும். அர், இர், வர், நர், ஞர், அவர், இயர், ஆர், ஓர், மார், அனர் என்று மாற்று வடிவங்கள் பல உள.

மலே — அர், ஆர், வர், ஓர், அவர், மார், கள்
தோடா — குள், ர்
குடகு — அ [ர்], க (ள்), ப [ர்], வெ [ர்],
கன் — அர், வர், பர், டிர், லிர், இர், கள், ஆர்.
துளு — ரு, ரி, குளு, க்ளு, ளு, வெரு.
தெலு — உரு, ரு, லுரு, அள், உள், கள்

தெலுங்கு தவிர ஏனைய நடுதிராவிட மொழிகளில் ஆண் பன்மை உளது. தோடா, பிராகூய் தவிர ஏனைய பிற மொழிகள் பலர்பாலைக் கொண்டுள.

Koviloor Digital Library

பலர்பாலே மூலதிராவிடத்திற்குரியது என்றும் ஆண் பன்மை பிற்கால வளர்ச்சி என்றும் விளக்குவார் திரு. சுப்ர மணியம்.

அர், வர், கள், ள் என்பன மூலதிராவிட விகுதிகளாகக் கருதப்படும்.

அர் :— தமிழ், மலே, குடகு, கன், பெங்கோ, கொலாமி, நாய்கி, குருக், மால்டோ மொழிகளில் இவ்விகுதி உளது. தெலு, கொண்டா மொழிகளில் ரகரம் மட்டுமே உளது.

தமிழ், கன்னடத்தில் இர் விகுதியும் கோண்டி, கோயா மொழிகளில் ஈர் விகுதியும் உள. தமிழ், கன்னடத்தில் வளை நா ஒலிகளை [ட், ண், ள்] அடுத்து இர் விகுதி வருகிறது. (மகளிர், கேளிர்.) அர் விகுதியின மாற்று வடிவமாக இது கொள்ளப் படும்.

பெண்டிர் என்னும் சொல்லில் உள்ள 'டிர்' கன்னட உறவுப் பெயர்களில் பன்மை உணர்த்தப் பயன்படுகிறது.

அர் என்பது கொலாமி நாய்கி, பார்ஜி, கதபா மொழிகளில் எர் என்று மாறி ஆண் பன்மை உணர்த்தும்.

வர் :— எண்ணுப்பெயர்களில் இவ்விகுதி பெரும்பாலும் வரும்.

மூக்கினத்தையடுத்துத் தமிழ் மலையாள எண்ணுப் பெயர் களில் 'மர்' விகுதி வரும். [எண்மர்] ஏனைய இடங்களில் 'வர்' வரும்.

வுரு என்பது இடைக்காலத் தெலுங்கிலும் கொலாமியிலும் குரு [guru] என வழங்குகிறது.

வர் என்பது அனைவர் என்ற சொல்லிலும் பகைவர், கள்வர் முதலிய சொற்களிலும் காணப்படுகிறது.

கள் [ள்] :—

அஃறிணைக்குரியதாகத் தொல்காப்பியர் கூறும் இவ்விகுதி உயர்திணைக்கும் பயன்படத் தொடங்கியது.

அர் விகுதி மரியாதைப் பன்மையை உணர்த்தத் தொடங் கிய பிறகு எண்பன்மையைக் குறிக்கக் 'கள்' விகுதி சேர்க்கப் பட்டதென்பர். தமிழ், தெலு, கன், மலையாள மொழிகளில் பலர் பால் விகுதியை அடுத்தே இவ்விகுதி சேர்கிறது.

Koviloor Digital Library

மார் :— மார்விகுதி வினைச் சொல்லில் செயல் எஞ்சு நிலை குறிக்க வருவதே பெரும்பான்மை. பெயர்களோடு அருகி வழங்கும். எனவே வினையிலிருந்து பெயருக்கு இவ்விகுதி வந்திருக்கக் கூடும்.

இவ்விகுதி இக்காலத் தமிழில் வழங்குகிறது. [தாய்மார், அண்ணன்மார்]

அவர், ஓர் :— தமிழிலும் மலையாளத்திலும் மட்டுமே இவ்விகுதிகள் உள. தமிழில் ஒன், ஒள் எனும் விகுதிகள் உள. அவன், அவள், அவர் என்பனவே ஒன், ஓள், ஓர் என மாறின என்பர்.

தமிழ் இலக்கணிகள் செய்யுளில் ஆ ஓ வாகும் எனக் குறித்துள்ளனர்.

மரியாதைப்பன்மை தனி ஒருவரை மரியாதையோடு குறிப்பிடும்போது ஒருமை விகுதிக்குப்பதில் பன்மை விகுதியைப் பயன்படுத்துவதுண்டு.

தமிழில்மரியாதைப்பன்மை பேச்சுவழக்கிற்கேஉரியதெனத் தொல்காப்பியர் கூறுகிறார். பழந்தமிழில்மரியாதைப் பன்மை காணப்படவில்லை. ஆயின் பாடலடிக்குறிப்புக்களில் உள்ள புலவர் பெயர்களில் காணப்படுகிறது. சிலம்பில், மகனார், மகளார் என்னும் வழக்கு உளது. வீர சோழியத்தில் ஆண் மரியாதைப் பன்மை, பெண்மரியாதைப் பன்மை என இரு பிரிவு கூறப்படுகிறது. 16ஆம் நூற்றாண்டு முதல் பெயர்களோடு அவர்கள் சேர்த்து மரியாதை உணர்த்தப்படும்.

மலையாளக் கல்வெட்டில் அர், கள் என்பன மரியாதை உணர்த்தும். பெயர்களோடு அவர்கள் சேர்த்து மரியாதை உணர்த்தும் நிலை இக்கால மலையாளத்தில் உளது.

கன்னடம் அர், விர், டிர், களு என்பனவற்றை மரியாதைக்குப் பயன்படுத்தும். தற்காலக் கன்னடத்தில் பெயர்களோடு அவர் சேர்க்கப்படும்.

துளு பலர்பால் விகுதியை மரியாதைக்கும் பயன்படுத்துகிறது.

தெலுங்கு, ரு, று, ளு, ஆர், காரு என்பவற்றைப் பயன்படுத்து

 Koviloor Digital Library

கிறது. இக்காலத் தெலுங்கில் காரு அதிகமாக வழங்கப்படுகிறது.

தமிழ், தெலு, மலே, கன் முதலிய இலக்கிய மொழிகளில் அருகியும் இந்நிலே காணப்படுவதை நோக்க இது பிற்கால வளர்ச்சி எனத் தோன்றுகிறது.

ஒருவர் என்ற சொல்லும் சிறப்புப் பெயரோடு ஆர் சேர்க்கும் நிலேயும் பழந்தமிழில் இருப்பது குறிக்கத்தக்கவை.

உ) பெண்பன்மை

கோண்டி, கோயா, கொண்டா, கூய், குவி, பெங்கோ ஆகிய நடுதிராவிடமொழிகளில் மட்டுமே இப்பெண் பன்மை உளது. பெங்கோவில் மட்டுமே வினேயிலும் பெண்பன்மை விகுதி உளது.

கோயா — sk, ku
பெங்கோ — k, ik
கூய் — ska, saka
குவி — ska
கோண்டி — hk

சகர விகுதியே பன்மையைக் குறிக்குமென்பார் திரு. சுப்ரமணியம். ஆயின் அது படர்க்கை விகுதியே என்றும் அதிலிருந்து பன்மை உணர்த்தத் தொடங்கிய தென்றும் கூறுவார் திரு. சண்முகம்.

ஊ) பலவின்பால்

தமிழ் — கள் விகுதியை அஃறிணேயில் சேர்க்கலாம் என்று தொல்காப்பியர் கூறுகிறுர். பழந்தமிழில் கள் விகுதி அருகியே காணப்படுகிறது. 'கள்' விகுதி இன்றியே பலவின்பால் உணர்த்துவதைப் பால்பகா அஃறிணேப் பெயர் என்பர் இலக்கணிகள்.

மலே - கள் விகுதி இணேப்பது கட்டாயமில்லே.
குடகு - க [ள்]
கன் - கள் (gal)
துளு - ளு, குளு, க்ளு.
தெலு - உள், ளு, லு

Koviloor Digital Library

கொலாமி, நாய்கி, பார்ஜி,கதபா முதலிய மொழிகளிலும் இவ்விகுதியின் வடிவங்கள் காணப்படுகின்றன. எனவே மூல திராவிட விகுதிகளாக கள், ள் என்பன கொள்ளப்படும்-

கொண்டா, கூய், குவி, கோண்டி முதலிய நடுதிராவிட மொழிகளிலும் வடதிராவிட மொழியாகிய பிராகூயிலும் ககரம் காணப்படுகிறது. எனவே மூல திராவிட வடிவத்திலும் ககரம் இருத்தல் வேண்டும். எனவே 'கள்' என்பதே மூலதிராவிட வடிவம் என்பர்.

கொலாமி, பார்ஜி, கதபா மொழிகளில் 'சில்' எனும் விகுதி காணப்படுகிறது. படர்க்கை விகுதியாகிய சகரம் பன்மைக்குப் பயன்பட்டமை முன்னரே கூறப்பட்டது.

பார்ஜி, கதபாவில் 'தில்' என்பது பலவின்பால் விகுதியாக வருகிறது. இதில் உள்ள தகரம் சாரியை ஆகலாம் என்பர்.

பெரும்பாலான தென்திராவிட மொழிகள், அனைத்து வடதிராவிடமொழிகள், நடுதிராவிடமொழிகளில் கூய் ஆகிய வற்றில் அஃறிணைப் பன்மைப் பெயரோடு 'கள்' சேர்ப்பது கட்டாயமில்லை. கூய்தவிரப் பிற நடு திராவிட மொழிகளில் கட்டாயமாகும். அந்நிலை பிற்கால வளர்ச்சியாகும்.

எ) ஒன்றன்பால்

விகுதி எதுவும் சேராத பெயர்கள் அனைத்தும் அஃறிணை ஒன்றன் பாலாகவே கருதப்படும். சுட்டு, வினா முதலிய ஆக்கப் பெயர்களுக்கு மட்டும் ஒன்றன்பால் விகுதிகள் சேரும்.

தமிழ் - 'து' அதன் மாற்று வடிவங்களாக டு, றி.
கன்னடம் - d, அம்,
தெலுங்கு - di -அதி,
மலையாளம் - அம் -
துளு - உ

தகரமே ஒன்றன்பால் விகுதியாகப் பயன்படுகிறதெனலாம்.

3. வேற்றுமை

தமிழ், மலையாளம்,கன்னடம்,தெலுங்கு மொழிகளில் எட்டு வேற்றுமைகள் இருப்பதாக இலக்கணிகள் கூறுவர்.

Koviloor Digital Library

(a) எழுவாய் வேற்றுமை

செயலை இயற்றும் கருத்தாவை இவ்வேற்றுமை குறிக்கும்.

தமிழில் எழுவாய் வேற்றுமைக்குத் தனி உருபுகள் இல்லை.

மலையாளம், தெலுங்கு, கன்னடமொழிகளிலும் எழுவாய் வேற்றுமைக்குத் தனி உருபுகள் இல்லை. பெயரே திரிபின்றி எழுவாயாக வரும்.

(b) செயப்படுபொருள் வேற்றுமை (accusative)

தமிழில் ஐ உருபாகும். உயர்திணைப் பெயர்களோடு இவ்வுருபு சேர்வது கட்டாயமாக உளது. மூவிடப் பெயர்களில் பழந் தமிழில் இவ்வுருபு சேர்வதில்லை. இன்று சேர்ந்து வரும். அகரம் உருபாக வருகிறது. [காவலோனக் களிறஞ்சும்மே]. 'அம்' என்பதிலிருந்து அகரம் வந்ததென்பார் தெ. பொ. மீ.

மலையாளம் - ஐ, எ - அஃறிணைப்பெயர்கள் உருபின்றியே வருதல் பெரும்பான்மை.

கன்னடம் - ஆன், அன், அம், ஆ, அ. அஃறிணைப் பெயர் களுடன் வரவேண்டுமெனும் கட்டாயமில்லை.

துளு - னு, அனு
தெலுங்கு - ன், னு, இன் -
உயிர்களின் பெயர்களுடன் இணைவது கட்டாயமாகும்.

பெங்கோ, கதபா, கொண்டா ஆகிய மொழிகளில் நான்காம் வேற்றுமைக்கும் செயப்படுபொருள் வேற்றுமைக்கும் ங், இங், அங் என்பன உருபுகளாக உள.

எல்லாத் திராவிடமொழிகளின் உருபுகளைக் காணும்போது அன், அய், ங்க் எனும் மூன்று வடிவங்கள் காணப்படுகின்றன.

அன் :— தமிழ், மலையாளம், தவிரப் பிற 15 திராவிட மொழிகளில் இவ்வுருபு உள்ளது. னகரமெய் எல்லா மொழி களிலும் உளது. அகர உயிர் சில மொழிகளில் மறைந்தும் சில மொழிகளில் இகரமாகவும் எகரமாகவும் மாறும். சிலவிடத்து அகரம் உகரமாகவும் மாறியுளது. மூன்று மொழிக்குழுவிலும் அகரம் காணப்படுவதால் மூல திராவிட வடிவமாக 'அன்' கொள்ளப்படும்.

Koviloor Digital Library

கோதம் தோடா மொழிகளில் அகரம் மறைந்துளது. மொழி முதலில் தவிரப் பிற இடங்களில் உயிரை இழக்கும் பொதுப் போக்கே இதற்குக் காரணமென்பர். நடு திராவிட மொழிகள் பலவற்றில் பிறழ்பிரிப்பினுல் அகரம் விடப்பட்டு னகரமே உருபாகக் கொள்ளப்பட்டது.

அய் :— தமிழ், மலையாளத்தில் மட்டுமே உளது. மலையாளத்தில் உள்ள எகரம் இதன் திரிபே என்று கொள்ள இடமிருந்தாலும் அகரத்தின் திரிபாகவே அது கொள்ளப்படும்.

குடகில் உள்ள அகரம், கூய், குவியில் உள்ள இகரம் பிராகூயில் உள்ள எகரம் ஆகியவை இதிலிருந்தே வந்திருக்க வேண்டும்.

ங்க் :— கொண்டா, பெங்கோ, கதபா மொழிகளில் உள்ள இவ்வுருபு நான்காம் வேற்றுமை உருபே யன்றிப் பிறிதில்லை.

எனவே அன், அய் என்பனவே செயப்படு பொருள் உருபுகளாம். ஒன்றுவரும் மொழியில் மற்றென்று வருதில்லை. இவற்றில் ஒன்று மூலவடிவமாகவும் மற்றென்று அதன் திரிபாகவும் கொள்ளப்படும்.

கால்டுவெல் கன்னடத்தில் உள்ள 'அம்' மூல வடிவம் என்றும் அதிலிருந்தே பிற உருபுகள் வந்தன என்றும்கூறுவார். திரு. இராமசாமி ஐயரவர்கள் அன் என்பதே மூலவடிவம் என்று கூறுவார். ஏழாம் நூற்றுண்டுக் கன்னடத்திலும் அனி உருபு இருப்பதை அவர் காட்டுகிறுர்.

அன் என்பதே அய் என மாறியதெனலாம்.

அஃறிணைப் பெயர்களோடு செயப்படு பொருள் வேற்றுமை உருபு சேர்வது கட்டாயமில்லை எனும் நிலை தமிழ், மலையாளம், கன்னடம், கூய், பிராகூய் மொழிகளில் உளது. அது மூல திராவிடமுறை என்பர்.

(c) கருவ்ப்பொருள் [Instrumental]

தமிழ் - ஆன், ஆல், கொண்டு
மலையாளம் - ஆல், கொண்டு
குடகு - கொண்டு, கைஞ்ச
கன்னடம் - இம், இன், இந்த

Koviloor Digital Library

துளுவம் - da, ட, அட
தெலுங்கு - ன், ஊன், சேத

பார்ஜியில் ஒட் கொலாமியில் அட் (ad) உருபாக உ ள. தமிழிலும் பழங்காலத்தில் எரு கருவிப் பொருளில் வந்துள்ளது.

ஆன் | ஆல், ஒடு | ஒடு, ன் எனும் மூன்று வடிவங்களே காணப்படுகின்றன.

ஆன் | ஆல் என்னும் உருபு தமிழ், மலையாளம், கோதா, பார்ஜி, கொலாமி, பிராகூய் மொழிகளில் உளது. துளுவில் உள்ள ட இதனோடு தொடர்புடையதெனக் கால்டுவெல் கூறிய போதிலும் சுப்ரமணியம் அதனை ஏற்கவில்லை.

உயிர் தொடர்ந்த னகரம் கன்னடம், தெலுங்கு, கொண்டா மொழிகளில் உருபாக வருகிறது. பெங்கோவில் உள்ள 'அங்' இதனோடு தொடர்புடையது. தமிழ், மலையாளம், கன்னடத்தில் இன் கருவிப் பொருளில் வரும். கோத மொழியிலும் 'ன்' உளது.

ஆன், ஒடு, ன் ஆகிய மூன்றும் தமிழிலும் கோதத்திலும் மட்டுமே உள. பிராகூயில் முதலிரண்டு உருபுகள் உள. பிராகூயில் முதலிரண்டு உருபுகள் உள. இவை ஒன்றுக் கொன்று தொடர்புடையதாகக் காட்ட இயலாததால் மூன்றுமே மூலதிரா விடத்திற்குரியதெனக் கூறப்படும்.

தமிழ், கோதம் தவிர ப்பிற மொழிகள் ஒன்றையோ இரண் டையோ கொண்டுள.

கொள் என்னும் வினையின் அடியாகத்தோன்றிய 'கொண்டு' எனும் வினையெச்சம் கருவிப் பொருளில் மலையாளம், தமிழ், குடகு மொழிகளில வருகிறது. இஃது இம்மொழிகளில் ஏற்பட்ட வளர்ச்சியாகும்.

[d] உடனிகழ்ச்சிப்பொருள் [Sociative]

தமிழ் - ஒடு, ஓடு, உடன் -
கருவி, கருத்தா, நீங்கல், இடம், வினையெச்சம் பொருள் களிலும் ஒடு உருபு வருமெனக் காண்கிறோம்.

மலையாளம் - ஒடு, ஓடு, உடன், ஒடுகூட, கூட
குடகு - ஜொடெலி, பக்க, கூட

Koviloor Digital Library

கன்னடம் - ஒடனெ, வெரசு

துளுவம் - ḍa, அட எனும் கருவிப்பொருள் உருபே உடனிகழ்ச்சியிலும் வரும்.

தெலுங்கு - தோ, தொழன், தொழி, தோட

கருவிப் பொருளில் வரும் ஆன் | ஆல், ஒடு | ஓடு எனும் உருபுகளே உடனிகழ்ச்சிப் பொருளில் வருகின்றன. எனினும் ஒடு எனும் உருபே உடனிகழ்ச்சிப்பொருளில் பெரிதும் வழங்கு கிறது. ஒடு+அன் > ஒடன் > உடன் எனும் உருபும் தமிழ், மலையாளம், கன்னடம், படகா மொழியில் காணப்படுகிறது.

இன்றைய தமிழ், மலையாளம், குடகு, படகர் மொழியில் கூட எனும் சொல்லுருபும் காணப்படுகிறது.

கோண்டி - தோழொ

கோயா - தோன்

பிராகூய் - தொ

ஆகியவை ஒன்றற் கொன்று தொடர்புடையதாகத் தோன்று கின்றன.

குருக், மால்டோவில் கனே, குசன் என்பன உடனிகழ்ச்சிப் பொருள் தருகின்றன. 'அன்' எனும் கருவிப் பொருள் உருபே ககரச்சாரியை பெற்று உடனிகழ்ச்சி உணர்த்தின எனலாம்.

கூய்-கெ; பெங்கோ-கொகெ; நாய்கி-நொகொன் ஆகிய வை ஒக என்பதிலிருந்து வந்திருக்கலாம். தமிழில் ஒக்க என்னும் சொல் உடனிகழ்வைக் குறிக்கக் காணலாம்.

(c) கொடைப்பொருள் வேற்றுமை (Dative Case)

தமிழ்—க்கு, க்க-ஆங்கிலத்தில் உள்ள 'to' என்பதன் பொருளிலும் நோக்கம், இடம், ஒப்புப் பொரு ளிலும் வரும்.

மலையாளம்—க்கு, இன்கு, இனுக்கு, இனு, இன்னு. க்கு என்பது இன் சாரியை பெற்று இனுக்குஎன வந்து பின் படிப்படியே இனு என்று மாறிய தென்பர்.

கன்னடம்—கெ, க்கெ, ge, ige, gge. நோக்கம், ஒப்பு, இடம், உடைமைப் பொருள் தரும்.

Koviloor Digital Library

குடகு—கி(gi)-மூக்கினத்தையடுத்து.
கி(ki)-பிற விடங்களில்.
இடப்பொருளும் தரும்.

துளு—ki, ku, gi, gu.
நோக்கமும் இடமும் உணர்த்தும். உறவுப் பெயருக்கு முன் உடைமைப்பொருள் உணர்த்தும்.

தெலுங்கு—கு, கி-நோக்கம், இடம், உடைமை உணர்த்தும்.
பொந்தெ-சொல்லுருபு நோக்கப் பொருள் தரும்.

கொண்டா, பெங்கோ, கொலாமி, பார்ஜி, கதபா மொழிகளில் 'ங்' உருபு உளது.

*க்கு—என்பதே மூலதிராவிட வடிவம் எனலாம்.

ஈற்றில் உள்ள உகரம் ஒலித்துணையாக வந்து பிறகு நிலைத்திருத்தல் வேண்டும்.அது அ,எ,ஏ,இ எனப் பலவாறுமாறியுளது.

தமிழ், மலையாளம், நாய்கி, குரூக் மொழிகளில் 'இன்' நான்காம் வேற்றுமையில் வரும். இடப்பொருள் உருபாகிய 'இன்' இங்கு வந்துவழங்கியதெனலாம்.

நான்கரம் வேற்றுமைப் பொருளாக நெறிப்படுத்தல் (directive) மறைமுகச் செயப்படுபொருள், நோக்கம் முதலியன வாகும்.

நோக்கப்பொருளுக்கு மாட்டு, திறத்து, வயின், பொருட்டு என்பன பழந்தமிழிலும் ஆக என்பது புதுத்தமிழிலும் வரக்காணலாம்.

தமிழ்—பொருட்டு, தெலுங்கு—பொந்தெ இரண்டும் தொடர்புடையன என்பர்.

தோடா—கொய்-கொச்
புதுத்தெலுங்கு—கோசம்
தமிழ்—கோசம், கொசரம் [அதுக்கொசரம்]

என்பன தொடர்புடையன. ககரம் இவற்றில் இருக்கக் காணலாம்.

Koviloor Digital Library

இட, காலப் பெயர்களோடும் பிற பெயர்களோடும் வந்து இடப்பொருள் தருவதுண்டு.

தமிழ், கன்னடம், கோண்டி, கூய், பெங்கோ, கொலாமி ஆகிய மொழிகளிலும் பார்ஜி, கதபா மொழிகளிலும் ஒப்புப் பொருளில் வரும்.

கருவி, கருத்தாப் பொருளையும் தமிழ், கொண்டா, குவி, பெங்கோ, கொலாமி, பார்ஜி முதலிய மொழிகளில் காணலாம்.

உறவுப் பெயர்களோடு உடைமைப் பொருள் தரும் நிலை தமிழ், பழங்கன்னடம், தெலுங்கு, பெங்கோ ஆகிய மொழிகளில் காணப்படுகிறது. கன்னியாகுமரித் தமிழிலும் மால்டோவிலும் க்கு—உடைமைப் பொருள் உருபாகவே பயன்படுகிறது.

(f) நீங்கற் பொருள் (Ablative)

தமிழ்—இன்—நீங்கல், ஒப்பு, எல்லை, ஏதுப் பொருளாகும். நின்று, இருந்து எனும் சொல்லுருபுகளும் இடை, வயின், உளி, தலை முதலியசொற்களும் அப்பொருளில் வரும்.

மலையாளம்—இல்நின்று, இல்நின்னு, இன்னு, ஈன்னு ஒப்புப்பொருளில் 'இல்' வருகிறது.

குடகு—இஞ்சி, கயஞ்ச, அல்லி.

கன்னடம்—இவ்வேற்றுமை இல்லை. நீங்கல் பொருள் தர இம் (புரிகெரெயிம்-) என்பது அருகிப் பயன் படுத்தப்படுகிறது.

துளு—த்தி, தி

தெலுங்கு—உண்டி, (பழந்தெலுங்கு) நிஞ்சி [புதுத் தெலுங்கு]

இடப்பொருளுருபை அடுத்து நீங்கல்பொருள் தரும் வினைச் சொல் வரின் அது நீங்கல் பொருளுருபாகக் கருதப்படும். இதை வைத்து இடப்பொருள் வேற்றுமையே போதும்; நீங்கல் பொருளுக்குத் தனி வேற்றுமை தேவையில்லை எனச் சிலர் வாதிடுவர்.

நின்று, இருந்து எனும் வினையெச்சங்களும் நீங்கல் பொருளில் இடப்பொருள் விகுதியை அடுத்து வரும்.

Koviloor Digital Library

ஐந்தாம்வேற்றுமைக்குரிய எல்லை,நீங்கல் பொருளை ஏழாம் வேற்றுமையும் ஏதுப்பொருளை மூன்றும் வேற்றுமையும் தந்த போதிலும் ஒப்புப்பொருளை வேறு வேற்றுமைகள் தர இயலா. எனவே ஐந்தாம் வேற்றுமைக்கு ஒப்புப்பொருளே சிறப்புடைய தெனலாம். தமிழ்,மலையாளம், கன்னடம்,துளு, குருக்,பிராகூய் மொழிகள் ஒப்புப்பொருளைக் கொண்டுள்ளன.

(g) உடைமைப் பொருள் (Genitive)

தமிழ்:— அது,ஆது,உடை எனும் சொல்லுருபு. இன் சாரியை இப்பொருளில் வரும். தொகையாக உருபின்றிப் பெரிதும் வழங்கப்படும். அது, ஆது அஃறிணைக்குரி யவை என்றும் உயர்திணைக்கு கு வரும் என்றும் கூறு வர் இலக்கணிகள்.

கை—எனது.
கைகள் என.

எனும் தொடர்கள் எனது கை
என கைகள்

என்று எழுதப்பட்டபோது பால் காட்டும் விகுதிகள் உடைமைப் பொருள் உருபுகளாகப் பிறழ உணரப் பட்டதால் இந்நிலை ஏற்பட்டதென்பார் P. S. S. சாஸ்திரி.

மலையாளம்:— உடெ, உடைய, இன், டெ.
உருபின்றி வழங்குவதும் உண்டு.

கன்னடம்:— ஆ, அ—அது எனும் உருபினைக் கேசிராச எனும் இலக்கணி கூறுகிறார்.

குடகு:— ட (ḍa) ர

துளு:— அ, ரு

தெலுங்கு:— உருபின்றித்தொகையாக வருவதேபெரும்பகுதி.
மூவிடப் பெயர்களின் பின் ‘அது’ வரும்.

அ, அது என்னும் இரு வடிவங்கள் காணப்படுகின்றன.

அ உருபு தமிழ், கன்னடம், கொண்டா, கோயா, நாய்கி, பார்ஜி,பிராகூய் மொழிகளில் காணப்படுகிறது. கோண்டி, பிரா கூய் ‘ஆ’ உருபைக்கொண்டுள்ளன. பன்மைச்சொல் வேற்றுமை

Koviloor Digital Library

ஏற்குப்போது தெலுங்கில் வரும் அகரம் உடைமைப் பொருள் தருவதேயாகும். கொலாமி, கதபாவில் உள்ள என அகரத்தின் திரிபே.

அது—தமிழ், கன்னடம், கோதம், தோடா, தெலுங்கு, கூய் மொழிகளில் உளது.

அது, அ இரண்டும் மூலதிராவிட வடிவங்களாகக் கருதப் படும்.

உடை எனும் குறிப்புவினை தமிழ், மலையாளம், படகர் மொழி யில் காணப்படுகிறது. குடகு மொழியில் உள்ள ட, ர இதனோடு தொடர்புடையதாகும்.

(h) இடப்பொருள் (Locative)

தமிழ் :— இன் | இல். உயிருடைப்பெயரோடு வருவ தில்லை.

அத்துச்சாரியை இடப்பொருளில் வரும். கண், கால், அகம், புறம் என இடப்பெயர்கள் அனைத்தும் உருபாக வரும். உள் - என்பது 'இடையே' எனும் பொருள் தரும்.

மலையாளம் - இல், உள், அத்து, அகத்து, கால்
கன்னடம் - உள், உள, உள்ளெ, ஒள், அல்லி
குடகு - லி, அல்லி, ஒளிலி
துளு - டி, டு, அடி. டி (di)
தெலுங்கு - அன், அந்து, னி, லோன

அன், இன், ஆன் | ஆல், த்த ஆகியவை மூலதிராவிட வடிவங்களாகக் கருதப்படும்.

உள், கண், பக்கல் என்னும் சொல்லுருபுகள் மூலதிரா விடத்திற்குரியன என்பர்,

த்த் - என்பது சாரியையாக இருந்து தமிழ், மலையாளம், கொண்டா, கொலாமி மொழிகளில் இடப்பொருள்தரப் பயன் படுத்தப்பட்டது.

உள் எனும் சொல்தமிழ், மலையாளம், குடகு, கன்னடம், துளு, தெலுங்கு ஆகிய மொழிகளில் இடப்பொருளுக்குப் பயன் படுகிறது. அது சில மொழிகளில் உகரமாகவும், ஒகரமாகவும் வழங்குகிறது.

Koviloor Digital Library

கன் என்பது தமிழிலும் கன், க என்று பார்ஜியிலும் வழங்குகிறது. கன் என்பது க் + அன் என்று பிரித்து அவண் என்பதில் அண் இடப்பொருள் தருவதை விளக்குவார் பிளாக். அவ்வாறே கால் என்பதையும் க் + ஆல் என அவர் பிரிப்பார், ககரம் சாரியையாகக் கருதப்படும்.

அருகே எனும் பொருள்தரும் பக்கல் எனும் சொல் தமிழ், மலையாளம், கன்னட மொழிகளில் இடப்பொருள்தரப் பயன் படுத்தப்படும். அதே போலப் பிறமொழிகளும் பலசொல் உருபு களைக் கையாள்கின்றன.

[i] விளி வேற்றுமை [Vocative]

தமிழில் விளிப்பொருள் பல்வேறு முறையில் உணர்த்தப் படுகிறது. ஏ, ஈ, ர் சேர்த்தல், ஈற்று னகரத்தை விட்டுவிடல், ஈற்றுயிரை நீட்டல் என்று பலமாற்றங்களுடனும் மாற்றமின்றி யும் விளிஉணர்த்தப்படும்.

மலையாளத்தில் ஏ சேர்த்தும் ஈற்றுமெய் விட்டு உயிரை நீட்டியும் [ராமன் - ராமா] விளிக்கப்படும்.

கன்னடத்தில் எ | ஏ சேர்க்கப்படும்.

துளுவில் அ, எ, ஒ என்பன சேர்க்கப்படும்.

தெலுங்கில் ஆ | அ இணைத்தும் ஈற்றுயிரை நீட்டியும்ஓ | ஒ இணைத்தும் உணர்த்தப்படும்.

ஏ, ஓ எனும் உருபுகள் இணைப்பதையே மூலதிராவிடமுறை யாகக் கொள்வர். தெலுங்கில் உள்ள 'ஆ' ஒகரத்தின் திரிபே என்பர்.

4. முவிடப் பெயர்கள்.

பெயர்களுள் மாற்றுப்பெயர்கள் [Pronouns] தனி அமைப் புடையனவாம். அவை ஆறும் வேற்றுமை ஏற்ற பெயரை யடுத்தோ பெயரடையை அடுத்தோ பிற பெயர்கள் நிற்பதைப் போல் நிற்பதில்லை.

[எ-டு] இராமனுடையவில் என வரும்.

இராமனுடைய நான் எனவராது.

மாற்றுப் பெயர்களுள் முவிடப்பெயர்களும் சுட்டுவினுப் பெயர்களும் அடங்கும்.

Koviloor Digital Library

திராவிட மூவிடப்பெயர்கள் எண் வேறுபாட்டினையும் உணர்த்தும். ஆண், பெண் பால்வேறுபாட்டை அவை உணர்த்தா. மூவிடப்பெயர்களில் எழுவாய் வடிவம் பிறவேற்றுமை ஏற்கும்போது நெடில் குறுகி நிற்கக் காணலாம்.

திராவிட மூலவடிவங்களைக் காண மூவிடப் பெயர்களின் மூன்று வடிவங்களை ஒப்பிடல் வேண்டும். எழுவாய்ப்பெயர், பிறவேற்றுமை ஏற்கத் திரிந்த வடிவம், வினைமுற்று விகுதிகள் ஆகிய மூன்றும் ஒப்பிடப்படும்.

[எ-] நான் எனது ஊருக்குப் போனேன்.

[அ] தன்மை ஒருமை

	எழுவாய்	பிற வேற்றுமை ஏற்கும் வடிவம்	வினைமுற்று விகுதி
தமிழ்	யான், நான்	என்	அல், அன், என், ஏன்
மலையாளம்	ஞான்	என், இன்	ஏன்
குடகு	நானி	என், நா, நன்	இ, எ, உ
கன்னடம்	ஆன், நானு, நா	நன், என்	என், ஏனு, ஏனெ, எ
துளு	ஏனி, யானி	என், யென்	எ
தெலுங்கு	ஏனு, நேனு	நா, நன்	னி, னு, வு, வி

ஏனைய திராவிடமொழிகளிலும் ஆன், ஏன் என்னும் வடிவங்களே உள. பிராகூயில் மட்டும் 'ஈ' என்பது தன்மை ஒருமையில் காணப்படுகிறது.

யான் என்பதே மூலதிராவிடவடிவம் என்பர். பிராகூயில் உள்ள ஈ முன்னிலை வடிவத்தின் ஒப்புமையாக்கத்தால் வந்ததென்பர்.

Koviloor Digital Library

யான் என்பது நெடுமுதல் குறுகி யன் என்றாயிற்று. 'ய' மொழிமுதல் வருவதில்லை. எனவே தென், வடதிராவிடமொழிகளில் 'என்' என்றும் நடுதிராவிடமொழிகளில் அன் என்றும் மாறியது.

நான்காம் வேற்றுமை ஏற்கும் வடிவங்களின் இறுதியில் பெரும்பாலான திராவிடமொழிகளில் அகரம் காணப்படுகிறது. [அன, என] அந்த அகரம் சாரியை எனப்படும்.

தெலுங்கு, கோண்டி, கொண்டா, மண்டா, கூய், குவி ஆகிய மொழிகள் அன் என்பது மெய்யிடம் பெயர்ந்து காணப்படுகிறது.

நாக்கு - தெலுங்கு
நாக் - கோண்டி
நாங்கி - கூய்

கூய், பெங்கோ, குருக், மால்டோ ஆகிய மொழியின் உருபேற்றுத் திரிந்த மூவிடப் பெயர் வடிவங்களில் 'ூ' காணப்படுகிறது.

நாக் [கோண்டி] நங் [பெங்கோ]
நாங் [கூய்] எங்கா; எங் [குருக்]
எங்க, எங் [மால்டோ]

நான்காம் வேற்றுமை உருபேற்ற வடிவமே பின்னர் உருபேற்கத்திரிந்த வடிவமாக நிலைத்துவிட்டதென்பர் திரு. கிருட்டிண மூர்த்தி, சுப்பிரமணியம் ஆகியோர்.

தன்மை ஒருமை வடிவங்களில் உள்ள னகரம் ஒருமையைக் குறிக்க வழங்குகிறது எனலாம்.

எஞ்சிய யா, நா. ஞா, ஆ. ஏ ஆகியவற்றில் ய், ந், ஞ் என்னும் மெய்கள் ஒலித்துணையாக வந்தவை என்பர். ஏனெனில் வினைமுற்று விகுதிகளில் அம் மெய்கள் இல்லை. மேலும் நகரமெய் முன்னிலையிலும் இருப்பது குறிக்கத் தக்கது.

எனவே மெய்களை நீக்கினால் ஆ, ஏ எனும் ஈருயிர்களே எஞ்சுகின்றன. கால்டுவெல் 'ஆ' தன்மையைக் குறிக்கும் என்றும் நெடுங்கணக்கில் முதலில் உள்ள ஆகாரத்தைத் தன்மைக்கும் அடுத்துள்ள ஈகாரத்தை முன்னிலைக்கும் பயன்படுத்தினர் என்றும் விளக்குவார்.

Koviloor Digital Library

ஆயின் 'ஏ' என்பதை மூல வடிவமாகக் கொண்ட திரு. வேங்கடராஜுலுரெட்டியார் அ. இ. உ எனும் மூன்று சுட்டுக்கள் போக நான்காவது உயிரைத் தன்மைக்கு வழங்கினர் என விளக்குவார்.

ஆ] தன்மைப் பன்மை

	எழுவாய்	பிற உருபேற்குப் வடிவம்	விகுதிகள்
தமிழ்	யாம், யாங்கள், நாங்கள்	எம், எங்கள்	அம், ஆம், எம், ஏம்
மலையாளம்	நாங்கள், ஞாங்ஙள்	எங்கள், எங்ஙள், ஞங்ஙள்	ஓம்
குடகு	எங்க, நங்க	எங்க, நங்க	அ, இ, உ
கன்னடம்	ஆம், ஆவு, நாவு	எம், நம்	எவு, எவு, ஏவெ
துளு	யங்குளு, எங்குளு	யங்குளெ, எங்குளெ	அ
தெலுங்கு	ஏமு, மேமு, மேமு	மா, மாம்ம	மு, மி

பிற திராவிட மொழிகளிலும் ஆம், எம் என்னும் வடிவங்களே காணப்படுகின்றன.

யாம் என்பதே மூல வடிவமாகக் கொள்ளப்படுகிறது. தெலுங்கு, குருக், மால்டோ மொழிகளில் எகரமாகவும் தோடா தவிர ஏனைய மொழிகளில் ஆகாரமாகவும் மாறுகிறது.

பன்மையில் தென்திராவிட மொழிகளில் கள் விகுதி சேரக் காணலாம். தமிழ் மூவிடப்பெயர்களிலும் கள் சேர்க்கிறது. குடகு, துளு, தன்மை, முன்னிலையில் மட்டும் சேர்க்கிறது. கோதம், தோடா, கன்னடமொழிகளில் காணப்படவில்லை. எனவே இது பிற்காலவளர்ச்சி எனலாம். மகரமே முதலில் பன்மை உணர்த்தப் பின்னர் கள் விகுதி மேல் விகுதி

Koviloor Digital Library

யாகச் சேர்ந்திருக்கலாம். கோண்டி மொழியில் அத் | ஆத் எனும் புதிய பன்மை விகுதிகாணப்படுகிறது.

யாம் என்பது உருபேற்கும்போது யம் என மூலதிராவிடத்தில் இருந்து தென், வடதிராவிடமொழிகளில் எம் என்றும் நடுதிராவிடமொழிகளில் அம் என்றும் மாறும். இவற்றோடு கள் சேர்வது தமிழ், மலையாளம், குடகு, துளு மொழிகளில் காணப்படுகிறது.

குடகு, துளு மொழிகளில் எழுவாயில் குறில் உயிரே காணப்படுகிறது. உருபேற்கத் திரிந்த வடிவம் எழுவாயில் வந்து வழங்கத் தொடங்கியதென்பர்.

மெய்யிடம் பெயர்ந்து சில மொழிகளில் மா எனக் காணப்படுகிறது.

[இ] உளப்பாட்டுத் தன்மைப் பன்மை

	எழுவாய்	உருபேற்கும் வடிவம்
தமிழ்	நாம்	நம், நங்கள்
மலையாளம்	நாம், நோம்	நம்
கன்னடம்	நாம்	நம்
துளு	நம, நாவு	நம்
தெலுங்கு	மனமு	மன

பிற திராவிடமொழிகளில் ஆம், நேஎட், நன் என்பன காணப்படுகின்றன.

ஞாம் என்பதே மூலவடிவம் என்றும் அதுவே நேமு, நேம், நாம் எனத் திரிந்தது என்றும் விளக்குவார் கிருட்டிணமூர்த்தி.

Koviloor Digital Library

கந்தப்பசெட்டி, சுப்ரமணியம் இருவரும் நாம் என்பதே மூல வடிவம்; அதுவே பலவாருகத் திரிந்தது என்று விளக்குவர்.

(ஈ) முன்னிலை ஒருமை

	எழுவாய்	உருபேற்கும் வடிவம்	விகுதிகள்
தமிழ்	நீ	நின், உன்	இ,ஈ,ஐ,ஆய்,ஓய்
மலையாளம்	நீ	நின்	—
குடகு	நீனி	நின்	இய
கன்னடம்	நீன், நீனு	நின்	இ,ஈ,அய்,ஈயெ,எ
துளு	ஈ	நின், இன்ன்	அ
தெலுங்கு	ஈவு,நீவு,நுவ்வு	நின், நீ	வு, வி

பிறதிராவிட மொழிகளில் ஏன்,ஈன்,நீன் எனும் வடிவங்கள் காணப்படுகின்றன.

நீன் என்பதே மூலதிராவிட வடிவமாகக் கொள்ளப்படும். கன்னடம்,தெலுங்கு தவிரப் பிறதென்திராவிடமொழிகளும்பிராகூய் தவிரப் பிற நடுதிராவிடமொழிகளும் ஈற்று னகரத்தை இழந்துள்ளன. தமிழில் சில வட்டார வழக்கில் 'நீனு' எனும் வடிவம் உளது. மேலும் உருபேற்கும் வடிவங்களில் ஈற்று னகரம் இருப்பதால் அம்மொழிகளில் நீன் என்றிருந்து பின்னர் னகரம் மறைந்திருக்கும் எனலாம்.

நீன் என்பதில் உள்ள மொழி முதல் நகரம் துளு, தெலுங்கு, கோண்டி, பெங்கோ, மண்டா, கூய், நாய்கி, பார்ஜி, கதபா மொழிகளில் காணப்படவில்லை. நடுதிராவிடமொழிகளனைத்திலும் இந்நிலை உள்ளதால் மூலநடுதிராவிடநிலையில் நகரம் இழக்கப்பட்டதென்பார் சுப்ரமணியம்.

உருபேற்கும் வடிவமாக நின் என்பதே கருதப்படும். பன்மையில் நும், உம் என்றிருப்பதைப்பார்த்து ஒப்புமையாக்கமாக நுன், உன் என்பன தமிழில் தோன்றின என்பர்.

நின் என்பதில் உள்ள இகரம் உகரமாகி நுன் என்று நும் என்னும் பன்மையை நோக்கி அமைந்தது என்றும் பிறழ்பிரிப்பால் (நுங்கோனுன்னே - நுங்கோன்+நுன்னே; நுங்கோன்+உன்னே) உன்வடிவம் வந்ததென்றும் கூறுவார் P.S.S.சாஸ்திரி.

Koviloor Digital Library

[உ] முன்னிலைப் பன்மை

	எழுவாய்	உருபேற்கும் வடிவம்	விகுதிகள்
தமிழ்	நீம், நீங்கள், நீர், நீயிர், நீவிர்	நும், உம், உங்கள், நுங்கள்	இ, ஈர், உம், மின், உங்கள்
மலையாளம்	நீங்ஙள், நிங்ஙள்	நிங்ஙள்	—
குடகு	நிங்க	நிங்க	இர
கன்னடம்	நீம், நீவு	நிம்	இம், இர், அரி, ஈரி
துளு	நிகுளு, நிங்க்ளு, ஈரு	நிங்க்லெ	அர்
தெலுங்கு	ஈரு, மீரு	மிம், மீ	ரு, ரி

முன்னிலைப்பன்மைப் பெயராக நீம், உருபேற்கும்வடிவமாக நிம் ஆகியவை மூல வடிவமாகக் கொள்ளப்படும். இவற்றுள் மகரம் பன்மை குறிக்கும் எனலாம்.

தமிழ், துளு, தெலுங்கு, கொண்டா, கூய்மொழிகளில் ரகர ஈறு காணப்படுகிறது. பலர்பால் விகுதியாகிய ரகரம் பன்மை குறிக்க மகரத்துக்குப் பதிலாக வரத்தொடங்கியதென விளக்கி அம்மொழிகளின்தனிவளர்ச்சி அது என்பார் கிருட்டிணமூர்த்தி.

ஆயின் நீர்என்பதுமூலதிராவிடவடிவம்என்பார்சுப்ரமணியம்

நீர் என்பதன் தோற்றத்தை ஆராயும் திரு. S. V சண்முகம் நீன்+இர் (முன்னிலைப்பன்மை விகுதி)> நீனிர்> நீயிர்> நீர் என்று கூறி ஆடினிர் பாடினிர் என்ற வடிவங்களைச் சான்று காட்டுவார். நீம்+இர் — நீவிர் என்ருயிற்று என்பார் அவர்.

நீம்+இர்> நீமிர்> நீவிர்> நீயிர்> நீர் என்ருயிற்று என விளக்குவார் டாக்டர் மு. வ,

நீ+இர் என்பதே நீயிர் என வந்ததென்பார் திரு. P.S.S. சாஸ்திரி. நீர்கள் எனும் வடிவம் வீரசோழியத்துள் குறிக்கப் படுவதாக அவர் விளக்குவார்.

தமிழ், பிராகூய் மொழிகளில் உருபேற்கும் வடிவமாக நும் உளது. நிம் என்பதில் உள்ள மகரத்தின் செல்வாக்கால் இகரம் உகரமாகி நும் என்ருயிற்று என விளக்குவார் சூல்சு ப்ளாக்.

Koviloor Digital Library

நும் என்பது நகரம் இழந்து உம் என்றும் உங்கள் என்றும் வரும். தன்மை உருபேற்கும் வடிவத்தில் உயிர் மட்டுமே இருப்பதுபோல் முன்னிலையும் மெய்இழந்து உயிர் மட்டுமே கொண்டுளது என்பார் சுப்ரமணியம்.

[ஊ] படர்க்கை ஒருமை பன்மை

	ஒருமை எழுவாய்	ஒருமை உருபேற்கும் வடிவம்	பன்மை எழுவாய்	பன்மை உருபேற்கும் வடிவம்
தமிழ்	தான்	தன்	தாம், தாங்கள்	தம், தங்கள்
மலையாளம்	தான்	தன்	தாம்	தம்
கன்னடம்	தான்	தன்	தாம், தாவு	தம், தவ்
குடகு	தானி	தன்	தங்க	தங்க
துளு	தானு	—	—	—
தெலுங்கு	தானு	தன்	தாமு	தம்

பிற திராவிடமொழிகளிலும் தான், தன், தாம்,தம்என்னும் வடிவங்களே மாற்றமின்றிக் காணப்படுகின்றன.

தான், தன், தாம், தம் என்பவற்றை மூல வடிவங்களாகக் கொள்வதில் சிக்கல் இல்லை.

இன்று பால் விகுதிகள் இணைந்த சுட்டுப்பெயர்களே படர்க்கைப்பெயர்களாக வழங்குகின்றன.

தான், தாம் என்பன படர்க்கைப் பெயராக மட்டுமின்றித் தற்சுட்டுப்பெயர்களாகவும் சங்கத்தமிழில் வழங்கக் காணலாம்.

"யாருமில்லைத்தானே கள்வன்" — குறு. 25.

"கொண்கன் தான்" — குறு. 294.

சாரியையாகவும் வலியுறுத்தற் பொருளிலும் இவைகள் பழந் தமிழில் வழங்கி வந்துள்ளன.

(எ) மரியாதைப் பன்மை

பன்மையை மரியாதைக்குரிய ஒருவருக்குப் பயன்படுத்தும் முறை மூவிடப்பெயர்களிலும் காணப்படுகிறது.

தன்மையில் மிகுந்த சிறப்புடையவர்கள் "யாம் வந்தோம்'

Koviloor Digital Library

என்று பன்மையை ஒருமையில் பயன்படுத்துவர்.

முன்னிலையில் நீ என்பது மரியாதையின்றியும் நீர் என்பது சற்று மரியாதை கொடுத்தும் நீங்கள் என்பது அதனினும் கொஞ்சம் அதிகமரியாதை கொடுத்தும் தாங்கள் என்பது மிகுந்த மரியாதையளித்தும் வழங்குகின்றன. முன்னிலைப் பன்மை போதாத நிலையில் படர்க்கைப் பன்மையும் மரியாதைக்குப் பயன் படுத்தும் நிலை ஏற்பட்டமை குறிக்கத்தக்கது.

[ஏ] இடப்பெயர்களின் பன்மை

பொதுவாக மூவிடங்களிலும் னகரம் ஒருமையையும் மகரம் பன்மையையும் குறிக்கின்றன. அடுத்துப் பலர்பால் விகுதியின் செல்வாக்கால் முன்னிலையில் மட்டும் ரகரம் சேர்ந்தது. பின்னர் கள் விகுதி மகரத்தையடுத்துச் சேர்ந்து பன்மை உணர்த்த வந்தது.

இருமை உணர்த்தும் இர் என்னும் சொல்லில் உள்ள ரகரமும் எண்ணிடைச்சொல்லாகிய உம் என்பதில் உள்ள மகரமும் இங்கு பன்மை உணர்த்த வந்ததென்பார் கால்டுவெல்.

5. சுட்டுப்பெயர்

தமிழ் — அவன், அவள். அவர், அது, அவை
இவன், இவள், இவர், இது, இவை

தெலுங்கு — வாடு. அதி, வாரு, வாள்ளு, ஆ ஆயவை. அவி
வீரு, வீடு, ஈ இதி

கன்னடம் — அவம், அவள், அவரு. அது. இவரு. ஆ ந
இவன், ஈத, இது, இவர்

மலையாளம்— அவன், அவர், அவர்கள். அது
இவன், இது. இவை, இவர்கள், இவு

கோண்டி —வோர், வூ, வேர், அத், இத், அவ், இவ்

கொலாமி — இத், இதெள, அம். அத். அதெள.

தமிழில் அ, இ, உ என மூன்று சுட்டு குறிக்கப்படும். உப் பக்கம், உம்பர், உதுக்காண் முதலிய சொற்களில் உகரச்சுட்டு வந்துள்ளது. இன்று அ, இ எனும் இரண்டு சுட்டுக்களே வழக்கில் உள.

Koviloor Digital Library

பழங் கன்னடத்திலும் துளுவிலும் மிகச்சேய்மை, அண்மை இரண்டிற்கும் இடைக்கண் நிற்பவரைச் சுட்ட உகரம் பயன்படக் காணலாம்.

சுட்டுப்பொருள்தரும் வடிவங்களாக அ, இ என்பனவும் அவற்றின் நெடில் வடிவங்களும் காணப்படுகின்றன.

மூல வடிவம் அவ், இவ் என்பனவேயாம்; வகரம் உடம்படு மெய்யன்று என்று அறிஞர் கருதுவர். 'இவ்வே பீலியணிந்து' எனும் தொடர்களைச் சான்றுகாட்டி வகரம் சுட்டடிச் சொல்லே எனவிளக்குவார் டாக்டர் சிதம்பரநாதனார். டாக்டர் மு. வ. வும் பலகாரணங்களைக் காட்டி விளக்குகிறார்.

1) வகரம் உடம்படுமெய் என்றால் இகரத்தையடுத்து யகர உடம்படுமெய் வர 'இயன்' என்றே இருக்கவேண்டும். ஆயின் இவன் என்றே உளது.

2) சுட்டு அடையாக வரும்போதும் இய்யணி, இய்யிடம், என்று வராமல் இவ்வணி, இவ்விடம், என்றே வருகிறது. மேலும் உடம்படுமெய்யாகக் கொண்டாலும் இவணி, இவிடம் என்று தான் வரும். 'இவ்' என்று சொல்லிருந்தால்தான் தனிக் குறில் முன் ஒற்று இரட்டும் எனும் விதிப்படி இவ்வணி, இவ் விடம் என்று வரும்.

3) தெலுங்கு, கோண்டி மொழிகளில் மெய்யிடம் பெயர்ந்து வாடு, வாரு, வீரு முதலிய சொற்கள் அமைந்திருப்பதும் வகரம் அடிச்சொல்லோடிணைந்தது என்பதை வலியுறுத்தும்.

4) அவன், அவள், அவர், அவை எனும்பெயர்களில் வகரம் உளது. வகரம் இலாத சொல் அது. அவ்+து> அஃது> அது என்று திரிந்து வந்த வடிவமே அது என்பார் கால்டுவெல்.

5) ஆ, ஈ எனும் நெடில்வடிவச் சுட்டெழுத்துக்களும் உள. அவை நிலவு> நிலா என்றுமாறியதுபோல வகரமெய் யிழந்து உயிர் நீண்டு அமைந்தவையே.

6) தொல்காப்பியர் அவ், இவ், உவ் என வகர ஈற்றுச் சொற்களாகக் கூறுகிறார்.

எனவே சுட்டின் மூலவடிவமாக அவ், இவ் என்பனவற்றைக் கொள்ளலாம்.

Koviloor Digital Library

சுட்டுப்பெயரடை

சுட்டினடியாகப் பெயரடைகள் தோன்றி வழங்குகின்றன.

அந்தக் குதிரை [தமிழ்] ஆ குதிரா [மலே] அக்குதிரை [தமிழ்]

அங்ஙெ, அவிடெ, அந்நெ, அப்போழ், அங்ஙனெ, அத்ர, இத்ர, [மலே]

அப்படி, இப்படி, அத்தனே, அவ்வளவு, இத்தனே, [தமிழ்]

அட்டி, இட்டி, ஆட, ஈட, அந்த, இந்த — தெலுங்கு

அனிது, இனிது, அல்லி, இல்லி - கன்னடம்.

ஈதி, ஆதி, அஞ்சி, இஞ்சி - துளு

என்று சுட்டடியாகப் பெயரடைகள் தோன்றி வழங்குகின்றன.

சுட்டின் அடியாகக் காலம், இடம் குறித்து வினையடைகள் தோன்றி வழங்குகின்றன. அன்று, இன்று, அங்கு, இங்கு.

6. வினப்பெயர்கள்

சுட்டுப் பெயர்களான அ, இ போலவே எ என்பது வினப் பொருளே உணர்த்தும்.

தமிழ் — எவன். எவள், எவர், எது, எவை, யார், என்ன

மலேயாளம்— ஆரை, எந்த, எத, ஈவ

தெலுங்கு — எவடு, எவரு

கன்னடம் — ஆவடு, ஆவன், ஆரும், ஆரு, ஏன், ஆவுது, ஏனன்.

கோண்டி — வோர் [Vor], வூர் [Vur]

துளு — எஞ்சி, ஏதி, ஏப்பா

கொலாமி — எம், எத், எதெள, ஏன், ஏர்

வினப்பொருளேத் தருவன எ, எவ், ஏ, யா என்பன. மலேயாளத்தில் ஏவன், ஏவள் என்றுள. யா என்பதே ஏ என்று மாறியது என்பர்.

சுட்டுப்பெயர்களைப் போன்றே வினப்பெயர்களும் எவ் என்றே இருக்கவேண்டும் எனலாம்.

தமிழில் எவன் என்பது என்ன என்ற பொருளில் இருந்து இப்பொழுது யாவன் என்ற பொருளில் இருந்து இப்பொழுது யாவன் என்ற பொருளில் வழங்குகிறது. யார் உயர் திணேயிலும்

Koviloor Digital Library

என்ன அஃறிணையிலும் தமிழில் இன்று வழங்குகிறது. ஏது எனும்சொல், எப்படிக் கிடைத்தது எனும் பொருளில் பயினிலையாக இன்று வழங்குகிறது.

ஆண்அல்லது பெண் என்ற விவரமறிந்தபின்வினவும்போது எவன், எவள் என்ற வினவும் எந்த விவரமும் தெரியாதபோது யார் என்ற வினவும் பயன்படுகிறது என்பர். *

சுட்டுப் பெயரடை, வினையடைபோலவே வினவிலும் எங்கு எப்படி, எதற்கு, எத்தனை என்று தோன்றியுள. சொல்லின்பின் ஆ, ஒ சேர்த்து வினா அமையும் முறையும் உண்டு.

7. எண்ணுப் பெயர்கள்

எண்ணுப்பெயர், எண்ணு முறைப் பெயர், எண்ணுப்பெயரடை என மூன்று வகை உளது.

இம்முவகை வடிவங்களை ஒப்பிட்டு மூலவடிவம் உணரப் படும்.

ஒன்று

		பெயர்		பெயரடை
தமிழ்	—	ஒன்று	—	ஒரு, ஓர்
மலையாளம்	—	ஒன்று	—	ஒரு, ஓர்
கன்னடம்	—	ஒண்டு	—	ஓர், ஒர்
தெலுங்கு	—	ஒண்டு, ஒகட்டி	—	ஒக
துளு	—	ஒஞ்சி	—	

தெலுங்கு, கோண்டி, முதலிய வடதிராவிடமொழிகளில் ஏகொத், ஒகுத், எனும் வடிவங்கள் காணப்படுவதால் மூலதிரா விட வடிவமாக ஒகன்று என்பது கொள்ளப்படும்.

மூல திராவிட வடிவமாக 'ஒன்று' கொள்ளப்படும்.

பெயரடையாக ஒரு என்பது மெய்க்கு முன்னும் ஓர் என்பது உயிர்க்கு முன்னும் வரும். ஆயின் பழந்தமிழில் இம்முறை மாறியும் காணப்படுகிறது. (ஓர் பெருங்களிறு. புறம். 140)

---

* Demonstratives and Interrogatives in Tamil and Malayalam-ThirdSeminaronDravidian Linguistics-P.347

Koviloor Digital Library

ஒன்று என்னும் பெயர் அடையாகவரும்போது 'ஒறு' என்று வராமல் ஒரு என்று றகரம் ரகரமாக மாறி வந்துளது. இரு எனும் வடிவத்தை நோக்கி 'ஒரு' அமைந்ததுஎன்பார் எமனோ. கறுப்பு, கருப்பு, ஒளிறு, ஒளிரு என்று றகர ரகரங்கள் மாறி வருவது போல ஒறு,ஒரு என இருவடிவம் இருந்து ஒறுவடிவம் அழிந்து ஒரு வடிவம் நின்றதென்பார் மு.வ.

எண்ணுப் பெயரடை பின்வரும் பெயரோடு இயைபின்றி எல்லாப் பெயருக்கும் முன் வரும். கன்னடம், பார்ஜி மொழிகளில் எண்ணுப் பெயரடைக்கும் பெயருக்கும் பாலிட இயைபு காணப்படுகிறது. அது பிற்கால வளர்ச்சி எனலாம்.

ஒ—ஒத்திரு எனும் வினையடியினின்றும் இவ்வெண்ணுப் பெயர் தோன்றியிருக்கலாம் என்பார் டாக்டர் மு. வ.

இரண்டு:-

	பெயர்	பெயரடை
தமிழ்	இரண்டு	இரு, ஈர்
மலையாளம்	இரண்டு, ரண்டு	இரு
கன்னடம்	எரடு	இர், இ, ஈர்
துளு	ரட்டு	இர்
குடகு	தண்டு	இரு, இ, இர்
தெலுங்கு	ரெண்டு	இரு, இ, ஈர்

மூலதிராவிட வடிவம் இரண்து—இரண்டு. இரணை (நற் 123.) எனும் சொல் இணை எனும் பொருளில் வந்துள்ளமை குறிக்கத் தக்கது.

சில திராவிட மொழிகளில் ரகரம் மறைய ணகரம் வந்துளது. [இந்நூறு—குடகு, கன்னடம், தெலுங்கு, துளு]

தமிழ், மலையாளம், தோடா, தெலுங்கு, பிராகூயில் இரட்டை, இரட்டி எனும் பெயர், வினை வடிவங்கள் உள.

இரண்+த்த்+ஐ—இரட்டை

இரண்+த்த்+இ—இரட்டி

என்று அச்சொற்கள் அமைந்தன என விளக்குவர்.

மெய்க்குமுன் இருஉயிர்க்கு முன் ஈர என்னும்பெயரடைகள் வரும்.

பழந்தமிழில் இப்பெயரடைகள் பெருவழக்காய் உள்ளன. ஏனைய மொழிகளில் அதிகம் காணப்படவில்லை. இரண்டு எனும்

Koviloor Digital Library

பெயரே அடையாக வரும். தமிழிலும் 13ஆம் நூற்றாண்டிற்குப் பிறகுள்ள கல்வெட்டுக்களில் இரண்டு என்பதே பெயரடையாக வந்துளது. துளு, கசபர், இருளர், குறும்பர் மொழியிலும் அந்நிலையே உளது. காலப்போக்கில் கன்னடத்திலும் அந்நிலை ஏற்பட்டுள்ளது.

மூன்று:—

	பெயர்	—	பெயரடை
தமிழ்	—மூன்று	—	மு, மூ
மலையாளம்	—மூன்று, மூன்னு	—	மு.
கன்னடம்	—மூறு	—	மு
குடகு	—மூந்து	—	நு, மு
துளு	—மூஜி	—	மு
தெலுங்கு	—மூன்று	—	மு,மூ

பிறதிராவிட மொழிகளிலும் மூடு, மூண்டு எனும் வடிவங்களே உள.

மூலதிராவிட வடிவமாக மூன்து > மூன்று கொள்ளப்படும்.

மு — வல்லினத்துக்கு முன்

மூ — பிறவிடத்து — அடையாக வரல் மூலதிராவிட முறை எனலாம்.

கால்டுவெல் மூறு என்பதே அடிச்சொல் என்றும் பின்னர் அது மூக்கொலிபெற்று மூன்று என வந்தது என்றும் கூறுவார். மூ (மூத்தது) என்பதே அடிச்சொல் என்பார் டாக்டர் மு. வ. மூன் என்பதே அடிச் சொல் என்று விளக்குவார் திரு. சண்முகம்.

குடகு, குருக், திருச்சி, தஞ்சைத் தமிழ் ஆகியவற்றில் 'நு' [நுப்பது] முதலில் வருகிறது. நாற்பது எனும்சொல் நோக்கி அவ்வாறமைந்தது என்பார் எமனோ.

நான்கு:—

	பெயர்	—	பெயரடை
தமிழ்	— நால்கு, நாலு, நான்கு	—	நா, நால், நான்
மலையாளம்	— நாங்கு, நாலு	—	நால், நா
குடகு	— நாலி	—	நா

Koviloor Digital Library

	பெயர்	—	பெயரடை
கன்னடம்	— நால், நால்கு, நாகு	—	நல்
துளு	— நாலு	—	நால், நா
தெலுங்கு	— நாலுகு, நாலுவு	—	நலு, நன்

பிறதிராவிட மொழிகளில் நாலு, நாலுங், நாலிக் முதலிய வடிவங்கள் உள. மூல திராவிடவடிவமாக 'நால்கு' கூறப்படும் தமிழ், மலையாளம், குடகு, துளு, நாய்கி மொழிகளில் 'நால்' என்பதும் காணப்படுகிறது. அம்மொழிகளில் நான்கு என்பதும் உளது. மூன்று, ஐந்து ஆகிய எண்களை நோக்கி 'நால்கு' மூக்கொலி பெற்றது என்பர்.

பெயரடையாக நால் என்பது மூலவடிவமாகக் கொள்ள லாம். வல்லினத்தின் முன் நாற் என்றும் மூக்கினத்தின்முன் நான் என்றும் அது மாறும். நகரம் வரும்போது ஈற்றுமெய் அழியும். (நால் + நூறு) - [நானூறு]

மிகுதி எனும் பொருளுடைய நல் (நல்கினன்) என்னும் அடிச்சொல்லிருந்தே நால் தோன்றியதென்பார் மு. வ.

ஐந்து :—

	பெயர்	—	பெயரடை
தமிழ்	—ஐந்து, அஞ்சு	—	ஐ
மலையாளம்	—ஐந்து, அஞ்சு		ஐ, அஞ்
கன்னடம்	—ஐது	—	ஐ
துளு	—ஐனு	—	ஐ
தெலுங்கு	— ஏனு, ஐது	—	ஏ
குடகு	—அஞ்ஜி	—	ஐ, அஞ்

நாய்கி, பார்ஜி, கத்பா, கூய் மொழிகளில் சேந்தி, சையுங், சிங், சேதுக் முதலிய வடிவங்கள் உள.

சைந்து என்பதே மூலவடிவம் என்றும் மொழிமுதல் சகரம் இழக்கப்பட்டு ஐந்து என வந்தது என்றும் சுப்ரமணியம் விளக்கு கிறார்.

கால்டுவெல் பெயரடையே மூல வடிவம் எனக்கொண்டு எய் அல்லது ஏ என்பதே மூல வடிவம் எனக்கொள்வர்.

பெயரடையின் மூலவடிவமாக உயிருக்கு முன் சை, பிற விடத்து சைம் என்பன கொள்ளப்படும்.

Koviloor Digital Library

ஐ என்பது மூலவடிவமென்றும் அது கை என்பதிலிருந்து தோன்றியிருக்க வேண்டும் என்றும் கூறுவார் டாக்டர் மு. வ.

மொழிமுதல் சகரம்மூலதிராவிடத்திலிருந்து இழக்கப்பட்டது என்னும் பொதுக் கொள்கைப்படி இங்கும் சகரம் சேர்த்துக் கூறப்படுகிறது. ஆயின் அஃது ஆய்விற்குரியது.

ஆறு:—

	பெயர்	—	பெயரடை
தமிழ்	— ஆறு	—	அறு
மலையாளம்	— ஆறு	—	அறு
குடகு	— ஆறி	—	அரு, ஆர்
கன்னடம்	— ஆறு	—	அறு
துளு	— ஆஜி	—	அஜி, ஆஜி
தெலுங்கு	— ஆறு	—	அறு, ஆறு

கோண்டி, கூய், நாய்கி மொழிகளில் சாருங், சாதி, சாஜ்கி, என்னும் வடிவங்கள் உள.

ஐந்து எண்ணைப்போலவே ஆறின்மூலவடிவம் சாறு என்று கூறப்படும்.

பெயரடையாக அறு என்பது மூலவடிவமாகக் கூறப்படும்.

புதுவழி தொடங்கு என்னும் பொருளில் அறு என்பதையே அடிச்சொல்லாகக் கருதுவார் மு. வ.

ஏழு:—

	பெயர்	—	பெயரடை
தமிழ்	— ஏழ் ஏழு	—	எழு
மலையாளம்	— ஏழு	—	எழு,
குடகு	— ஏழி	—	ஏழு, ஏள்
கன்னடம்	— ஏழு	—	ஏழ்
தெலுங்கு	— ஏழு, ஏடு	—	ஏ

மூலவடிவமாக ஏழ் என்பது கொள்ளப்படும்.

சில மொழிகளில் ஏ என்றும் சில மொழிகளில் எ என்றும் காணப்படுகிறது.

Koviloor Digital Library

எழு என்பதே மூலவடிவம் என்றும் புதிதாக எழுதல் என்பதே அதன்பொருள் என்றும் கூறுவார் மு. வ.

பெயரையே அடையாக வழங்கும் நிலை காணப்படுகிறது.

எட்டு:—

	பெயர்		பெயரடை
தமிழ்	— எட்டு	—	எண்
மலையாளம்	— எட்டு	—	எண்
குடகு	— எட்டி	—	எம். எட்
கன்னடம்	— எண்டு	—	என், எம்
தெலுங்கு	— எனிமிதி	—	எனு
துளு	— எண்மா	—	எண்

பிறதிராவிட மொழிகளில் எனுமதி, தென்மதி என்னும் வடிவங்கள் உள.

எண்ட்ட்உ — என்பதே மூலவடிவம் என்றும் அஃது எட்டு, எண்டு என வழங்கியது என்றும் கூறுவர்.

துளு - மா, கோண்டி, கொலாமி, தெலுங்கு - மதி, மிதி என்னும் வடிவங்கள் பத்தின் மாற்று வடிவம் என்றும் ஒன்பது என்னும் சொல்லை நோக்கி இவ்வாறமைந்ததென்றும் கூறுவர். பத்து என்பதன் பொருள் அங்கு இல்லை என்றும் கூறுவர்.

பேரெல்லையாக அமைந்த 'எண்' என்பதே அடிச்சொல் என்றும் அதுவே ஒரு காலத்தில் இறுதி எண்ணாக இருந்தது என்றும் கூறுவார் மு. வ.

ஒன்பது:—

தமிழ்	- ஒன்பது, ஒன்பான்
மலையாளம்	- ஒன்பது, ஒம்பது
குடகு	- ஒய்ம்பதி
கன்னடம்	- ஒம்பத்து
துளு	- ஒர்ம்ப
கோண்டி	- உன்மா

இம்மொழிகளில் காணப்படும் வடிவங்களை ஒப்பிடும்போது 'ஒன்பது' — மூலவடிவமாகக் கொள்ளப்படும்.

Koviloor Digital Library

15230

	9	90	900
தமிழ் -	தொண்டு,	- தொண்ணூறு	- தொள்ளாயிரம்
மலையாளம் -		- தொண்ணூறு	- தொள்ளாயிரம்
குடகு -		- தொம்பதி	
கன்னடம் -		- தொம்பத்து	
துளு -		- சொண்ப	
தெலுங்கு -	தொம்மிதி	- தொண்பதி, தொம்பை	தொம்மனூறு
கொலாமி -	தொம்தி,	—	—
கோண்டி -	தொமிதி,	தொம்பை	—

இச்சொற்களை ஒப்பிடும்போது 9 - தொண் 90 - தொண்பது என்பன மூல வடிவங்கள் என்றுணரப்படும்.

முதல் மூலவடிவமான ஒன்பது தென்திராவிட மொழிகளிலும் கோண்டியிலும் உளது. அச்சொல்லில் உள்ள பது, மிதி என்பன பத்து என்பதின் வடிவம் என்பார் கால்டுவெல். ஒன் என்பது தொள் > தொல் > தொன் > ஒன் என்று வந்ததாகக் கூறி பத்துக்கு முந்தியது தொன்பது > ஒன்பது என்றுபொருள் கூறுவார் கால்டுவெல்.

தொண் என்பது மெய்களுக்கு முன்னரும் தொள் என்பது உயிர்களுக்கு முன்னரும் வரும் மூலவடிவங்கள் என்பர். தெலுங்கில்தொலிவாரமு [வாரத்தின்முதல்நாள்] தொல்நாடு [நாளுக்கு முன்] என்று சொற்களில் தொல் - முந்திய எனும் பொருளில் வழங்கக் காணலாம். எனவே தொல் என்பதிலிருந்து தொம், தொன் முதலியன தோன்றி முந்திய என்னும் பொருளில் வழங்க 9 - ஒன்பது (பத்துக்கு முந்தியது) 90 - தொண்ணூறு [நூறுக்கு முந்தியது] 900 - தொள்ளாயிரம் (ஆயிரத்துக்கு முந்தியது) எனும் சொற்கள் தோன்றின என்பார் கால்டுவெல்.

இரண்டாம் மூலவடிவமான தொண்டு என்பது 9 எனும் எண்ணைக் குறிக்க வழங்கியது,

தமிழ் - தொண்டு - தொண்+து — 9
கன்னடம் - தொம்பத்து - தொம்+பத்து — 90
துளு - சொண்ப - சொண்+ப — 90
தெலுங்கு - தொம்பை - தொம்+பை — 90

Koviloor Digital Library

இச்சொற்களில் தொண், தொம், சொண் என்பன முந்திய எனும் பொருளின்றி 9 எனும் பொருளையேகுறித்து வழங்கின.

தொம்மிதி எனும் சொல்லில் தொம் - 9 எனும் பொருளைக் குறித்தது. பத்து என்னும் அடுத்த எண்ணின் செல்வாக்கால் தொம் என்பதோடு பொருள் எதுவும் இன்றி 'மிதி' சேர்ந்தது என விளக்குவர்.

இம்முறையில் தொண்+பது எனும் சொல்9-ஐக் குறிக்கத் தமிழில் ஏற்பட்டதென்பர் திரு. சண்முகம். [தொண் - 9. பது-பொருளின்றிச் சேர்ந்தது]

ஒன்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம் முதலிய எண்களிடையே மூன்றுநிலைகள் உள. (1) தொண்டு, தொம்பது, தொம்பை என்பன 9, 90 முதலிய பொருளைக் குறிக்கும்.

[2] ஒன்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம் என்பது பத்து, நூறு, ஆயிரத்துக்கு முந்தியவை என்னும் பொருளில் வழங்கின.

(3) பொருளின்றிப் பதி, மிதிமுதலிய வடிவங்களைச் சேர்த்து தொம்மிதி [9] என்று வழங்கியது.

இந்த மூன்று நிலைகளில் குழப்பங்கள் நிலவக் காணலாம்.

இருக்க வேண்டியது — வழங்குவது
9 — தொண்டு — ஒன்பது
90— தொண்பது — தொண்ணூறு
900 — தொண்ணூறு —தொள்ளாயிரம்
9000 —தொள்ளாயிரம்—ஒன்பதாயிரம்

தொண்டு என்னும் சொல் மறைந்ததாலோ அல்லது ஒன்பது எனும் சொல் தோன்றியதாலோ இம் மாற்றங்கள் ஏற்பட்டன எனலாம்.

பத்து:—

பெயர்	பெயரடை
தமிழ் - பத்து, பஃது	பதின், பது, பன்
மலையாளம் - பத்து	பதின், பன்ன், பது
குடகு - பத்தி	பொன்
கன்னடம் - பத்து	பதின், பதி, பன்ன்
துளு - பத்து	பதுன், பது, பத்தி
தெலுங்கு - பதி	பதுன், பது, பன்,வதி,பதி

Koviloor Digital Library

பத்து, பதின், பதி, பன்ன், பது என்பன மூலவடிவங்களாகக் கருதப்படும்.

பதின் என்பது 13-18 எண்களில் மூலவடிவமாக உளது. மூக்கினத்திற்கு முன் இக்காலத்தமிழில் னகரம் மறைய 'பதி' மட்டுமே உளது.

கன்னடம், கோதம் தவிரப்பிறமொழிகளில் இருபது, முப்பது முதலிய வடிவங்களில் பத்தின் மாற்றுவடிவமாகப் பது வழங்குகிறது. கன்னடத்தில் பத்து, வத்து எனும் வடிவங்களே 20, 30 எண்களில் உள.

12 - இல் 'பன்ன்' எனும் வடிவம் எல்லாத் திராவிடமொழிகளிலும் காணப்படுகிறது. மலையாளம், தெலுங்கில் 'பந்த் - என்பதே உளது. 'பன்ன்' என்பதே மூலவடிவமாக இருந்து 'பந்த்' என்ருகியிருக்க வேண்டும்.

11, 15, 18 எனும் எண்கள் பான்னு, பாஞ்சு, பான்ட்டு என்று பேச்சுத் தமிழில் வழங்கக் காணலாம்.

பந்தி எனும் வடசொல்லிலிருந்து பத்துவந்ததென்பர். அங்ஙனம் வந்ததெனில் 'தசம்' என்றே வந்திருக்க வேண்டும். பல்+து = பஃது > பத்து என வந்திருக்க வேண்டுமென்பர்.

நூறு:—

	பெயர்		பெயரடை
தமிழ்	— நூறு	—	நூற்று
மலையாளம்	— நூறு	—	நூற்று
குடகு	— நூறி	—	நுத்
கன்னடம்	— நூறு	—	நூற்
துளு	— நூடு	—	நூட
தெலுங்கு	— நூறு	—	நூட

நூறு எனும் பெயரும் நூற்ற் எனும்பெயரடையும்திராவிட மூலவடிவங்களாகக் கருதப்படும்.

நூறு - (நொறுக்கு, பொடி) என்னும்சொல்லிலிருந்து இது வந்திருக்க வேண்டுமென்பார் மு. வ.

ஆயிரம்:—

தமிழ் - ஆயிரம்
கன்னடம் - சாவுர, சாவர

Koviloor Digital Library

தெலுங்கு - வேயி, வேலு
மலையாளம் - ஆயிரம்

வடசொல்லாகிய சகஸ்ரம் சகசிரம் > சாயிரம் — ஆயிரம் என வந்ததென்பார் கால்டுவெல்.

தெலுங்கிலுள்ள வேயி, வேலுஎன்பனவேதிராவிடமொழிக்குரிய தென்பர். ஆயின் பிறதிராவிடமொழிகளில் அதன்வடிவத்தைக் காணமுடியவில்லை,

எண்ணுமுறைப்பெயர்

எண்ணுமுறைப்பெயருக்குச் சேர்க்கப்படும் உறுப்புக்கள்

தமிழ் - ஆம் | ஆவது
மலையாளம் - ஆம்
குடகு - அனெ
கன்னடம் - அனெய, அனே
துளு - அனெ
தெலுங்கு - அகுன் | அவெ

என்பனவாம். ஆ, ஆகு எனும் வினையடியாகத் தோன்றிய ஆகும், ஆம் எனும் சொல்லிலிருந்து தோன்றியிருக்கவேண்டும் என்பர்.

எண்ணுப்பெயர்களில் இந்தோ ஆரியச் சொற்களின் கலப்பு திராவிடமொழிகளிடையே பரவலாகக் காணப்படுகிறது.

இவ்வெண்களோடு கூட்டியும் பெருக்கியும் பிற எண்கள் அமையும்.

இரண்டு X பத்து - இருபது
ஆறு X நூறு - அறுநூறு
இரண்டு X பத்து X கோடி - இருபது கோடி
நான்கு + கால் — நாலேகால்
பத்து + ஒன்று — பதினொன்று
நூறு + இரண்டு — நூற்றிரண்டு

ஆறுXஆயிரம்+எழு+நூறு+இரண்டுXபத்து+நான்கு— ஆறாயிரத்து எழுநூற்றிருபத்து நான்கு.

Koviloor Digital Library

III வினைச்சொல்

தொடரில் இன்றியமையாத இடம் வகித்து மொழியில் சிறப்பிடம் பெறுவது வினைச்சொல்லாகும். செயலைக் குறிப்பது வினைச்சொல் என்று பகுக்கப்படும். அதுகாலம் உணர்த்தி வேற்றுமை ஏற்காது வரும்.

திராவிடமொழிகள் ஒட்டுநிலையமைப்புடையவை. எனவே வினைச் சொற்களும் அம்முறையில் அமையும். அடிச் சொல்லில் எந்த மாற்றமும் ஏற்படுத்தாமல்எளிதில்பிரித்தறியும் இயல்பின வாய் இணைப்புக்கள் சேரும்.

[எ-டு] செல் + வ் + ஆன் — செல்வான்.

அடிச்சொல் + தன்வினை, பிறவினை + {எச்சவிகுதி / காலக்கிளவி / எதிர்மறை} + பால் விகுதி

என்னும் அமைப்புக்கொண்டவை திராவிடமொழிகளின் வினைச் சொற்கள்.

அடிச்சொற்கள் ஆக்கவிகுதிகள் சேர்ந்தும்வரும். சேராம லும் வரும்.

(எ- டு.) பார்க்கிறேன்.
நில்—நிலை—

ஏவலாக வரும் வினையடிச்சொல்லோடு பால், காலம் காட் டும் இணைப்புக்கள் சேர்வதில்லை.

வினைகள் பால் காட்டும் விகுதிகளை இணைத்து முற்று என் றும், பாலிணைப்புக்களின்றி எச்சம் என்றும் கூறப்படும்.

1. திணைபால் உணர்த்தும் முறை

பெயர்களின் மாற்று வடிவங்களாக வினை முற்றுக்களின் இறுதியில் விகுதிகள் இணைவதுண்டு. எனவேதான் முன்னர் பெயர்களைப்பற்றி ஒப்பிட்டு ஆராயும்போது வினைமுற்று விகுதி களும் உடன்வைத்து எண்ணப்பட்டன,

Koviloor Digital Library

	தமிழ்	பழைய மலையாளம்	தெலுங்கு	கன்னடம்	துளு
தன்மை ஒருமை	என்,ஏன், அன்,அல்	ஏன்,ஆன்	னி,னு	ஏன்,என், எ	எ
தன்மைப் பன்மை	எம்,ஏம், அம்,ஆம், ஓம்	ஓம்	அமு,மு, மி	வு	அப்,அட்
முன்னிலை ஒருமை	இ,ஐ,ஆய்	ஆய்,ஆ	அவு,இவி	இ	இ
முன்னிலைப் பன்மை	இர்,ஈர், ஈர்கள்	இர்	ரு, ரி	இ	இந்தெர், இதெர்
ஆண் ஒருமை	அன்,ஆன்	ஆன்	டு,ண்டு, னு	அனு	எ
பெண் ஒருமை	அள்,ஆள்	ஆள்	தி து	அள்,ளு	அளு
ஒன்றன் பால்	து	அது	தி,து	த்	இ,உ, ண்டு,ந்து
பலர் பால்	அர்,ஆர், ஆர்கள்	ஆர்	ரு,ரி	அர்	எரு
பலவின் பால்	அ	அ,அவ, அன	வ்,வு, னு	வு	அ

பழைய மலையாளத்தில் பாலிட விகுதிகள் காணப்படுகின்றன. ஆயின் இன்றைய மலையாளத்தில் அவ்விகுதிகள் காணப்படவில்லை.

மலையாளத்தில் விகுதி இன்மையையும் தமிழில் செய்யும் என்பது போன்ற வடிவங்களையும் கண்ட கால்டுவெல் பாலிட விகுதிவினையோடு இணையாத நிலையே மூல திராவிடநிலை என்றும் பிற்காலத்தில் பாலிடவிகுதிகள் இணைந்தன என்றும் கூறுவார். 'பழைய மலையாளத்தில் பாலிட இணைப்புக்கள் இருந்து நாளடைவில் மெல்ல மறைந்தன. லீலா திலகத்தில் உள்ள

Koviloor Digital Library

விகுதிகள் கிருஷ்ண காதவில் இல்லை. கிருஷ்ண காத (Krsna gatha)வில் உள்ள விகுதிகள்எழுத்தச்சனிடம் காணப்படவில்லை. இவ்வாறு படிப்படியே விகுதிகள் மறைந்தன என்று விளக்கு வார் பேராசிரியர் இராமசாமி ஐயர்.

இடைக்காலத் தமிழ் போல மலையாளமும் பாலிட விகுதி களைத்தொடக்க காலத்தில் பெற்றிருந்தது. காலப் போக்கில் அவ்விகுதிகளை இழந்தமை மலையாளத்தில் ஏற்பட்ட புதிய மாறு தலாகும். எனவே அது மூலதிராவிட இயல்பன்று என விளக் குவார் திரு சேகர்.*

தன்மை ஒருமை விகுதியாக உயிரடுத்த னகரம் எல்லாத் திராவிட மொழிகளிலும் காணப்படுகிறது. பிராகூயில் உள்ள இவ், ஏவ், வ் முதலிய விகுதிகள் ஆரிய மொழியிலிருந்து வந்திருக்கலாமென்பார் பிளாக்.

இன்றைய தெலுங்கு, கன்னடம், தமிழ் மொழிகளில்னகரம் விடப்பட்டு உயிர் மூக்கினச்சாயல் பெறக் காணலாம். தென்திராவிட மொழிகளில் உள்ள 'ஏன்' விகுதியே மூல திரா விட மொழிக்குரியதெனலாம்.

தன்மைப் பன்மை

தனித் தன்மைப் பன்மை விகுதியாக 'ஏம்' என்பதே கொள் ளப்படும். பிராகூய் மொழியில் மகரத்துக்குப் பதில் ஒருமைக் குரிய னகரமே காணப்படுகிறது.

உளப்பாட்டுத் தன்மைக்கெனத் தனி விகுதிகள் தமிழ், கன் னடம், துளு, குடகு மொழிகளில் காணப்படவில்லை. தமிழில்தனி வகுதி இருந்ததென்று உரையாசிரியர்கள் கூற்றுலறிகிறோம். தெலுங்கு முதலிய நடு திராவிட மொழிகள் பலவற்றிலும் தனி விகுதி உளது. ஆயினும் பெயரில் உளப்பாட்டுத்தன்மைசிறப் பிடம் பெற்றது போல் வினையில் சிறப்பிடம் பெறவில்லை.

முன்னிலைஒருமை விகுதிகளாக ஆய்,இ என்பன காணப்படு கின்றன.தெலுங்குமொழியில் உள்ள நீ என்பது நீவு என மாறிய தால் வகரம் விகுதியாக வந்ததென்பர்.

முன்னிலைப்பன்மை விகுதியாக ஈர் கொள்ளப்படும். பன்மை

* Evolution of Malayalam P. 108.

Koviloor Digital Library

யில் மகரமேஇருந்திருக்கவேண்டும். ஆயின் பலர்பால்விகுதியின் செல்வாக்கால் ரகரம் வந்தது. தமிழில் கள் விகுதியும் சேர்ந்து வரக்காணலாம்.

படர்க்கை ஆண்பால் விகுதியாக ஆன் காணப்படுகிறது. நடுதிராவிட மொழிகளில் 'அன்ற்' என்பது காணப்படுகிறது. அஃறிணை விகுதி 'அன்' என்பதோடு சேர்ந்து அங்ஙனம் வந்ததென்பர்.

பெண் பால் விகுதியாக ஆள் (அள்) காணப்படுகிறது. பெண்பால் பகுப்பு தென் திராவிட மொழிகளில் புதிதாகத் தோன்றி வளர்ந்ததென்பர் P. S. சுப்ரமணியம்.

பலர்பால் விகுதியாக ஆர் தோடாதவிர எல்லா மொழிகளிலும் காணப்படுகிறது. தெலுங்கு தவிரப் பிற நடு திராவிட மொழிகளில்இவ்விகுதி ஆண் பன்மையைக் குறிக்கிறது. பெண் பன்மையைப் பலவின் பால் குறிக்கிறது. இம்முறையே மூல திராவிடமுறை என்பர் பிளாக், கிருட்டிணமூர்த்தி ஆகியோர். ஆயின் ஆர் ஆண் பெண்பன்மையைக் குறிப்பதே மூல திராவிட முறை என்று விளக்குவார் திரு சுப்ரமணியம். *

அஃறிணை ஒன்றன் பால் விகுதியாக உயிரடுத்த தகரம் காணப்படுகிறது. சில மொழிகளில் உயிர் மட்டுமே உள்ளது.

பலவின்பால் விகுதியாகப் பழந்தமிழ், பழைய மலையாளம், துளு மொழிகளில் 'அ' காணப்படுகிறது, கன்னடம், தெலுங்கில் அய் காணப்படுகிறது. 'அவ்' என்பது அவை எனும் பலவின் பால பெயரிலிருந்து தோன்றியிருக்க வேண்டும். விகுதியின்றியே பலவின்பால் உணர்த்தப்படும் நிலை தமிழ், குருக் மால்டோ மொழி வினை முற்றுக்களில் காணப்படுகிறது.

2. காலம் காட்டும் முறை

இறப்பு, நிகழ்வு, எதிர்வு எனும் மூன்று கால வேறுபாடுகள் கூறப்படும். செயல் முடிந்த நிலை இறப்பு; செயல் தொடங்கி முடியாநிலை நிகழ்வு; செயல் தொடங்கப்படா நிலை எதிர்வு; என்று வரையறுக்கப்படும். இறவாக் காலம் (Non-past),

* Dravidian Verb Morphology P. 418, 419

Koviloor Digital Library

இறந்தகாலம் (Past) எனும் இருவகையாக இன்று பகுத்துக் கூறப்படுகிறது.

(a) இறந்த காலம்

தமிழ் — த், ந்த், த்த், இ, இன், இய்
மலையாளம் — த், ந்ந், ச்ச், இ, ய்
கன்னடம் — த்(d), த்(t). க், இ, இத், த்த் (dd), ந்த்
குடகு — த்(d), ந்ந், த், இ
துளு — ய், த், த்(b)
தெலுங்கு — எ, ஆ, இன் [புதுத் தெலுங்கில்]
எ, இ, இதி, [பழைய தெலுங்கில்]

பிற திராவிட மொழிகளில் த், த்த், இத், ஞ், ந், ஆகிய விகுதிகள் காணப்படுகின்றன.

த், ந்த், த்த், இ, ச்ச், க்க், ன் — ஆகியவை மூல திராவிட விகுதிகளாகக் கருதப்படும்.

த்—இது க், ட், ற் என மாறி வழங்கும்.

யகரத்தையடுத்தும் குறிலுயிரையடுத்தும் தகரம் வரும். கோதமொழியில் சகரமாகவும் [c] தோடர் மொழியில சகரமாக வும் (s) குடகு மொழியில் ஜ்ஜ்—எனவும் மாறி வழங்குகின்றது. செய்தான் என்பது தமிழில் 'செஞ்சான்' என்று மாறுவதும் இத்தகைய மாற்றமே எனலாம்.

ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டியது என்று கூறப்படுவதும் 'த்' விகுதயின் சேர்க்கையே என்பர்.

நகு — நக்+த்+உ—நக்கு
இடு —இட்+த்+உ—இட்டு
பெறு —பெற்+த்+உ—பெறு

தகரம் னகரத்தைஅடுத்து றகரமாகவும்ணகரத்தைஅடுத்து டகரமாகவும் மாறி வழங்கும். இது மூல திராவிட நிலை என்பர்

என்+த்+ஆன் = என்றுன்
தின்+த்+ஆன் =தின்றுன்
உண்+ட் ஆன் =உண்டான்

ந்த்— தமிழ்—குடகு மொழிக்குழுவில் இ, ய், ர், ழ் மெய்யும் உகர உயிரும் பெற்று வரும் வினைகள் இவ்விடை நிலையை

Koviloor Digital Library

ஏற்கும்.

எழுந்து, இருந்து, புகுந்து,

இவ்விடைநிலை பார்ஜீ, கதபா முதலிய பிற திராவிடமொழிகளிலும் உள்ளதால் இது மூல திராவிடத்திற்குரியதெனலாம்.

தமிழ்—குடகு மொழிக்குழுவில் ந்த்—ஞ்ச் ஆக மாறும்.

மூக்கினத்தோடிணைந்த இடைநிலை [ந்த்] தன்வினையையும் இரட்டை வல்லினம் (த்த்) பிறவினையையும் குறிப்பதை இம் மொழிகளில் காணலாம்.

ஒடி—ஒடிந்தான், ஓடித்தான்
சேர்—சேர்ந்தான், சேர்த்தான்

பார்ஜியில் உள்ள ஞ்ஜ எனும் இடைநிலை ந்த் என்பதிலிருந்தே வந்திருத்தல் வேண்டும். கதபாவில் அது 'ந்' என்று மாறியுளது.

த்த்:—தமிழ்—குடகு மொழிக் குழுவில் த், ந்த், த்த் ஆகியவை வருவதில் ஓர் ஒழுங்கு காணப்படுகிறது. கன்னடம் த்(t), த்(d) எனும இரண்டைக் கொண்டுளது. நடு திராவிட மொழிகளிலும் துளுவிலும் த்[t] எனும் இடைநிலை பெரிதும் வழங்கப்படுகிறது, மூலதிராவிடத்தில் 'த்த்' என்றிருந்து நடுதிராவிடத்திலும், கன்னடம், துளுவிலும் 'த்' என்று மாறியதென்பர்.

இ:—எல்லா மொழிகளிலும் பரவலாக இவ்விடைநிலை வழங்கப்படுகிறது. கோண்டி, பெங்கோ, கொலாமி, நாய்கி, பிராகூய் மொழிகளில் மட்டும் இது காணப்படவில்லை.

தமிழ்—குடகு மொழிக்குழுவில் வல்லின மெய்யில் முடியும் வினைகள் இகர இடை நிலையையும் ஏனையவை தகர மெய்யினையும் ஏற்றுவரும். தமிழ்ச் சொற்களில் சில இவ்வரையறைக்கு உட்படாது வல்லின மெய்யில் முடியாதபோதும் இகரம்பெற்று வருவதுண்டு.

[எ—டு] தள்ளு—தள்ளி
துமமு—தும்மி

கன்னடத்தில் இகரத்தோடு (d) சேர்ந்து வருகிறது. த், ந்த் எனும் இடை நிலையிலிருந்து தோன்றியதே அதிலினைந்துள்ள தகரம என்பார் எமனோ.

Koviloor Digital Library

பழந்தெலுங்கு, கொண்டா, கூய், குவி மொழிகளிலிருந்து இகரத்தோடு த்த் இணைந்துள்ளது. நடு திராவிட மொழிகள் இகரத்தை இழந்துவிட்டன. தெலுங்கு மொழி பிற இடைநிலைகளை இழந்து இத் என்பதையே எவ்விடத்தும் பயன்படுததத் தொடங்கியது. தெலுங்கில் உள்ள 'இயெனு' என்னும் இடைநிலை இ+யகரஉடம்படுமெய்+அன் என்பதின் சேர்க்கை எனலாம்.

தெலுங்கு தமிழ்ப் பெயரெச்சங்களில் இகரத்தை ஒட்டி னகரம் உளது(எ-டு. ஓடின குதிரை)

துளுவில் இருவித இறந்த காலங்கள் உள. [Immediate past, distantpast)

வந்தான்—பத்தெ (Immediatepast)
பத்திதெ (Distantpast)

ச்:—பெரும்பாலான திராவிட மொழிகள் இதனைக் கொண்டுள.

தமிழில் முன்னிலையசையாக உள்ள 'இசன்' என்பதில் உள்ள சகரம் இதனோடு தொடர்புடையதென்பர்

கொலாமி தவிரப்பிற நடுதிராவிடமொழிகளில் இறந்தகால வினையெச்சத்தில் 'சி' எனும் இடைநிலை காணப்படுகிறது. துளு கன்னடமொழிகளில் 'சு' காணப்படுகிறது. இவற்றில் உள்ள சகரம் இறந்தகால இடைநிலை என்பர். குருக், மால்டோ பிராகூய் மொழிகளிலும் சகர இடைநிலை இறந்தகால வினை முற்றில் காணப்படுகிறது.

குருக், மால்டோ மொழிகளில் சகரம் தன்மை, முன்னிலை, இறந்தகால வினைமுற்றுக்களில் வருகிறது, பிராகூய் வினைகள் சிலவற்றிலும் ககரம் இறந்தகாலம் காட்டுகிறது. பிற மொழிகளில் இது காணப்படவில்லை.

தமிழ், மலையாளம், தெலுங்கு, பார்ஜி மொழிகளில் 'ந்' இறந்தகாலம் உணர்த்துகிறது. தமிழ் இறந்தகால வினை முற்றில் வரும் அன் சாரியையில் உள்ள னகரம் இறந்தகாலஇடைநிலை என்பார் இராமசாமிஐயர்.

தகர இடைநிலையோடு ஒலிக்க எளிமையாக இருப்பதற்கு இகரம் வந்து பின் இறந்தகால இடைநிலையாகக் கருதப்பட்டது

Koviloor Digital Library

என்பார் கால்டுவெல். 'அது' எனும் சுட்டில் உள்ள தகரமே இறந்தகாலம் உணர்த்தவந்ததென்றும் அவர் கருதுவார்.

ஈதலை உணர்த்தும் ஈ, தா,என்பனஇ,த் எனும்இறந்தகால இடைநிலை உருவாகக், காரணமாயின என்பார் மு. வ.

(b) நிகழ் காலம்

திராவிட மொழிகளில் இறந்த காலம், இறவாக் காலம் என இருவகைப்பகுப்பே உள்ளது என்பார் திரு. சுப்ரமணியம். நிகழ்காலம் நிலையற்றகாலம் என்றும் எதிர்காலம் நிகழ்காலம் என்னும் இரு காலங்களிடையே மயக்கம் காணப்படுகிறது என்றும் கூறுவர் கால்டுவெல். எனவே எதிர்காலம் நிகழ் காலம் இரண்டையும் இறவாக்காலம் என்று கொள்வர்.

தமிழ்:—தொல்காப்பியர் மூன்று காலங்களைக் குறித்துள்ள போதிலும் மூன்று காலங்களுக்குரிய இடைநிலைகளைத் தனியே விளக்கவில்லை. பெயரெச்ச வாய்பாட்டினைக் கூறும்போதும் செய்த செய்யும் என்னும் இரண்டினையே கூறுகிறார். ப், வ், என்னும் இறப்பில் கால இடைநிலைகளிலிருந்து வேறுபட்ட 'கின்று' என்னும் இடைநிலை சங்க காலத்தை அடுத்துத்தோன் றியது என்பார் திரு. தெ. பொ. மீ. அது பிற்காலத்தில் மூக்கி னத்தை இழந்து கிறு என்றும் வழங்கியதென்பார் அவர்.

செய்கு+இன்+து — செய்கின்று என்றும் இறந்தகால ஒன்றன் பால்வினைமுற்று அமையும். அது ஐங்குறு நூற்று உரையாசிரியரால் நிகழ்காலம்போல விளக்கப்படும். நற்றிணை யில் ஆகின்றது அது என்று ஒரு பயனிலையும் அடுத்த தொடரின் எழுவாயும் தொடர்ந்து உள்ளது. இது தவருக இணைக்கப்பட்டு ஒரு சொல்போலக் கருதப்பட்டு 'ஆகின்றது' என்று நிகழ்கால முற்றாகக்கருதப்பட்டதென்பார் தெ. பொ. மீ. *

"பெண்ணுருவு ஒருதிறன் ஆகின்று"

[புறம். 1]

என்னும் தொடரில் உள்ள 'ஆகின்று' ஆ [வினையடி] + கு [சாரியை] + இன் [சாரியை] + று [ஒன்றன்பால்விகுதி] என்று அமைந்திருக்கும். அது எச்சமாகக் கருதப்பட்டு பாலிறு

* A History of the Tamil Language. P. 140, 141

Koviloor Digital Library

சேர்க்கப்பட்டிருக்கும் என்று விளக்கும் திரு.சுப்ரமணியசாஸ்திரி கு எதிர்கால இடைநிலை என்றும் இப்பொழுது எனும் பொருள் படும் இன்று என்பதோடு இணைந்து 'கின்று' என வந்தது என்றும் ஒருசாரார் கருதுவதாக அவர் விளக்குகிறார். *

இவ்வாறமைந்த 'செய்கின்றது' என்னும் முற்றில்'கின்று' என்பது நிகழ்கால இடைநிலை என்று பின்னர் கருதப்பட்டது.

ஆநின்று ஆகிடந்தது என்பனவும் நிகழ்கால இடைநிலை என்பர். ஆயின் 'செய்யா' என்னும் வினையெச்சமும் பிற வினை முற்றும் இணைந்த வடிவமே இது என்பர் திரு. சாஸ்திரி, திரு. தெ. பொ. மீ.

'செய்யா' என்பது எதிர்மறை எச்சமாய் வினைமுடியாத நிலையை விளக்குவதாகவும்கொள்ளலாம்என்பார்தெ.பொ.மீ §

தமிழில் உள்ள நிகழ்கால இடைநிலைகள்-கின்று, கிறு, ற்

மலையாளம்—ஆ நின்ற், கின்ற், இன்ற், உன்ன் இன்ற்> இன்ன்> உன்ன் என மாறிவந்ததென்பர்.

கன்னடம் — உத்த், உத், த்.

(எ-டு) ஆடுத்தம்

பழங்கன்னடத்தில் இறந்தகால வினையெச்சத்துடன் ஆகு என்பதன் எதிர்கால வடிவம் இணைந்து நிகழ்காலம் காட்டும் நிலை இருந்ததென்பர்.

தெலுங்கு — டோன், தோன் — ஒன்றன்பாலுக்கு முன்
டுன்னு, துன்னு — பிறவிடத்து

---

* This may have been formed from ā (root) + ku (Cāriyai) + iṉ [Ca:riyai] + ṛu [The neuter sign termination.] Could ākinṛān have been formed by adding āṉ to ā kiṉṛ u mistaking it to be the indeclinable participle. Or as Dr. Graul, Dr. Gundert and M.J. Vinson opine kiṉru may have been formed from k a sign of the future in Tamil and inru meaning now. — History of Grammatical Theories in Tamil. P. 171

§ A History of Tamil Language P. 142.

Koviloor Digital Library

நிகழ்கால வினையெச்சத்தை அடுத்து உண்டு எனும் துணை வினை சேர்ந்தமையும் தொடர் நிகழ்காலமே [Present Continuous] இவ்வாறு மாறிவந்துள்ளது.

பார்ஜியில் — ம்
குரூக்கில் — த் (d), ன்.
மால்டோ — ன், இ.

பிறதிராவிட மொழிகளில் நிகழ்காலம் எதிர்காலத் தோடிணைந்து வழங்குகின்றது.

தமிழில் உள்ள 'கின்று' என்பதன் தோற்றம் பற்றி முன்னர்க் கண்டோம். திரு. பிளாக் 'கிற்' என்பது 'இரு' எனும் பொருளுடைய துணைவினை என்று கருதுகிறார். திரு. ஆன்ரோனேவ் (M. Andronov) என்பார் 'கில்' [செய்கிற்பன் எனும் சொல்லில் — 'கில்' — முடியும் எனும் பொருளில் வழங்குகிறது) என்பதன் இறந்தகால வடிவமே'கின்று' என்று விளக்குகிறார். க் எனும் எதிர்கால இடைநிலையும் ('இரு' என்னும் பொருளுடைய இல் எனும் சொல்லின் இறந்தகால வடிவமும் சேர்ந்த 'கின்ற்' என்பதே நிகழ்கால இடை நிலையாயிற்று என்பார் திரு. சுப்ரமணியம்.*

திராவிடமொழிகளில்இறப்பில்காலத்திலிருந்து நிகழ்காலம் வளர்ந்தது; தொடரமைப்பில் எச்சமும் துணைவினையுமாகவே நிகழ்காலம் உணர்த்தப்படுகிறது என்று உணரலாம்.

c] எதிர்காலம் :

தமிழில் ப், வ், ப்ப் என மூன்று விகுதிகள் உள. ஒன்றன் பால் தவிரப் பிறபிற பால்களில் மெல்வினைகளில் [week verbs] மூக்கினத்தையடுத்து 'ப்', பிறவிடத்து 'வ்', வல்வினைகளில் (strong verbs) ''ப்ப்' வரக்காணலாம்.

[எ-டு] உண்பேன், தருவேன், சேர்ப்பேன்.

பழந்தமிழில் 'உம்' விகுதிபலர்பால் தவிரப் பிறபால்களில் எதிர்காலத்தில் வந்தது. ஆயின் பிற்காலத்தில் அஃறிணையில் 'உம்' வழங்க ஏனையபால்களில் வ், ப் வரத் தொடங்கின.

* Dravidian Verb Morphology. P. 309, 310

Koviloor Digital Library

வ், ப்ப் என்னும் இடைநிலைகள் முறையே தன்வினை பிற வினை உணர்த்துவதையும் காணலாம்.

[எ-டு] சேர்வேன், சேர்ப்பேன்,

சங்கத்தமிழில் 'ப்ப்' இடைநிலைக்குப்பதில் 'க்குவ்' எனும் இடைநிலை வந்துளது.

[எ-டு] கொடுப்பேன் — கொடுக்குவேன்.

தன்மை ஒருமையில் 'கு', பன்மையில் 'கும்' இடைநிலை எதிர் காலத்தில் வழங்குகின்றன.

(எ-டு) காண்கு, உண்கும்.

ப, மார் என்பன ப்+அ, ம்+ஆர் என்று உருவாகியிருக்கக் கூடுமென்பர்.

தமிழில் — ப், வ், ப்ப், க்க், உம்
மலையாளம் — 'வ்' இடைநிலை 'உம்' விகுதி.
கன்னடம் — வ், உவ், ப்ப், h, b
தெலுங்கு — டுன், துன், டா, தா
துளு — ப், வ், b
பெங்கோ — ன்
கொலாமி — தத், த் [d]
மால்டோ — எ, என்

இன்னும் பிறமொழிகளில் க்வ் [கோதம்] அக், க், ன், ஆன், ஆர் [கோண்டி] த், ன், [கூய்](குவி), ர, இய (பார்ஜி) முதலிய இடைநிலைகள் காணப்படுகின்றன.

பிற திராவிடமொழிகளில் நிகழ்காலமும், எதிர்காலமும் இணைந்த நிலையே உளது.

ப்ப், வ் :—

தென்திராவிடமொழிகளில் இவ்விடை நிலைகள் காணப்படு கின்றன. தோடா, கோதமொழியில் இறப்பில் காலத்தில் இவைபயன்படுகின்றன. கன்னடத்தில் ப்ப், வ் இரண்டும் இருந்து பின்னர் வகரமே பெருவழக்குப் பெற்றது.

நடு, வடதிராவிடமொழிகளில் இவ்விணைப்புக்கள் காணப் படவில்லை. கொண்டா, கூய், குவி முதலிய நடுதிராவிடமொழி களில் மட்டுமே இவ்விணைப்புக்கள் காணப்படுகின்றன. வட

Koviloor Digital Library

திராவிடமொழியில் பிராகூயில் மட்டுமே இறப்பில் கால இடைநிலையாக 'ப்' காணப்படுகிறது.

வ், ப்ப் என்பன மூலதிராவிடத்திற்குரியன. ஆயின் அவை தன்வினை, பிறவினைக்கு வேறுபட்டு வழங்கும்நிலை தமிழ்-குடகு குழுமொழிகளில் ஏற்பட்ட பிற்கால வளர்ச்சியே என்பர்.

க்க், க் :—

தமிழ், மலையாளம், கோதம், தோடா, குடகு, கன்னடம், கோண்டி, கொலாமி, நாய்கி, பார்ஜி, பிராகூய் ஆகிய மொழிகளில் இது காணப்படுகிறது.

நிகழ்காலத்தில் வரும்'கின்ற்'எனும் இடைநிலையில் உள்ள ககரம் இதனோடு ஒப்புமை உடையதென்பது முன்னர்க் கூறப்பட்டது.

பழந்தமிழிலும் கன்னடத்திலும் 'கும்' இடைநிலை காணப்படுகிறது. அது க்+உம் என்பதின் கூட்டே:

கோண்டியில் உள்ள க், கோயாவில் உள்ள கோ, கூயில் உள்ள கி, ப்கி, கொலாமி, நாய்கியில் உள்ள க் ஆகியவை ககரத்தைக் கொண்டுள்ளன.

பார்ஜியில் உள்ள இறப்பில் கால இடைநிலையாகிய எக் பிராகூயில் உள்ள 'இக்' —என்பன இதிலிருந்தே வந்திருக்க வேண்டும்.

த்த், த் :—

பழந்தமிழில் இவ்விடைநிலைகள் உள.

[எ-டு] எழுதும், படர்தி, அறிதிர்.

கன்னடத்தில் து, த்து நிகழ்காலத்தில் வழங்குகின்றன. பழந்தெலுங்கில் தா, துன் உள. கோண்டியில் உள்ள ஆந்த், ந்த், கோயாவில் உள்ள 'இத்' கூய்குவியில் உள்ள த், இத் ஆகியவை இவ்விடைநிலைகளோடு தொடர்புடையன.

கொலாமி, நாய்கி, பார்ஜி மொழிகளிலும் இவ்விடைநிலை வடிவங்கள் உள.

வடதிராவிட மொழிகளில் குருக்கில் மட்டுமே இவ்வடிவங்கள் உள,

Koviloor Digital Library

பெரும்பாலான மொழிகளில் இவை காணப்படுவதால் மூல திராவிட வடிவங்களாக இவை கொள்ளப்படும். எனினும் தென்,வடதிராவிடமொழிகளைவிட நடுதிராவிடமொழிகளிலேயே இவை பெருவழக்கில் உள. தகரமே முதலில் வழக்கிலிருந்து பின்னர் பகரமாக மாறியிருக்க வேண்டுமென்பர்.

உம் :—

தமிழ்' மலையாளம், குடகு, கன்னடம், துளு, தெலுங்கு, கொலாமி, பார்ஜி மொழிகளில் இவ்விகுதி உளது.

இது பாலிடவிகுதி ஏற்பதில்லை; அதுவே பாலையும் காலத்தையும் காட்டும். மலையாளத்தில் 'உம்' எல்லா இடத்திற்கும் வருகிறது.

தமிழ்,மலையாளத்தில் முக்காலத்திலும்ஒத்தியல்பொருளைக் குறிக்க (Habitual Tense) உம் வழங்குகிறது. குடகு மொழியில் உள்ள 'உ'கர இடைநிலை பழங்கன்னடத்தில் உள்ள 'கும்' துளுவில் உள்ள 'உ' பழந்தெலுங்கில் உள்ள 'உனு' ஆகியவை இதனோடு தொடர்புடையனவே.

பல்வேறு மொழிகளில் இது காணப்படுவதால் மூலதிராவிட வடிவமாக அது கருதப்படும்.

பார்ஜி மொழியில் எம் என்பது இறப்பில்கால இடைநிலையாக வழங்குகிறது. உம் என்பதின் திரிபே இது. 'உம்'மையடுத்துப் பாலிட விகுதிகள் இணைவது பார்ஜியில் காணப்படும் புது நிலையாகும். 'உம்' — பாலிடம் உணர்த்தும் நிலையில் பலமொழிகளில் பலமாற்றங்கள் ஏற்பட்டுள்ளமை குறிக்கத் தக்கது.

ங் :— பழந்தமிழ், துளு, கோண்டி, கொண்டா, பெங்கோ, கூய், கொலாமி, குருக், மால்டோ ஆகிய பல்வேறு குழுமொழிகளில் இது காணப்படுவதால் மூலதிராவிடவடிவமாக இது கொள்ளப்படும்.

தமிழில் 'அறிநர்' போன்ற வினையாலணையும் பெயரில் நகரம் வந்துள்ளது. அது 'உம்' என்பதின் திரிபென்பர் சிலர். ஆயின் அதனை மறுத்துத் தனி இடைநிலை என்பார் திரு. சுப்ரமணியம்.

Koviloor Digital Library

சில திராவிடமொழிகளில் நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் தனித்தனி இடைநிலைகள் இருந்தபோதிலும் அவ்விரு காலங்களுக்கிடையே மயக்கம் காணப்படுவது குறிக்கத்தக்கது. சிலதிராவிடமொழிகள் இறப்பில் கால இடைநிலை என்று நிகழ்வு, எதிர்வு எனும் இருகாலத்தையும் இணைத்தே இடைநிலைகளைக் கொண்டுள. தமிழில் உள்ள 'செய்யும்' எனும் வினைமுற்று கூட அத்தகையதே எனலாம்.

இன்றைய தமிழில் 'வருகிறேன்' என்னும் நிகழ்காலம் உறுதியானஎதிர்காலத்தையும் 'வருவேன்'என்பது உறுதியற்ற எதிர்காலத்தையும் உணர்த்தக் காணலாம்.

எதிர்காலத்தின் முந்திய பகுதியே நிகழ்வு என்று கருதப் படுகிறது. மேலும் நிகழ்காலம் நிலையற்றதாய் எதிர்காலத்தோடும் இறந்தகாலத்தோடும் இணைந்துவிடும் நிலையில்உளது. எனவே நிகழ்காலம்,எதிர்காலம் இரண்டையும் இறப்பில்காலம் எனக்கொள்வது பொருந்தும்.

தொழிற்பெயராக இருந்தவை காலம்உணர்த்தாமலிருந்து பிறகு முக்காலத்திற்கும் பொதுவினையாக மாறி நாளடைவில் எதிர்கால வினையாக அமைந்திருக்கும் என்பர். கு, வு, பு என்னும் தொழிற்பெயர் விகுதிகள் எதிர்காலம் உணர்த்த வருவது இதற்குச் சான்றும்.

உம் என்ற எதிர்கால இடைநிலை எண்ணிடைச் சொல்லாகிய உம்மிலிருந்து வந்ததென்பார் கால்டுவெல். உயர்வு, உம்பர் போன்ற பொருளில் வரும் உகரமே அதற்கு அடிப்படை என்பர், குண்டர்ட், மு.வ, ஆகியோர்.

d] பிறகால வேறுபாடுகள் :—

இறப்பு, நிகழ்வு, எதிர்வு எனும் முக்காலங்கள் தவிர அவற்றிலிருந்து வேறுபல காலங்கள் தோன்றியுள. கொள். இரு, இடு. நில் முதலிய துணை வினைகள் அக்கால வேறுபாடுகளை உணர்த்தும்.

செயல் தொடர்நிலை, பயன் தொடர்நிலை ஆகியவை உணர்த்தப்படுகின்றன.

படித்துக் கொண்டிருக்கிறேன் (தொடரும் நிகழ்வு)
படித்துக் கொண்டிருந்தேன் [தொடரும் இறப்பு]

 Koviloor Digital Library

படித்துக் கொண்டு இருப்பேன் [தொடரும் எதிர்வு]
பார்த்திருக்கிறேன் [பயன் தொடர் நிகழ்வு]
பார்திருந்தேன் [,, இறப்பு]
பார்த்திருப்பேன் [,, எதிர்வு]

தொடர்காலத்திற்கு கொண்டு [தமிழ்] ஒண்டு [துளு] ர் [கோதம்] துன்ன (தெலுங்கு) ஆகியவை திராவிட மொழிகளில் வழங்குகின்றன.

இவ்வாறு துணைவினைகளைப் பெருக்கி நுண்ணிய காலவேறுபாடுகளை உணர்த்தும் நிலை எல்லாத் திராவிட மொழிகளிலும் காணப்படுகிறது.

3. தன்வினை, பிறவினை

ஒரு தொடரில் பயனிலையாக உள்ள செயலை அத்தொடரில் வரும் எழுவாயே செய்வது தன்வினை எனப்படும். அவ்வாறின்றி எழுவாய் அச்செயலைச் செய்யாது வேறொன்று செய்வது பிறவினை எனப்படும். (எ-டு உண்டேன், உண்பித்தேன்.)

ஆங்கிலத்தில் செயப்படுபொருள் குன்றியவினை [intransitive] செயப்படுபொருள் குன்றாவினை (Transitive) எனும் பாகுபாடு உளது. தன்வினை, பிறவினைப் பாகுபாட்டிற்கும் இதற்கும் சிறிதே ஒற்றுமை உளது.

ஆடினேன் — தன்வினை — செயப்படுபொருள் குன்றியது.

ஆட்டினேன் —பிறவினை—செயப்படுபொருள் குன்றாவினை. எனவே கால்டுவெல் தன்வினையை Transitive என்பார். ஆயின் அது முழுதும் பொருந்தாதென்பார் திரு. சுப்ரமணியசாஸ்திரி.

தமிழில் தன்வினை பிறவினைப்பாகுபாட்டினைத் தொல்காப்பியரே குறிக்கிறார். *

தமிழில் தன்வினை ஆறு வகையில் உணர்த்தப்படும்.

1] வினையடிச் சொல்லில் உள்ள பொருள் சிறப்புணர்த்தும் இணைப்பினை இரட்டித்தல்.

பெயர்குவை — பெயர்க்குவை
பெருகு — பெருக்கு

---

* தன்பாலானும் பிறன்பாலானும் —தொல். சொல் 243.

Koviloor Digital Library

2] கால இடைநிலைகளில் உள்ள மூக்கினத்தை வல்லின மாக்கியும் வல்லினத்தை இரட்டித்தும் பிறவினைகாட்டல்.

[எ-டு] திருந்தி — திருத்தி
சேர்வான் — சேர்ப்பான்.

3] வினைச்சொல்லில் உள்ள வல்லினத்தை இரட்டித்தல்.
(எ-டு) ஓடு — ஓட்டு

4) 'த்து' — விகுதி இணைத்தல்.
[எ-டு] அலர் — அலர்த்து.

5] பி. வி — விகுதி சேர்த்தல்
[எ-டு] செய்தான் — செய்வித்தான்.

6) 'ஈ' சேர்த்தல்.
(எ-டு) அறி — அறீஇ.
இரு — இரீஇ.
கெழு— கெழீஇ.

இதனைச் சொல்லிசை அளபெடை என்று இலக்கணிகள் கூறுவர். ஆயின்

இர்+ஈ+இ

வினை+கொடுஎனும்பொருளுடையவினை+வினையெச்சவிகுதி என்பதன் சேர்க்கையே இரீஇ என்று விளக்கி 'ஈ' என்னும் வினையே பிறவினை விகுதியாக வந்ததென்பார் திரு. சுப்ரமணிய சாத்திரியார்.

பி, வி என்னும் விகுதிகள் பிறழ் பிரிப்பினால் வந்தனவே. 'இ' - மட்டுமே விகுதி என்று அவர் விளக்குவார்.

கால இடைநிலைகளுள் ந்த், ட், கிற், வ், உம் என்பன தன் வினையையும் த்த், க்கிற், ப்ப், க்கும் என்பன பிறவினையையும் உணர்த்தும் என்று விளக்குவார் திரு. P.S. சுப்ரமணியம்.

இக்காலத் தமிழில் விகுதியின்றி செய், வை, பண்ணு முதலிய துணைவினைகளே பிறவினை உணர்த்துகின்றன.

தமிழில் பயன்படும் பிறவினைவிகுதிகள்—இ, த் எனலாம்.

மலையாளத்தில் 'க்க்', 'த்த், பிறவினை விகுதியாக வரும். வினைச்சொல்லின் ஈற்று வல்லினத்தை இரட்டித்தும் வி,பி விகுதி

Koviloor Digital Library

சேர்த்தும் பிறவினை உணர்த்தல் வேண்டும்.

குடகு :— 1] மூக்கினம் வல்லினமாக்கல்
2] க். த், இப் சேர்த்தல்.
3] காலஇடைநிலையை மாற்றல்.

கன்னடம்:- 1] சு, (su ,cu) இசு, அசு விகுதிகள் இணைதல்.
2] பு, ப்பு — விகுதி இணைதல்.
3] கால இடைநிலை மாற்றல்.

துளு :— பு விகுதி சேரல். போ, ஒ விகுதி சேரல்.

தெலுங்கு:— 1] சு, பு, இஞ்சு விகுதி சேரல்
2] வினையீறுமாறி பு வரல் [உடுகு-உடுபு]

மாற்றமின்றியே பிறவினை உணர்த்தலும் தெலுங்கில் உளது. [எ-டு] ஆகு தமிழில் ஒடி வெளு முதலிய வினைகள் அத்தகையன. இன்றைய தெலுங்கில் வேயு, கொட்டு, போயு, பெட்டு, தோயு முதலிய துணைவினைகள் சேர்ந்து பிறவினை உணர்த்தும்.

பிறமொழிகளில் க் (h), பூஸ், ஊஸ், ங், க், த், ம்ப், அப், இப், ப், க், த், உப் எனும் விகுதிகள் காணப்படுகின்றன. இடைநிலைகளிலும் அடிச் சொல்லிலும் மெல்லினத்தை வன்மைப் படுத்திப் பிறவினை உணர்த்தும் நிலை குவி, கூய், மண்டா, பெங்கோ, முதலிய பிறமொழிகளிலும் காணப்படுகிறது.

திராவிட மொழிகளில் பிறவினைப் படுத்தும் முறைகள்:

1) வினைகளில் வல்லினம் இரட்டல்
2) த்த் (ட்ட், ற்ற்)
3) ப்ப்
4) ச்ச்
5) வி, ப்பி.

இம்முறைகள் மூலதிராவிடமுறை எனலாம்.

i) வல்லினம் இரட்டல்

வினையடிச் சொல்லில் உள்ள மூக்கினம் வல்லினமாதலும், வல்லினம் இரட்டலும் தமிழ், மலையாளம், கோதம், தோடா, குடகு, முதலிய தென்திராவிட மொழிகளிலும் கொண்டா, பெங்கோ, மண்டா, கூய், குவி முதலிய நடு திராவிடமொழிகளிலும்

Koviloor Digital Library

காணப் படுகின்றன. கன்னடத்தில் இம்முறை பெருகிக்காணப் படாவிட்டாலும் அருகிக்காணப் படுகிறது.

பார்ஜி, கொலாமி, குருக், மால்டோ மொழிகளிலும் இம் முறை சில வினைகளில் காணப் படுகின்றன.

எனவே இது மூலதிராவிடமுறை எனலாம்

இம்முறையில் ம்பு > ப்பு என்று மாறும் நிலையை அடக்க முடியாது. ஏனெனில் 'ப்ப்' எனும் பிறவினை விகுதி சேர்ந்த வடிவம் வந்தபின்னர் ஒப்புமையாக்க முறையில் 'ம்ப்' வடிவம் வந்ததென்பர்.

எழு > எழுப்பு > எழும்பு.
நிர > நிரப்பு > நிரம்பு.

வல்லினமாதல் இரட்டித்தல் எனும் முறையும் 'த்த்' விகுதி சேரும் முறையும் இருவேறுதனி முறைகள் என்பர் சிலர். திரு. இராமசாமி ஐயரவர்கள் 'த்த்' எனும் விகுதி இணையும்போது,

ங்க்+த்த் = க்க்
ட்+த்த் = ட்ட்
ற்+த்த் = ற்ற்

என்று மாறும் என்று விளக்குவார். மு. வ.வும் இக்கருத்தையே ஏற்று விளக்குகிறார்.

ii] த்த் (ட்ட், ற்ற்)

தெலுங்கு, பிராகூய்தவிரப்பிறமொழிகளில்இவ்வடிவங்கள் உள.

குருக்கில் உள்ள த, மால்டோவில் உள்ள த்ர், தித் என்பன இதனோடு தொடர்புடையனவேயாகும். கோண்டியில் உள்ள [h] 'த்த்' வடிவத்திலிருந்தே வந்திருக்க வேண்டும் என்பர்.

iii] ப்ப் கோதம், கோண்டி, குருக், மால்டோ தவிரப் பிற மொழிகளில் இது காணப்படுகிறது.

பிராகூயிலும் பார்ஜியிலும் இவ்வடிவம் பிற விகுதிகளின் இடத்தைப் பிடித்துப் பரவலாக வழங்கத் தொடங்கியது.

கொலாமி, நாய்கி, பார்ஜி, கதபா மொழிகளை ஒப்பிட்டு நோக்கும்போது 'இப்த்', 'ப்த்' என்ற வடிவங்கள் இருந்து பின் இப், ப் எனும் வடிவங்கள் வந்தன என்பது விளங்குகிறது.

Koviloor Digital Library

iv] ச்ச் தமிழ், மலையாளம், குடகு, கொலாமி, நாய்கி, குருக், மால்டோ, பிராகூய் மொழிகளில் இவ்வடிவம் காணப்படவில்லை. தோடா, கோதம், கன்னடம், துளு, தெலுங்கு, கோண்டி, கொண்டா மொழிகளில் காணப்படுகிறது.

மலையாளத்தில் இவ்விகுதி காணப்படுகிறது*

[எ-டு] செய்யிச்சு, வைப்பிச்சு, கொடுப்பிச்சு

இ, ய் முதலிய ஒலிகளையடுத்துத் தகரம் சகரமாவது தமிழ் முதலிய மொழிகளின் இயல்பாகும். எனவே மூலதிராவிடத் தகரமே சகரமாக மாறியுள்ளதெனலாம்.

பழந்தெலுங்கில் ச்> ப் என மாறியுளது.

க்க் எனும் பிறவினை விகுதியே ச்ச் என அண்ணமெய்யாக மாறியுளதென்று கால்டுவெல், இராமசாமி ஐயர் ஆகியோர் கருதுவர். ஆயின் அதை ஏற்காது மறுக்கிறார் திரு. சுப்பிரமணியம்.

v] வி [ப்பி] பழந்தமிழிலும் மலையாளத்திலும் இவ்வடிவம் உளது.

தெலுங்கில் உள்ள இஞ்சு, பிஞ்சு என்னும் விகுதிகள் வி, பி என்பவற்றோடு தொடர்புடையன. இ, ச்ச் எனும் இரு விகுதிகளின் சேர்க்கையே இஞ்சு, பிஞ்சு என்பார் திரு. இராமசாமி ஐயர்.

கன்னடத்தில் உள்ள இசு, 'ச்ச்' என்பதிலிருந்து வந்ததேயன்றி 'வி' யிலிருந்து வரவில்லை என்பார்.

'வி', 'பி' என்பன பிறவினை விகுதிக்கு மேல் விகுதியாகச் சேரும் இயல்புடையன. அம்முறையில் நோக்கினால் பிராகூயில் உள்ள இப் [iſ] விகுதிக்குமேல் விகுதியாகச் சேரும் இயல்புடையதாயிருப்பதால் அது வி, பி முதலிய விகுதியிலிருந்தே வந்திருக்க வேண்டுமென்பார்.

வி, பி எனும் விகுதிகளின் தோற்றம் ஆராயத்தக்கது. கால்டுவெல் வ், ப்ப் எனும் எதிர்கால விகுதிகளோடு இதனை ஒப்பிட்டு விளக்குவார். இகரவிகுதி ஈ எனும் வினையோடு தொடர்புடையதென்பார் அவர். ஈ எனும் வினையிலிருந்து

* Evolution of Malayalam. P. 104.

Koviloor Digital Library

வந்த இகரவிகுதி பிறவினைகளோடு சேரும்போது வகரம் வந்திருக்கலாமென்பார் திரு. இராமசாமி ஐயர்.

காலஇடைநிலை மாறுபாடு

தமிழ், மலையாளம், தோடா, கோதம், குடகு மொழிகளில் இ,வ்,ஐ,ர்,ழ் ஈற்றிலுடைய வினைகளில் கால இடைநிலைகளின் மாற்றுவடிவங்களைப் பயன்படுத்திப் பிறவினைப்பொருள் தரும் நிலைகாணப்படுகிறது.

இறந்தகாலம் — தன்வினை — ந்ந் — பிறவினை — த்த்
எதிர்காலம் — தன்வினை — வ், உம் பிறவினை
— ப்ப், க்கும்.
நிகழ் காலம் — தன்வினை — கின்ற், கிற்-
— பிறவினை — க்கின்ற்,க்கிற்.

பிறமொழிகளில் இம்முறை காணப்படாததால் இது இக்குழுவில் தோன்றிய புதுமுறை எனலாம்.

வல்லினம் இரட்டித்துப் பிறவினை காட்டும் திராவிடமொழி இயல்பே இம்முறைக்கு அடிப்படை எனலாம். மேலும் த்த், ப்ப் என்பன பிறவினை விகுதியாகவும் காலஇடைநிலைகளாகவும் காணப்படுவதால இம்முறை வளர்ந்ததென்பர். இவ்வல்லின மெய்களில் ஒன்று [த்ப்]காலம் காட்டும், மற்றொன்று பிறவினை உணர்த்தும் என்று ஒருசாரார் விளக்குவதும் உண்டு.

நுணுகி நோக்கும்போது பிறவினையில் இருவகை காணப்படுகிறது.

1) நான் கற்றேன்
நான் அவனுக்குக் கற்பித்தேன்
நான் உண்டேன்
நான் அவனுக்கு ஊட்டினேன்
நான் கண்டேன்
நான் அவனுக்குக் காண்பித்தேன்

2) நான் கற்றேன்
நான் அவனைக் கற்கச் செய்தேன்
நான் உண்டேன்
நான் அவனை உண்ணச் செய்தேன்

Koviloor Digital Library

நான் கண்டேன்

நான் அவனைக் காணச் செய்தேன்

இவ்விரு பிரிவிற்கும் சிறிதே பொருள் வேறுபாடு இருக்கக் காணலாம்.

4. வினைஎச்சம்

பாலிறுகளை ஏற்காமல் வினையடிச்சொல்லும் கால இடைநிலையும் இணைந்தமைவதே எச்சம் எனப்படும். அது வினையைக் கொண்டு முடிந்தால் வினைஎச்சம் எனப்படும்.

இறந்தகால வினையெச்சம் :—

தமிழ் :— வினையடிச்சொல்லும் இறந்தகால இடைநிலையும் இணைந்த வடிவமே இறந்தகால வினையெச்சமாக வரும். மெய்யீற்று வினையெச்சம் உகரம் பெற்றும் இகர ஈற்று வினையெச்சம் வகரம் பெருதும் வரும்.

பழந்தமிழில் ஆஅ, ஊஉ, பு. ஈ இ ஆகியவை சேர்க்கப்பட்டு வினையெச்சமாயின.

மலையாளம் :— தமிழைப்போலவே இறந்தகால வடிவம் வினையெச்சமாக வரும். மெய்யிறு உகரத் துணைபெற்றும் வரும். உகர ஈருகவும் இகர ஈருகவுமே வினையெச்சம் இருக்கும்.

குடகு :— இறந்தகால வினைவடிவத்தோடு 'இதி' இணைந்து வினையெச்சம் அமையும்.

துளு:- இறந்தகால வினையடிச் சொல்லே எச்சமாக வருவதும் தி எனும் ஈறு பெற்று வருவதும் உண்டு.

கன்னடம் :— இறந்தகால வினையடிச் சொல்லே எச்சமாக வரும். இத் என்னும் இடைநிலை இகரமாகவும் ஏனை வடிவங்கள் உகரத்துணை பெற்றும் வரும்.

தெலுங்கு :— வினையடிச் சொல்லோடு இகரம் சேர வினையெச்சம் அமையும்.

'செப்பி', தினி,

கா [gaa] எனும் விகுதி பெயர்களோடும் பெயரெச்சத்தோடும் இணைந்து வினையெச்சமாக வரும்.

பிறமொழிகளில், சி [si,ci], ஜி, அ, சு, ஜொ, ஜு, அ, ச, ஜ, துன், இ ஆகியவை இணைந்து எச்சப் பொருள் தருகின்றன.

 Koviloor Digital Library

தென் திராவிட மொழிகளில் இறந்தகால வினைவடிவமே இறந்தகால எச்சமாக வருகிறது. உகரத்துணையோ, இகர இடைநிலையோ ஈற்றிலிருக்கக் காணலாம். குடகு, தோடா, கோத மொழிகளில் இதி, ச், ற் என்பன ஈற்றிலே உள. அவை 'விட்டு' என்பது போன்ற துணை வினையிலிருந்து தோன்றியிருக்கலாம்.

பிராகூயில் இறந்தகால வினையெச்சம் காணப்படவில்லை. குருக் மொழியில் உள்ள இறந்தகால வினையெச்ச விகுதியாகிய 'ஆர்', இந்தியில் உள்ள 'கா' [kar] என்பதிலிருந்து வந்திருக்கலாமென்பர். மால்டோவில் இகரம் சில இடங்களில் காணப்படுடுறது. எனவே வடமொழிச் செல்வாக்கு வடதிராவிட மொழிகளில் காணப்படுகிறது.

கொலாமி, நாய்கி தென்திராவிடமொழிகளைப் போலவே இறந்தகால வடிவத்தைக் கொண்டுள. ஏனைய நடுதிராவிட மொழிகளில் இ, சி என்பன விகுதியாக உள. வல்லினத்தை யடுத்து வரும் இறந்தகால விகுதியாகிய இகரமே (ஆடி) வட திராவிடமொழிகளில் எல்லா வினையோடும் இணைந்துள்ளது.

'இ'கர விகுதி பிறழ்பிரிப்பால் 'சி' என மாறியதென்று சிலர் கருதுவர். இறந்தகால இடைநிலையாகச் 'சி' உள்ளமை முன்னர்க் கூறப்பட்டது. எனவே இங்கும் அதுவே இணைந்துள்ளதாகக் கொள்ளலாம்.

இறந்தகால வினையெச்சம் வினை தொடரும் நிலையை உணர்த்தும்.

அவன் பார்த்து வந்தான்.

காரணப் பொருளையும் 'முறை' விளக்கப் பொருளையும் காட்டுவதுண்டு. (எப்படி என்பதற்கு விளக்கமாக)

(எ-டு) அவன் படித்துத் தேர்ந்தான்
அவன் ஓடி வந்தான்

(ஆ) நிபந்தனை வினையெச்சம்

தமிழில் — இன், இல், ஆல் [எ-டு] வரின் உணில் உண்டால்

மலையாளம் — இல், ஆல்

குடகு — ஏங்கி

Koviloor Digital Library

கன்னடம் — அரெ, ஒடெ
துளு — ட
தெலுங்கு — இதே

மேல், இங், கு. இங, இஸ், எக, தெ. ஏ, ஒத், எம்முதலிய விகுதிகள் நிபந்தனைப்பொருளில் பிறதிராவிட மொழிகளில் வழங்குகின்றன.

இறந்தகால வினையோடு நிபந்தனை விகுதி சேர்த்து நிபந்தனைப்பொருள் தரும் நிலை தென்,வடதிராவிட மொழிகளில் காணப்படுகிறது. ஆயின் விகுதிகளில் ஒப்புமை காணப்படவில்லை.

இ) சலுகைப்பொருள் வினையெச்சம் (Concessive)

செய்தாலும் எனும் பொருளில் இது வழங்கும்.

தமிழில் நிபந்தனை வினையெச்சத்தோடும் உம் சேர்ந்து சலுகைப்பொருள் தரும் (எ-டு) வரினும் மலையாளத்திலும் அவ்வாறே,

கன்னடம் நிபந்தனை+ஊ
துளு நிபந்தனை+ல
தெலுங்கு இனு (நிபந்தனையும் சலுகையும் 'இனவ்' எனும் ஒரே விகுதிகாட்டுவது பழந்தெலுங்கில் உளது.

தேர், ஆன,ப, வெ, திரி முதலிய வடிவங்கள் பிறதிராவிட மொழிகளில் உள்ளன.

எல்லாத் திராவிடமொழிகளிலும் 'கூட' எனும் பொருள் தருவதை நிபந்தனை வினையெச்சத்தோடு சேர்த்துச் சலுகைப் பொருள் தரும் நிலையே காணப்படுகிறது.

ஈ] இறப்பில் கால வினையெச்சம்

வினையெச்சம் காலம் காட்டும் இடைநிலைகளைக் கொண்டிருந்தபோதிலும் காலம் காட்டுவதில்லை என்பர். 'வந்து செல்வான்' என்று வரும்போது 'வந்து' இறந்தகாலம் என்று கூறுதல் இயலாது என்பர். எனவே வினையெச்சத்திற்குக் காலச்சிறப்பின்றிப் பொருட் சிறப்பே உள்ளதெனலாம்.

உ] செய்வென் எச்சம்

தமிழில் — 'அ' — இனையும். ப்ப், க்க் என்பனவற்றை

Koviloor Digital Library

யடுத்து அகரம் சில வினைகளில் இணையும்.

இய, இயர், மார் என்பன பழந்தமிழில் நோக்கப் பொருளில் வரும். வான், பான், பாக்கு என்பனவும் நோக்கப் பொருளில் வரும்.

செயவென் எச்சம் பயன், நோக்கம், ஒரே சமயம் முதலிய பொருளில் வரும்.

மலையாளத்தில் அகரமே வரும். பழைய மலையாளத்தில் 'வான்' 'பான்' 'மான்' என்பன சேரும்.

கன்னடத்தில் — அ, அல், அலு, எ
துளு — அரெ
தெலுங்கு — அன்

'ஆ' பலமொழிகளில் காணப்படுவதால் அது மூலதிராவிட இணைப்பாகக் கொள்ளப்படும்.

செயவென் எச்சத்தையும் தொழிற்பெயரையும் தொடர்பு படுத்தி 'அ' எனும் இணைப்பே 'அல்' என்று தொழிற்பெயர் விகுதி யாயிற்று என்பார் டாக்டர் கால்டுவெல். ஆயின் திரு. சுப்பிரமணியம் அக்கருத்தை ஏற்கவில்லை.

தெலுங்கில் 'அன்' என்பதில் உள்ள னகரம் ஒலிநயச் சேர்க்கை என்பர்.

பார்ஜி மொழியில் உள்ள 'க்' தமிழில் உள்ள 'க்க்' என்பதோடு தொடர்புடையது.

செய என்னும் எச்ச நோக்கப் பொருளில் செயற்குஎன்னும் சொல் தமிழில் வருவதுபோல் கொலாமி, நாய்கி, பார்ஜி, கதபா மொழிகளிலும் ககரம் காணப்படுகிறது, அது நான்காம் வேற்றுமை உருபேயாகும்.

செயவெனும் எச்சம் பல்வேறு பொருளில் வழங்கும்.

1) நோக்கப் பொருளே சிறப்புடையது.
   (எ-டு) அவன் படிக்க வந்தான்
2) காரணப்பொருள்
   [எ-டு] மழைபெய்யக்குளம் நிறைந்தது.
3) பயனைக் குறிப்பதும் உண்டு.
   [எ-டு] குளம் நிறைய மழை பெய்தது.
4) ஒரே சமயத்தில் நடக்கும் நிகழ்ச்சியைக் குறிக்கும்.

Koviloor Digital Library

காகம் அமரப் பனம்பழம் வீழ்ந்தது.

செயவென் எச்சம் தொழிற் பெயரோடும் வியங்கோள் வினைமுற்ருேடும் உருவ ஒற்றுமை கொண்டுளது.

பிராகூய், கொலாமி, கொண்டா, கூய் மொழிகளில் தொழிற்பெயராக அது வருமென்பர்.

'அவன் வரக்கண்டேன்' எனும் தொடரில் 'அவன்வரல்' கண்டேன்' என்னும் தொழிற்பெயரே உள்ளதென்பார் மு. வ.

தென்திராவிட மொழிகளில் அது வியங்கோள் பயனிலையாக வழங்குகிறது.

பிறநிகழ்கால வினையெச்ச விகுதிகள்

கோதம்	— ர் —
கன்னடம்	— உதும், உதெ, உத, உதா
துளு	— ஒண்டு
தெலுங்கு	— சுன்
கோண்டி	— சேர்
கூய்	— ஐ
குவி	— இ

தமிழில் தனியாக வினையெச்ச விகுதி இல்லை. இறந்த கால வினையெச்சத்தோடு கொண்டு எனும் துணைவினை சேர்ந்து நிகழ்கால வினையெச்சம் அமையும்.

''வந்து கொண்டு இருக்கிறேன்'' 'கொண்டு' என்பதன் திரிந்த வடிவமே ஒண்டு (துளு) எனலாம்.

நிபந்தனைப் பொருளில் வரும் செயின், செயில், செய்தால் என்பன எதிர்கால வினையெச்சம் எனப்படும்.

5. வினையடை

வினைக்கு அடையாக வினை எச்சம் பெரிதும் வரும்.

[எ-டு] போய் வந்தேன்.

தமிழில் நன்று கூறினுய், நனிமகிழ்ந்தான் போன்று பெயர்களும், நன்ருக, பசுமையாய்,போன்று ஆக,ஆய் சேர்ந்த பெயர்களும் வினையடையாக வருமென்பார் மு. வ. சுட்டடியாக அப்படி, அங்கு, ஆண்டு முதலியவை வினையாக வரும்.

Koviloor Digital Library

பின், முன், கால், கடை முதலிய காலம், இடம் காட்டும் சொற்கள் வினையடையாக வரும்.

மலையாளத்திலும் காலம், முறை, இடம் குறித்து வினையடை யமையுமென்பர்.

(எ-டு) முன்னம், பின்னே, பிற்பாகம், இப்படி, இப் பரிசே, மேல்

கன்னடத்திலும் காலம், இடம், முறை எனும் மூன்றுவித மாகப் பெயரடை வருமென்பர்.

காலம் — அந்து, இந்து [அப்பொழுது, இப்பொழுது]
இடம் — இல்லி, பொறகெ [பின்] மேல்.
முறை — அந்தெ (அப்படி)

தெலுங்கிலும் இத்தகைய வினையடை காணப்படுகிறது.

6. பெயரெச்சம்

பெயரைக்கொண்டு முடியும் எச்சம் பெயரெச்சமாகும்.

பெயரெச்சம் வினையடிச்சொல், காலம் காட்டும் இடைநிலை கொண்டு பெயரெச்சவிகுதி பெற்று அமையும்.

தமிழ்: — இறந்தகால வினைவடிவத்தோடு அகரம் இணைய இறந்தகாலப் பெயரெச்சம் அமையும்.

நிகழ்காலத்திற்கெனத் தனிப் பெயரெச்சம் சங்ககாலத்திற் குப் பின்னரே அமைந்தது. 'செய்யும்' என்பது நிகழ், எதிர் காலப் பெயரெச்சமாக வழங்கியது. செய்யும் என்னும் வினை முற்றும் எழுவாயும் மாறி இருந்தபோது [வரும் குதிரை] பெயரெச்சமும் பெயருமாகப் பிறழ உணரப்பட்டுப் பின்னர்ப் பெயரெச்சமாகவும் கருதப்பட்டதென்பார் தெ. பொ. மீ.

'செய்கின்ற' எனும் வடிவம் பிற்காலத்தில் தோன்றி வளர்ந்தது.

மலையாளம்: —

இறந்த காலம் — வினையோடு அகரம் சேரும்
நிகழ்காலம் — வினையோடு 'ஆ' சேரும்
எதிர்காலம் — உகரம் சேரும்.

குடகு: — முக்காலம் — எ
துளு: — முக்காலம் — இ

Koviloor Digital Library

கன்னடம்: — இறப்பு } அ
இறப்பில்காலம் } ஆ

தெலுங்கு:— இறப்பு — இன
இறப்பில்காலம் — எது, எதி.

இறந்தகாலப் பெயரெச்சம் பிராகூய் தவிரப் பிற திராவிட மொழிகளில் உளது. பிராகூயில் இருந்து பின்னர் மறைந்திருக்க வேண்டும்.

அ, இ என்பன மூல திராவிட விகுதியாகக் கொள்ளலாம்.

தெலுங்கில் 'இன' என்றிருந்தாலும் அதனை இன்+அ எனப் பிரிக்கலாம்.

தமிழ் மலையாளத்தில் உள்ள 'இய' என்பதில் யகரம் உடம்படுமெய்யாகும்.

இறப்பில் காலப் பெயரெச்ச விகுதியாகத் தமிழ் மலையாளத்தில் 'உம்' உளது.

'உம்' — மூலதிராவிட விகுதியாகக் கருதப்படும்.

தமிழ் மலையாளத்தில் நிகழ் காலப் பெயரெச்சம் பின்னர் உருவாகியது.

குடகு, கன்னடம், துளு மொழிகளில் இறப்பில்காலப்பெயரெச்சம் வினையடி + ப், வ் + எ, அ, இ என்று அமையும். செய்பவன் என்னும் வினையாலணையும் பெயரை நோக்கித் தமிழில் 'செய்ப' எனும் பெயரெச்ச வடிவம் இருந்திருக்க வேண்டுமென்பர்.

கொண்டா, பெங்கோ, கூய், குவி மொழிகள் வினையடி +ந்+இ என்று பெயரெச்ச வடிவத்தைக் கொண்டுள. இம் மொழிகளில் ஏற்பட்ட புது அமைப்பு இதுவாகும்,

கொலாமி, நாய்கி மொழியில் உள்ள 'எக' என்பதில் 'எக்' —இறப்பில் கால இடைநிலையாகவும் அகரம் பெயரெச்ச விகுதியாகவும் கொள்ளப்படும்.

பார்ஜி, கதபா மொழிகளில் 'அன்' பெயரெச்ச விகுதியாக உளது. னகரத்தின் தோற்றம் விளங்கவில்லை.

பிராகூயில் உள்ள ஒக் என்பது பலுச்சி மொழியிலிருந்து வந்ததென்பர்.

Koviloor Digital Library

செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று முக்காலப் பொருளையும் (Habitual) குறிக்க வழங்கும். அது போலவே இறப்பில் காலப் பெயரெச்சத்தில் முக்காலப் பொருளைச் சில திராவிட மொழிகள் உணர்த்தும்.

7. பெயரடை

பெயருக்கு அடையாகப் பெயரெச்சம், சுட்டு, எண், பெயரடிச் சொல், வினையடிச்சொல் முதலியவை வருமென்பார் மு. வ

கொன்ற யானை — பெயரெச்சம்
நல்ல வீடு — குறிப்புப் பெயரெச்சம்
அந்த வீடு — சுட்டு
நான்கு விடு — எண்
மண் வீடு — பெயர்
கொல் யானை — வினையடிச் சொல்

எண்ணுப்பெயர் அப்படியே அடையாக வருவதும் உண்டு; ஒரு, இரு, மூ எனமாறி வருவதும் உண்டு.

உம்மைத் தொகை தவிர ஏனைய வேற்றுமை, வினை, பண்பு, உவமைத் தொகைகள் பெயரடைகளே என்பார் தெ. பொ. மீ. மலையாளத்தில் பெயரடைகள் அமையும் முறையினைத் திரு சேகர் கீழ் வருமாறு விளக்குவார்.

1) பண்படிச்சொல் அடையாக மாறி நிற்றல். சிறு கொட்டார், செம்பொன்.

2) பெயர்ச்சொல் அடையாகவரல். மற்று, முன்னம், கீழ், இதர, மேல்.

3) சுட்டுப் பெயரடைவரல். அவிடெ, அவ்வாண்டு.

4) தொகைச் சொல் அடையாதல். இத்தனை, பல.

5) அளவுப்பெயர் அடையாகவரல். கலம் நெல்.

6) எண்ணுப் பெயர் அடையாகவரல். ஒரு.

7) பெயரெச்சம் பெயரடையாதல். செய்வித்த, கொடுத்த.

8) சதுரசிகாமணி ஆயின கிழாயடிகள். பெயரோடு ஆன, ஆயின வரல்.

இல், அத்து — பெயரோடுவரல்

(எ-டு) கோடிக்குளத்தில் இரவிகுமாரன்.

பெயரே அடையாகவரல்.

(எ-டு) ஆவணி யோணம்.

Koviloor Digital Library

கன்னடத்திலும் பெயரெச்சம், எண்ணுப்பெயர், மூவிடப் பெயர், சுட்டுப் பெயர் ஆகியவை அடையாக வருகின்றன.

தந்த, மாடித — பெயரெச்சம்
ஒந்து பணமம், மூறுதிங்களு — எண்
ஆதேவர — சுட்டு.

தெலுங்கில் பெயரெச்சம், மூவிடப் பெயர், எண், பண்புப் பெயர்கள், பெயர், சுட்டு ஆகியவை பெயரடையாகவரும்.

சதுவின புஸ்தகம் —(பெயரெச்சம்)
ஆயன புஸ்தகம் —(அவர் புத்தகம்) மூவிடப் பெயர்
ரெண்டு புஸ்தகம் — எண்
கொத்த புஸ்தகம் — (புதுப்புத்தகம்) பண்பு
எத்து பண்டி — (எருது வண்டி) பெயர்
சொக்கா ஜேபு — (சட்டைப்பை) பெயர்
வெண்டி செம்பு — (வெள்ளிச்செம்பு) பெயர்
ஆ புஸ்தகம் — (அந்தப்புத்தகம்)

இரண்டு வேறு பெயரடைகள் ஒரு பெயருக்கு முன் வரலாம்.

ஆ நா புஸ்தகம் — 'அந்த என் புத்தகம்'

பெயருக்கும் பெயரடைக்கும் பால் இயைபு காட்டப்படுவதில்லை. பெயருக்கு முன்னரே பெயரடை வரும்.

8. ஏவல்

ஏவல் முன்னிலையில் வழங்கும். ஏவலில் ஒருமை பன்மை என்ற பாகுபாடு காணப்படுகிறது.

தமிழ் — விகுதிகளின்றி வெறும் அடிச்சொல்லே ஏவலாக வழங்குகிறது.

ஆய், இ, ஈ, ஐ என்னும் முன்னிலை ஒருமை விகுதிகள் இணைந்த வடிவங்கள் ஏவலாக வரும். [எ-டு] அறிதி
அறியாய்
சென்றீ
வருதி

பன்மை ஏவலாக செய்யீர், செய்மின், செய்யும், செய்யுங்கள் என்பன வரும்.

'இது செயல் வேண்டும்' என்பது தொல்காப்பியர் காலத்திலேயே ஏவலாக வழங்கி வந்துள்ளது.

Koviloor Digital Library

மதி, மோ, மே, ம் என்பனவும் ஏவலில் வரும்.

மலையாளம் — பழைய மலையாளத்தில் வினையடிச் சொல்லே ஏவலாக இருக்கும். உகரம் ஒலித்துணையாக இணைவதும் உண்டு. 'க்க்' ஏவல் ஒருமையில் வரும்.

'நிவெதிக்க'. 'வைக்க'.

இன்று மலையாளத்தில் 'இரிக்கு' நடக்கு' என்பன ஏவலாக வரும். வியங்கோள் விகுதியாகிய ககரம் ஏவலில் வந்ததென்பார் இராமசாமி ஐயர்.

பழைய மலையாளத்தில் ஆய், இர் என்பன தமிழின் செல்வாக்கால் வழங்கின.

பன்மை ஏவலில் வின், ப்பின், மின் என்பன காணப்படுகின்றன.

இன்று உ, எ என்பன ஒருமை, பன்மைக்குப் பொதுவாக வழங்குகின்றன.

பழைய மலையாளத்தில் அது, இது, உது என்பன எதிர்கால வினையெச்சத்தோடிணைந்து ஏவலை உணர்த்தும். [எ-டு கொடுப்பூது, செல்விது]

கோடா	— முன்னிலை ஒருமை—	விகுதியின்றி—	பன்மை — ம்
தோடா	— ,,	,,	,, S
குடகு	— ,,	,,	,, இரி
கன்னடம்	— ,,	,,	இம், இ, இரி
துளு	— ,,	ல	இ, லெ
தெலுங்கு	— ,,	மு	உண்டு
			அன்டி, ஊடு

பிற மொழிகளில் ஆ, ம், அ, து, மு, உர் என்பன ஏவல் விகுதிகளாக உள.

எல்லாத் திராவிட மொழிகளிலும் விகுதியற்ற வினையடிச் சொல்லே ஏவல் ஒருமையில் வழங்கக் காணலாம். கொலாமியில் மட்டும் உயிர் நீண்டொலிக்கும் என்பர்.

கோண்டி, கொண்டா, பெங்கோ, குவி மொழிகளில் அகர விகுதி காணப்படுகிறது. குருக், மால்டோ, பிராகூய் முதலிய வட திராவிட மொழிகளிலும் அகரம் உளது; இம் மூன்று

Koviloor Digital Library

மொழிகளிலும் வியங்கோள் விகுதி ''க்க' — மரியாதை ஏவலில் வழங்கும்.

பார்ஜி, கத்பா மொழிகளில் ப்/த் எனும் விகுதி இறப்பில் கால வினையடிச்சொல்லில் சேரும் உறுப்பாக இருந்து ஏவலுக்கு வரத் தொடங்கின.

'செய்யாய்' எனும் வடிவம் எதிர்மறையிலும் ஏவலிலும் தமிழில் வழங்கக் காணலாம். எதிர்மறை ஏவலுக்கு வரும் நிலை பழந்தெலுங்கிலும் காணப்படுகிறது.

பழந்தெலுங்கு, கோண்டி, கூய், குவி மொழிகளில் மகரம் ஒருமை ஏவல் விகுதியாக வழங்குகிறது. பன்மைக்கு வேறு விகுதிகள் வரத் தொடங்கியதால் ஒருமைக்குப் பன்மை விகுதியாகிய மகரம் வந்து வழங்கலாயிற்று என்பர். தமிழிலும் மே, மோ என்பன ஒருமையில் வருவது குறிக்கத்தக்கது. பன்மையை மரியாதை குறித்து ஒருமையில் வழங்கும் நிலையே இதற்குக் காரணம் எனலாம்.

ஏவல் பன்மையில் மகரம் மூலவடிவமாகக் கருதப்படும். தமிழில் 'உம்', மின் என்பன உள. கன்னடத்தில் 'இம்' இருந்து மகரம் மறைய இகர மட்டுமே உளது. தெலுங்கில் 'உண்டு, விகுதியாக உளது. அது உம்+ட் என்பதன் சேர்க்கையே. கோண்டி, கோயாவில் சில வினைகள் மகரத்தைக் கொண்டுள. பிராகூயில் உள்ள 'bo' மகரத்தின் திரிபே என்பர் எனவேமூலவடிவமாகஇ/உம் ம் கொள்ளப்படும்.முன்னிலைப் பெயராக 'நீம்' என்பதிலிருந்து அது வந்திருக்கும்.

நீர் என்னும் முன்னிலைப்பன்மையிலிருந்து வந்தரகரவிகுதி தமிழ், குடகு, கன்னடம், கொலாமி, பார்ஜி மொழிகளில் காணப்படுவதால் அதுவும் மூலவடிவமாகக் கொள்ளப்படும்.

துளுவில் ல, லெ என்பன விகுதியாக உள. தொழிற் பெயர் விகுதி அல் + ஆம் என்னும் அமைப்பே [வரலாம்] இதற்கு அடிப்படை என்பர்,

பழந்தெலுங்கு, கோண்டி, கோயா, கொண்டா, பெங்கோ கூய், குவி, மொழி ஏவல் பன்மை விகுதியில் ட்/த் காணப்படுகிறது. தெலுங்கில் உள்ள 'உண்டு' என்பது 'உம் + ட்' என்பதன் சேர்க்கை என முன்னர்க் கண்டோம். மகரத்தோடு த்

அல்லது ட் சேர்ந்த வடிவம் பன்மையாகவும் மகரம் மட்டும் ஒருமையாகவும் இம்மொழிகளில் கருதப்படுகிறது.

குருக், மால்டோ மொழிகளில் ஏவலில் ஒருமை பன்மை வேறுபாடில்லை. இவ்விரு மொழிகளும் பிராகூயும் ஏவல் விகுதியில் ககரத்தைக் கொண்டுள்ளன. அது வியங்கோளிலிருந்து வந்திருக்கலாம்.

எதிர்கால வினையை ஏவலில் உணர்த்தும் நிலை சில திராவிட மொழிகளில் காணப்படுகிறது. பழந்தமிழில் முன்னிலை ஒருமை எதிர்கால வினைமுற்று விகுதியாகிய த், த்த் ஏவலில் வரும். பழைய மலையாளத்தில் ஏவல் பொருள் தரும் வின், பின்' என்பன எதிர்கால விகுதியேயாகும்.

பழைய மலையாளம், கன்னடம், தெலுங்கு மொழிகளில் ஒன்றன் பால் வினையாலணையும் பெயர் ஏவலாக வருகிறது.

தெலுங்கிலும் எதிர்காலம் ஏவலில் வரும் நிலை காணப்படுகிறது. கூய், குவி, கொலாமி, பெங்கோ, கோயா, குருக் முதலிய பிற திராவிட மொழிகளிலும் எதிர்காலம் ஏவலுக்குப் பயன்படுகிறது.

9. வியங்கோள்

ஏவலில் கட்டளைப் பொருள் உணர்த்தப்படும். வியங்கோளில் வேண்டிக் கொள்ளும் பொருள் உணர்த்தப்படும்.

தமிழில் க, இய இயர் என்பன விகுதிகள். 'ஆக 'ஆகுக' என்னும் துணைவினை வியங்கோள் பொருள் தருவதுண்டு.

தொழிற்பெயர் விகுதியாகிய 'அல்' வியங்கோளில் வரும். ''மக்கட்பதடி எனல்''. அல் என்பது எதிர்மறை வியங்கோள் வினைமுற்று விகுதியாகவும் வரும். ஆல், இல் என்பன எதிர் மறைப் பொருள் தர இணையும்,

தொழிற் பெயரோடு 'வேண்டும்' எனும் வினை சேர்த்து வியங்கோள் பொருள் உணர்த்தப்படும்.

தொல்காப்பியர் தன்மை, முன்னிலைக்கு வியங்கோள் வராதெனக் கூறிய போதிலும் பிற்காலத்தில் மூவிடத்திலும் வழங்கத் தொடங்கியது.

Koviloor Digital Library

மலையாளம் — மரியாதை ஏவல் தர க்க, க்குக என்னும் விகுதிகள் இணையும்.

தோடா — மொ,

கன்னடம் — கெ (ge, ke), அலி, [காண்கெ — காண்க
காணலி ,,

துளு — அதி.

தெலுங்கு — எடும், தன் விகுதிகள் சேரும்.

இறவாக் காலப் பெயரெச்சத்தோடு அதி சேர்ந்து வியங்கோள் பொருள் தரும்.

(எ-டு) ''வச்சனதி'' (வர வேண்டும்)

எதிர்கால வினையோடு காக (gaka) இணைந்து வியங்கோளாகும். இக்காலத் தெலுங்கில் 'அலிதி' விகுதி இணைந்து வியங்கோளாகும்.

பழந்தமிழ் மலையாளம், பழங்கன்னடம், துளு மொழிகளில் க, க்க என்பன வியங்கோள் விகுதியாக வருகின்றன. செயவென் எச்சமே பல மொழிகளில் வியங்கோளாக வருகிறது. எனவே செயவென் எச்சமே முதலில் வியங்கோளாக வழங்கியது என்றும் பின்னர்க் ''க'' கர விகுதி தனியே வளர்ந்தது என்றும் கொள்ளலாம்.

பழந்தமிழில் இய, இயர் வடிவங்கள் செயவென் எச்சத்திலும் வியங்கோள் வினையிலும் வருவது குறிக்கத்தக்கது. இவை பின்னர் சிறப்பாக நோக்கப் பொருள் தர வழங்கப்பட்டது என்பார் தெ. பொ. மீ.

செயவென் எச்சத்தோடு வேண்டும் எனும் துணைவினை சேர்ந்து வியங்கோள் பொருள் உணர்த்தும் நிலை தமிழ், மலையாளம், குடகு, கன்னடம், துளு முதலிய தென் திராவிட மொழிகளில் காணப்படுகிறது.

10. எதிர்மறை

திராவிட மொழிகளில் எதிர்மறைப் பொருள் சொல்லமைப்பிலேயே உணர்த்தப்படுவது குறிக்கத்தக்கதாகும். வினைமுற்று, வினைஎச்சம், பெயரெச்சம், தொழிற்பெயர், ஏவல் ஆகிய அனைத்திலும் எதிர்மறை அமைப்பு காணப்படுகிறது.

Koviloor Digital Library

தமிழ்:—

வினைமுற்றில் 'ஆ' இடைநிலையாக வரும். ஒன்றன்பால் தவிர ஏனைய மூவிட வினைகளில் உருவிலி உருபாக இருந்து பொருள் தரும்.

(எ-டு) சொல்+ஏன்=சொல்லேன்
பார்+ஆன்=பாரான்

எதிர்மறை மூவிட வினைகளில் விகுதியில் ஏன், ஆன், ஆள், ஆர் முதலிய நெடில் வடிவமே இருக்கக் காணலாம்.

சொல்+அ+என்=சொல்லேன்
பார்+அ+அன்=பாரான்

என்று எதிர்மறை இடைநிலை அகரமும் விகுதியில் உள்ள குறிலும் சேர்ந்துநெடில்வடிவம் அடைந்தன என்பார் கால்டுவெல். தெ. பொ. மீ.யும் இக்கருத்தை வலியுறுத்துகிறார்.

இக்காலத் தமிழில் மாட்டு எனும் துணைவினையோடு மட்டுமே இவ்விடைநிலை காணப்படுகிறது.

(எ-டு) 'சொல்ல மாட்டேன்'

சங்கத்தமிழில் அல், இல் என்பன காலஇடைநிலை, பாலிறுகளுக்கிடையே இணையும். இறந்த காலத்திற்கு 'இல்'லும் இறவாக் காலத்திற்கு 'அல்'லும் சேரக் காணலாம்.

(எ-டு) சொல்+அல்+அம்
வந்+த்+இல்+அம்

உடன்பாட்டு வினையோடு அல் எனும் துணைவினை சேர்ந்து எதிர்மறை உணர்த்தலும் உண்டு.

(எ-டு) கண்டேனல்லேன்

தொழிற்பெயரோடு 'இல்'வினை சேர்ந்து எதிர்மறை உணர்த்தலும் உண்டு.

(எ-டு) யாம் கண்டதில்

இதனுடைய வளர்ச்சியாக இக்காலத் தமிழில் வினையெச்சத்தோடும் தொழிற்பெயரோடும் 'இல்லை' எனும்வினை சேர்ந்து எதிர்மறைப் பொருள் தருகிறது.

(எ-டு) வரவில்லை, வருவதில்லை

வினையெச்சத்தில் ஆ, ஆது, ஆமல் என்பன எதிர்மறை உணர்த்தும் (எ-டு) எஞ்சா, எஞ்சாது, எஞ்சாமல் பெயரெச்

Koviloor Digital Library

சத்தில் ஆ. ஆத் என்பன சேரும்.

(எ-டு) கேளா. கேளாத.

தொழிற்பெயரிலும் 'ஆ' சேரும்

(எ-டு) கேளாமை.

மலையாளம்

இருவகையாக எதிர்மறை உணர்த்தப்படுகிறது. 1)அல்ல, இல்ல என்பன இணைந்து (2) 'ஆ' சேர்ந்து.

நெடில் வடிவப் பாலிறுகளைச் சேர்த்து எதிர்மறை உணர்த்தும் தமிழின் நிலை பழைய மலையாளத்திலும் காணப்படுகிறது.

[எ-டு] அறியோம்

பாலிறின்றி முடியா, செய்யா, அறியா போன்ற எதிர்மறை வினை எல்லாப்பாலிடங்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

எதிர்மறை இடைநிலை ஆகாரம் இணைந்தபின் கால இடைநிலை சேரும் புதியநிலை மலையாளத்தில் காணப்படுகிறது.

நிகழ்காலம் — அறியாயின்றிது — அறியாது — காணுயின்று — காணவில்லை.

இறந்தகாலம் — வாராஞ்ஞு — வரவில்லை — கொடாஞ்ஞான் — கொடான்.

எதிர்காலம் — வாராயும் — வராது.

முக்கால வினையெச்சத்தோடு 'இல்ல' என்பதிணைந்து எதிர்மறை உணர்த்தும்.

வினையெச்சத்தில் ஆது, ஆதெ என்பனவும் தொழிற்பெய பெயரில் 'ஆய்' என்பதும் இணையும்.

குடகு — வினைமுற்றில் அகரம் சேர எதிர்மறை ஆகும், 'இலெ' என்பது இணைந்து தொடர்முறையில் எதிர்மறை உணர்த்தலும் உண்டு.

வினையெச்சத்தில் 'அதெ' பெயரெச்சத்தில் 'அத்' இணையும்.

கன்னடம் — அஃறிணைவினைமுற்றுக்களில் உருவிலிஉருபும் ஏனைய தன்மை, முன்னிலை, படர்க்கை வினைமுற்றுக்களில் அகரமும் இணைந்து எதிர்மறைப் பொருள் தரும்:

Koviloor Digital Library

'இல்ல' என்பதிணைந்து தொடரமைப்பில் எதிர்மறை உணர்த்தும் நிலையும் காணப்படுகிறது.

வினையெச்சத்தில் 'அதெ'யும் பெயரெச்சத்தில் 'அத்'தும் எதிர்மறைக்கு வருகின்றன.

துளு — வினைமுற்றில் அ. ஜி/ரி, என்பன எதிர்மறைக்கு வரும் வினையெச்சத்தில் 'அந்தெ', பெயரெச்சத்தில் 'அந்த்' என்பன சேரும்.

தெலுங்கு — வினைமுற்றில் உருபிலி உருபும் அகரமும் சேரும். 'லேது' எனும் வினை இணைந்து தொடரமைப்பில் எதிர்மறை உணர்த்தலும் உண்டு.

முடியாது எனும் பொருளில் செயலெஞ்சுவினையோடு 'லே' வரும்.

வினையெச்சத்தில் அக, அகுண்டா என்பனவும் பெயரெச் சத்தில் 'அனி'யும் தொழிற்பெயரில் 'அமி',மி என்பனவும் எதிர்மறைப் பொருள்தர இணையும்.

பிற திராவிட மொழிகளில் உருவிலி உருபு, ஆய், ஓ, வ், வோ, இல்ல், உ, வ, எ, அ என்பன எதிர்மறை இடைநிலை களாக வருகின்றன.

குருக், மால்டோ தவிர எனைய திராவிட மொழிகளில் வினையடி + எதிர்மறை இணைப்பு, + பாலிட ஈறு எனும் அமைப்பு காணப்படுவதால் அது மூலதிராவிடமுறை எனலாம். வடமொழிச் செல்வாக்கில் குருக் மால்டோ மொழிகள், அம் முறையை இழந்திருக்கலாம்.

எதிர்மறை காலம் உணர்த்நாமல் இருந்தது. பின்னர் அச்சொற்கள் இறவாக் காலத்தில் வழங்க இறந்த காலத் திற்குப் புதிய சொல்லமைப்புக்களும் தோன்றின.

தென் திராவிட [துளு தவிர] மொழிகளுக்கும் நடு திராவிட மொழிகளுக்கும் ஒரு வேறுபாடு காணப்படுகிறது. வினைமுற்றில் பழந்தமிழ், பழங்கன்னடம், கோடா, தோடா மொழிகளில் படர்க்கை அஃறிணை தவிர ஏனையஇடங்களில் உரு விலி உருபு காணப்படுகிறது.

நடு திராவிட மொழிகளிலும் துளுவிலும் பிராகூயிலும் எல்லா இட வினைகளிலும் 'ஆ' வே எதிர்மறை உணர்த்தும்.

Koviloor Digital Library

இவ்விரு முறைகளில் ஒன்று மூல திராவிட முறையாகவும் மற்றொன்று அதன் மாற்றமாகவும் கருதப்படும். இவற்றுள் இரண்டாவது முறையே மூன்று குழு மொழிகளிலும் காணப் படுவதால் அதுவே மூல திராவிட முறை என்றும் தமிழ், கன்னட மொழிகளில் சில இடங்களில் மட்டும் 'ஆ' காரத்தை இழந்தன என்றும் கொள்ளலாம்.

ஆ — மூல திராவிட இடைநிலையாக 'ஆ' கொள்ளப் படும். தமிழ், கன்னடம், மலையாளம், கோதம், தோட மொழிகளில் நெடிலும் பிற மொழிகளில் குறிலும் காணப்படுகின்றன.

கொலாமி, நாய்கி மொழிகளில் உள்ள எகரம் 'ஆ'வின் திரிபேயாகும்.

வினை விகுதியாகிய 'ஆ'விலிருந்து இவ்விடைநிலை வந்த தென்பர் கால்டுவெல், ஆல்பிரட் மாஸ்டர் போன்றோர். செய லெஞ்சு வினை விகுதியாகிய அகரத்திலிருந்து வந்ததென்பார் கிட்டல். ஆயின் இக்காரணங்கள் பொருத்தமற்றவை; 'ஆ' விற்கு எதிர்மறைப் பொருள் தொடக்கத்திலேயே உண்டு என் பார் சுப்பிரமணியம்.

உருவ்லி உருபன் :—

தமிழ் — கன்னட மொழிக் குழுவில் மட்டும் படர்க்கை அஃறிணையில் உருவிலி உருபன் வரும். முதலில் 'ஆ' இடைநிலை இருந்து உயிர் எழுத்தையடுத்து அஃது மறைந் ததால் இந்நிலை ஏற்பட்டிருக்கலாம்.

இடைநிலையின்றி ஒலி அழுத்த வேறுபாட்டால் எதிர் மறைப் பொருள் உணர்த்தப்பட்டது என்பர் கால்டுவெல்லும் ஆல்பிரட்மாஸ்டரும். ஆயின் அதை மறுப்பார் திரு சுப்பிரமணி யம்.

அகரமே எதிர்மறை இடைநிலை. அது அன், அள் முத லிய விகுதிகளோடு சேர்ந்து ஆன், ஆள் என்று மாறியது என் பார் தெ. பொ. மீ. ஆயின் உடன்பாட்டிலும் ஆகார விகுதி [வந்தான், வருவான், வருகிறான்] இருக்கக் காண்கிறோம். கால இடைநிலை இன்மையே உடன்பாட்டின்மையைக் குறிக் கும்; எனவே வினையடிச்சொல் + விகுதி எனும் அமைப்பு

Koviloor Digital Library

எதிர்மறை உணர்த்தும் என்னும் கால்டுவெல் கருத்தை ஏற்பார் திரு சுப்ரமணியம்.

கோண்டி, கொண்டா, பெங்கோ, கூய், குவி ஆகிய மொழிகளில் புதிய இடைநிலை காணப்படுகிறது. இம்மொழிகளில் வழங்கும் எதிர்மறை இடைநிலைகளை ஒப்பு நோக்கும் போது 'வா' என்பது மூலவடிவாகக் கொள்ளப்படும். இதில் 'ஆ' எதிர்மறை இடைநிலை என்றும் வகரம் இறவாக்கால இடைநிலை என்றும் கொள்ளப்படும். இங்ஙனம் இறவாக்கால இடைநிலையை அடுத்து எதிர்மறை இம் மொழிகளில் காணப்படும் புதுமுறையாகும்.

இறந்தகால எதிர்மறை :—

பழந்தமிழில் இறந்தகால வினையெச்சத்தோடு 'இல்' எனும் வினை சேர்ந்து எதிர்மறை உணர்த்தும்.

[எ-டு. கண்டிலன்] கோண்டி, பிராகூய் மொழிகளிலும் இந்நிலை காணப்படுகிறது. எனவே இது மூல திராவிட முறையாகக் கொள்ளப்படும்.

நடு திராவிட மொழிகளான கொண்டோ, பெங்கோ, கூய், குவி, கொலாமி, நாய்கி மொழிகளில், வினையடி + எதிர்மறை + இறந்தகால இடைநிலை + பாலிட விகுதி எனும் வினையமைப்பு காணப்படுகிறது. இவ்வினைகளில் எதிர்மறை இடைநிலையாக 'ஆ' இறந்தகால இடைநிலையாக 'த்த்' என்பன வரும். இது நடு திராவிட மூல இயல்பாகக் கொள்ளப்படும். ஆ'வின் மூல திராவிட இயல்பாகக் கொள்ளப்படாது.

வினையெச்சத்தில் எதிர்மறை

பழந்தமிழில் வினையெச்சத்தில் 'ஆ' எதிர்மறைப் பொருள் தர இணைக்கப்படும்.

தென் திராவிட மொழிகளில் அதனையடுத்து 'ந்த்', சேர்ந்துளது. அஃது இறந்தகால இடைநிலையேயாகும். அவ்வாறே நடு திராவிட மொழிகளில் இறந்த கால இடைநிலையாகிய ககரம் 'ஆ' விற்கு அடுத்து வரும்.

ஆகாரம் சேர்த்து எதிர்மறை வினையெச்சம் அமைவதே மூல திராவிட முறை எனலாம்.

 Koviloor Digital Library

வராமல், போகாமல் போன்று தமிழில் 'ஆமல்' என்னும் இணைப்பு எதிர்மறை உணர்த்தும். 'ஆ' எதிர்மறையாகவும் 'மல்' என்பது 'அல்' எனும் எதிர்மறை வினையிலிருந்து வந்ததாகவும் கொள்ளலாம்.

கொலாமியில் 'செல்' என்பது எதிர்மறை வினையெச்சத்தில் வருகிறது. அது 'இல்' எனும் எதிர்மறை வினையோடு தொடர்புடையதெனலாம்.

தெலுங்கில் 'அகுண்டா' என்பது எதிர்மறை வினையெச்ச இணைப்பாக உளது. அக + உண்ட (உண்டு) என்பதே அவ்வாறமைந்ததென்பர். கோயா, கொண்டா தெலுங்கிலிருந்து இவ்விணைப்பினை மேற்கொண்டுள்ளன.

பெயரெச்சத்தில் எதிர்மறை

பழந்தமிழ், பழைய மலையாளம், கோதா முதலிய தென் திராவிட மொழிகளிலும் கோண்டி, குவி, கொலாமி, பார்ஜி நாய்கி, கதபா முதலிய நடுதிராவிட மொழிகளிலும் 'ஆ'காரமே எதிர் மறைப் பெயரெச்சத்தில் வருகிறது. எனவே அது மூல திராவிட இணைப்பாகக் கொள்ளப்படும்.

தென் திராவிட மொழிகளில் த், ந்த், த்த் என்பன 'ஆ' விற்கு அடுத்து வருகின்றன. உடன்பாட்டு வினையைப் பார்த்து இத் 'த' கரம் சேர்ந்திருக்கலாம். (எ-டு. பார்த்த — பாராத) தெலுங்கில் வரும் அனி. அ (எதிர் மறை) + ன் (இறந்தகாலம்) + இ (பெயரெச்ச விகுதி) என்பதின் சேர்க்கை என்பர்.

மலையாளத்தில் உள்ள ஆஞ்ஞு > ஆய்ந்த என்னும் எதிர் மறைப் பெயரெச்ச விகுதி புதுமையாக உளது. கோடாவிலும் 'ஆய்' எதிர்மறையில் வரும். யகரம் உடம்படுமெய் எனலாம்.

பெங்கோ, கூய், குவி மொழிகள் எதிர்மறை பெயரெச்சத்தோடு இறந்த கால எதிர்மறைப் பெயரெச்சம் எனும் புதிய அமைப்பைக் கொண்டுள.

எதிர்மறைத் தொழிற் பெயர்

பழந்தெலுங்கிலும் பழந்தமிழிலும் முறையே அமி, ஆமை என்பன வினையடியோடு சேர்ந்து எதிர்மறைத் தொழிற் பெய

Koviloor Digital Library

ரமையும். 'மை' உடன்பாட்டிலும் தமிழில் வரும். ஆயின் 'மி' தெலுங்கில் எதிர்மறையில் மட்டுமே வரும். குவியில் 'அதயி' எதிர்மறைத் தொழிற் பெயரில் வரக் காணலாம்.

எதிர்மறை வினையடிகள்

'அல்' 'இல்' என்பன பலதிராவிடமொழிகளில் எதிர்மறை வினையடியாக வரக் காணலாம்.

குருக், மால்டோ மொழிகளில் உள்ள 'மல்' தமிழில் உள்ள 'ஆமல்' என்பதோடு தொடர்புடையது. தெலுங்கில் 'காது' என்பது எதிர்மறையில் வருகிறது. 'ஆகாது' எனும் தமிழோடு இது தொடர்புடையது.

கோண்டியில் ஆ'ீயா, பெங்கோவில் அகய், கா கொண்டா வில் அட், கொலாமி நாயகியில் தோத் என்பன எதிர்மறை வினையடிகளாக வரும்.

11. செயப்பாட்டுவினை

திராவிட மொழிகளில் செயப்பாட்டுவினை ஐரோப்பிய மொழிகளில சிறப்பிடம் பெற்றிருப்பது போல் இல்லை.

'செயப்பாட்டுவினை என உண்மையாக அழைக்கத்தக்க வினையுருவைத் திராவிட மொழிகள் அறவே இழந்துள்ளன. அவை, அதைப் பண்டு ஒரு காலத்தில் பெற்றிருந்தன என்பதற் கான அடிச்சுவட்டையும் காண்பதற்கில்லை. திராவிட மொழி களில் எந்த ஒரு மொழியும் செயப்பாட்டு வினைச்சொல்லுரு பென்ற எதையும் பெற்றிருக்கவில்லை. என்றாலும் செயப் பாட்டுவினைப் பொருள் மட்டும், பல்வேறு வழிதுறைகளால் விளங்க உணர்த்தப்பெறுகிறது' எனக் கூறும் காலடுவெல் செயப்பாட்டுவினை உணர்த்தும் முறையாக,

1 செய்வினையே செயப்பாட்டுவினைப் பொருளைத்தரல்.

2 செய்வினையின் இறந்த கால எச்சத்தோடு ஆயிற்று, போயிற்று, முடிந்தது போன்ற வினைசேரல் (உடைந்து போயிற்று).

3 'உண்' எனும் துணைவினை சேர்க்கப்படல் (கொலை யுண்டான், மொத்துண்டான்)

Koviloor Digital Library

4 'படு' என்னும் துணைவினை சேர்க்கப்படல் [கொல்லப் பட்டான்].

எனும் நான்கு முறைகளை விளக்குகிறார்.

தொல்காப்பியர் செயப்பாட்டுவினை பற்றி எதும் குறிக்க வில்லை எனினும் மூன்றும் வேற்றுமையில் கருத்தாப் பொருளைக் கூறுவதிலிருந்து அவர்காலத்தில் செயப்பாட்டுவினை வழக்கிலி ருந்தது என்றறியலாம் என்பார் திரு P.S. சுப்ரமணியசாஸ்திரி 'எழுத்தெனப்படுப' என்று தொல்காப்பியம் கூறுவதும் குறிக் கத்தக்கது 'கைப் படுக்கப்பட்டாய்' (கலித். 65-15) என்று சங்ககாலத்திலும் செயப்பாட்டுவினை கையாளப்படக் காண் கிறோம்.

சமசுக்கிருத, பிராகிருதச் செல்வாக்கால் செயப்பாட்டு வினை தமிழில் வளரத் தொடங்கியதென்பார் தெ. பொ. மீ. 'படு' என்பது போலப் 'பெறு' என்னும் துணைவினையும் தமிழில் செயப்பாட்டு வினைக்குச் சேர்க்கப்படும்.

மலையாளத்தில் செயப்பாட்டுவினை அருகி வழங்கும் என் பார் திரு. சேகர் *

பெயரெச்சத்திலும் வினையாலணையும் பெயரிலும் செய் வினையே, செயப்பாட்டு வினையாக வரும்நிலை தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம்,துளு மொழிகளில் உளது.

எழுதிய நூல்
இந்நூல் நான் எழுதியது

செய்வினையே செயப்பாட்டுவினையாக வரும் என்னும் கருத்தை மறுக்கிறார் டாக்டர் அகத்தியலிங்கம்.

அவன் கதவை அடைத்தான்
அவன் கதவைத் திறந்தான்

என்றும்,

கதவு அடைத்தது
கதவு திறந்தது

என்றும் இருவிதச் சொல்லமைப்புக்கள் காணப்படுகின்றன. இரண்டாவது வகைத் தொடர்கள் 'என்றால்' என்னும் கர்த்

---

* Evolution of Malayalam — P. 158

Koviloor Digital Library

தாப் பொருளை ஏலா. எனவே அவை செயப்பாட்டு வினைகள் ஆகா என்று அவர் விளக்குவார்.

> ''செயப்படுபொருளைச் செய்தது போலத்
> தொழிற்படக் கிளத்தலும் வழக்கியல் மரபே''

என்னும் தொல்காப்பிய நூற்பாவிற்குச் செயப்பாட்டுவினையைச் செய்வினையாகவே கூறலாம் என்பதே பொருள் என்பர். பலரும் அக் கருத்தை ஏற்காமல் 'செயப்படு பொருளாக வரும் சொல் எழுவாயாக வருவதும் உண்டு' என்பதே அதன் கருத்து என விளக்குவார் டாக்டர் அகத்தியலிங்கம். *

கதவை அடைத்தான் — செயப்படுபொருள்
கதவு அடைத்தது — எழுவாய் (செய்தது)

செய்வினைப் பெயரெச்சத்தோடு 'நான் இருக்கிறேன்' என்னும் பொருளுடைய முற்று வினையை இணைத்துச் செயப்பாட்டு வினைப்பொருள் உணர்த்தும் நிலை கோண்டுமொழியில் உள தென்பார் டாக்டர் கால்டுவெல்.

ஆங்கில மொழியின் செல்வாக்கால் செயப்பாட்டுவினை அதிக அளவில் வழங்குகிறதெனலாம். 'கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்' போன்ற தொடரமைப்புக்கள் பெருகியுள.

12. தொழிற்பெயர்

தொழிலை உணர்த்தும் பெயர் தொழிற்பெயர் எனப்படும்.

தமிழில் தொழில்பெயர் இருவகைப்படும். 1) காலம் உணர்த்தாத தொழிற்பெயர். (தல், அல், அம், ஐ, கை, வை கு, பு, வு, சி, து, உள், மை விகுதிகள் பெறும்)

2 காலம் உணர்த்தும் தொழிற்பெயர் [கால இடைநிலை யோடு து, மை விகுதி பெறும்; எ-டு. ஆடுவது]

தொழிற்பெயர்களை மேலும் இருவகையாகப் பிரிக்கலாம். சில தொழிற்பெயர்கள் தங்களுக்கு முன் பெயரெச்சங்களை ஏற்கும்; சில வினையெச்சங்களை ஏற்கும்.

1 நல்ல வாழ்க்கை
உயர்ந்த வருகை
வென்ற முயற்சி

---

* Dravidian Linguistics — P. 20

Koviloor Digital Library

2 நன்கு வாழ்தல்
உயர்ந்து வரல்
வென்று முயலல்.

முன்னவை பெயர்த்தன்மையைப் பெற்றுள்ளன; எனவே பெயரெச்சங்களை ஏற்கும். இரண்டாமவை வினைத்தன்மை பெற்றுள; எனவே வினையெச்சங்களை ஏற்கும்.

மலையாளத்தில் வினையடிச் சொற்களோடு கை, அல், மை, முதலிய விகுதிகள் சேர்ந்து தொழிற்பெயர்கள் அமையும்.

பிரசத்தி பண்ணியருளல், அருளிச் செய்கை, முதலிய தொழிற்பெயர்கள் மலையாளக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

போக்கு, வரத்து முதலிய தொழிற்பெயர்களும் கல்வெட்டுகளில் உள. கல்வெட்டுக்களில் உள்ள தொழிற்பெயர்கள் அமைப்பாலும் தொழிலாலும் தமிழையே ஒத்துள என்பார் திரு சேகர். *

கோண்டியில் 'மார்' தொழிற் பெயர் விகுதியாக வருமென்பர்.

'' அட்மார்'' — சமைத்தல்
'உருஸ்யார்''— உடைத்தல்
கர்ஸ்மார் — விளையாடல்.

13. வினையாலணையும் பெயர்

வினைமுற்றுகள் வேற்றுமை ஏற்றுப் பெயர்களாய்ச் செயல்படும். அவை தொழிலை உணர்த்தாமல் தொழில் செய்வானை உணர்த்தும்.

முற்காலத்தில் வினை முற்றுக்களே மாறுல்ம வினையாலணையும் பெயராய் வந்தன. பின்னர் வினைமுற்றிலிருந்து வினையாலணையும் பெயர் வேறுப்பட்டன.

வந்தான் — வினைமுற்று
வந்தவன் — வினையாலணையும் பெயர்

வந்த + அன் = வந்தவன் என்று பெயரெச்சத்தோடு விகுதி

---

* Evolution of Malayalam—133

Koviloor Digital Library

சேர்ந்தமைந்ததாகக் கூறுவார் தெ. பொ. மீ. வந்தோன், வருவோர் முதலிய சொற்களும் அவ்வாறமைந்ததென்பார் அவர்.

வினையாலணையும் பெயர் காலம் காட்டும். ஆயின் சில வினைமுற்றுக்கள் வினையாலணையும் பெயர்களாக நிலைத்துக் காட்டும் தன்மையினை இழந்து பெயர்களாகவே இருக்கக் காணலாம்.

ஓதுவார், ஆழ்வார், ஆண்டான், பெற்றோர், மூத்தாள்.

வினையடிச் சொல்லோடு கால இடைநிலைகள், பாலிட ஈறுகள் அல்லது சுட்டுபபெயர்கள் இணைந்து வினையாலணையும் பெயரமைவது மலையாளததிலும் காணப்படுகிறது.

மூத்தோர், பறிப்போர், உழுவோர் கொடுத்தவன், மூத்தவன்.

கோண்டியில் வினையாலணையும் பெயருக்கு 'வால்' விகுதி சேரும்.

'அட்வால்' (அமைப்போன்)

வெஹ்வால் (கூறுவோன்)

கன்னடத்தில் அவ், உருவிலி உருபு இரண்டும் வினையாலணையும் பெயருக்கு இணையுமென்பர்,

கொள்டவம் [செய்தவன்)

உடிதவ (ஒடித்தது)

பரதவ [எழுதியது)

IV. தொடர்

தொடரில் மிக இன்றியமையாத உறுப்பு பயனிலையாகும். பயனிலையாகப் பெரும்பாலும் ஒரு வினைமுற்று வரும். பெயர், வினா ஆகியனவும் பயனிலையாகத் தமிழில வரும் என்பர்.

தொடரில் பயனிலை தவிர செய்பவன், கருவி, நிலம், காலம், செயப்படுபொருள் ஆகிய கருத்துக்களைப் புலப்படுத்தும் பெயர்கள் வரும். அவை அவ்வவற்றிற்குரிய வேற்றுமை உருபால் பயனிலையோடு இணைக்கப்படும்.

"கந்தன் தன்னுடைய வீட்டின் முற்றத்தில் காக்கையின்

Koviloor Digital Library

கரிய மண்ணால் குடத்தை விற்பதற்கு வனைந்தான்''.

தமிழ், மலையாளம் கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகள் 'வேற்றுமை மொழிகள்' (Casal Languages] என்று கூறப் படும். ஏனெனில் அம்மொழிகளில் பல்வேறு வேற்றுமைத் தொடர்புகளைக் குறிக்க உருபுகளைக் கொண்டுள்ளன என்பார் திரு. குசலப்பா. *

இம் மொழிகளில் வேற்றுமைகளும் எச்சங்களுமே தொட ரில் காணப்படும். எனவே தொடரிலக்கணத்திற்கு அவை களைப் பற்றி அறிவதே சிறப்புடையதென்பர். வேற்றுமைகள் பற்றியும் ஏற்கெனவே நாம் விளக்கமாகக் கண்டுள்ளோம். எனவே எஞ்சிய செய்திகளைக் காண்போம்.

எழுவாய் (subject) பயனிலை (Predicate] செயப்படு பொருள (Object) எனும் மூன்று இம்மொழித் தொடர்களில் உண்டு.

எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்ற முறையில் சொற்கள் தொடரில் அமைவதே திராவிட மொழி இயல்பு. எனவே SOV (Subject Object Verb] மொழிகள் என்று இவை கூறப்படும்.

சில நேரங்களில் இம்முறை மாறிப் பயனிலையோ, செயப் படுபொருளோ முதலில் வரலாம். சொல்வோரின் கருத்திற் கேற்ப, அழுத்தத்திற்கேற்ப அவை மாறி வரும்.

''கண்டனென் கற்பினுக்கணியைக்
கண்களால்''
''பதினறு கழஞ்சு பொன்தேவர்
கொள்ளக்கடவர்'' — மலையாளம்
''இதான் வரெதம் கும்பகமலாரர் — கன்னடம்
(இதை வரைந்தவர் கும்பகமலாரர்)

---

* TheDravidian Languages for example Tamil, Malayalam, Kannada, and Telugu are casal languages in the sense that there are overt markers to symbolise the various casal relations. — A Grammar of Kannada- P. 309

Koviloor Digital Library

'ஆயெ பர்ந்தினி திப்பே' (அவன் பழத்தைத் தின்றான்'', — துளு.

பெயரடைத் தொடர்

பெயருக்கு முன்னால் மட்டுமே பெயரடைகள் வரும். இயற்பெயருக்கு முன்னரே ஏனைய சிறப்புப் பெயர்களும் உறவுப் பெயர்களும் அமையும்.

கணக்காயனார் மகனார் நக்கீரர் [தமிழ்]
':ஸ்ரீ புருஷன மக தேவாதி'' [கன்னடம்)
''சதிரசிகாமணி ஆயின கீழாயடிகள்'' [மலையாளம்]

பெயருக்கும் பெயரடைக்கும் பாலிட இயைபு பொதுவாகக் கருதப்படுவதில்லை. கோண்டியில் பெயருக்கும் பெயரடைக்கும் பாலிட இயைபு உள்ளதென்பர். *

வினையடைத் தொடர்

வினையடையாக வருபவை வினைக்கு முன்வரும். வினைக்குப் பின்னரும் வினையடைகள் வரலாம். வேற்றுமை ஏற்ற பெயர்கள் வினையைக் கொண்டே முடிவதால் வினையடை போல இருக்கக் காணலாம். செயற்கு போன்ற வேற்றுமை ஏற்ற பெயர்கள் தொல்காப்பியரால் வினையெச்ச விகுதியாகக் கூறப் பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. 'ஆக' என்னும் வினையெச் சம் ஒரு வேற்றுமையாகுமா என்னும் கருத்தும் நிலவக் காணலாம்.

''அந்தெ பந்து'' [அவ்வாறு வந்து] — கன்னடம்
'இந்து ரோண காது
[இவ்வாறு 'ரோண' வில்' போரிட்டு) — கன்னடம்
'திங்கள் வாரம் அழிவு கொடுத்து'' [மலையாளம்]
'கல் எழுதி நாட்டிக் கொடுத்தோர்'' [மலையாளம்]
வந்து சென்றான் [தமிழ்]

பாலிட இயைபு

தொடரில் பயனிலைக்கும் எழுவாய்க்கும் பாலிட இயைபு பொருந்தியிருக்க வேண்டும். இதுவே திராவிட

---

* A Descriptive Grammar of Gondi — P 88

முறையாகும், ஏனைய வேற்றுமைகளுக்கோ, வினையடை, பெயரடைகளுக்கோ பாலிட இயைபு கூறப்படுவதில்லை. கோண்டி பெயருக்கும் பெயரடைக்கும் இயைபுடையதாகக் கூறப்படும்.

பழைய மலையாளத்தில் சமஸ்கிருதச் செல்வாக்கால் 'விசேஷன'வுக்கும் 'விசேஸ்ய'வுக்கும் இயைபு ஏற்பட்டதென்றும் பிற்காலத்தே, லீலாதிலகம் சமஸ்கிருதத்தைப் பின்பற்றும் நிலையைக் கடிகிறதென்றும் கூறுவர். *

கோடா மொழியில் உள்ள பாலிட இயைபினைத் திரு. சுப்பையா நன்கு விளக்குகிறார்.]

கோடா மொழியில் 1] எழுவாய்க்கும் பயனிலைக்கும் உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் பாலியைபு உளது.

''நீ தித்லாரி' [நீ தினமுய்]

ஆன் கொட்பேன் [நான் கொடுப்பேன்] படர்க்கையில் பால், எண் வேறுபாடின்றி இடத்தை மட்டுமே பயனிலை காட்டும் என்பார்.

2] தன்வினை, ஏவுவோன் வினைப்பயனிலைகள் பாலியைபு காட்டும்.

'ஆன் புஜ் தவிராஸ்பேன்''
[நான் புலியைக் கொன்றேன்]

தமிழில் மூன்றும் வேற்றுமை கருத்தா பயனிலையோடு இயைபு கொள்வதில்லை.

புலி வீரனால் கொள்ளப்பட்டது. வீரன் என்பது கருத்தா. புலி எழுவாய், எழுவாய் தான் இயைபு கொண்டுள்ளது. ஆயின் கோடாவில் கருத்தா பயனிலையோடு இயைபு கொள்ளும்.

''புஜ் எனுல் தவிர்ஸ்பேன்''
(புலி என்னால் கொன்றேன்]

3] மூவிடப் பெயர் உடைமைப் பொருளிலும் விரவுப் பொருளிலும் வரும் போது இயைபு காணப்படும்.

---

* Evolution of Malayalam — P.161

† A note on agreement in Kota — Third Seminar on Drvidian Linguistics — P. 285

Koviloor Digital Library

அவளய்ங் [அவள் தந்தை]
அவனய்ங் [அவன் தந்தை]

துளு மொழியில் எழுவாய் பயனிலைகளிடையே இயைபு காணப்படுகிறது.

ஈரி பத்தரி [நீவந்தாய்]
ஆரி பத்தெரி [அவர் வந்தார்]

எனவே எழுவாய், பயனிலைகள் தம்முள் பால் இயைபு கொண்டிருத்தல் திராவிட இயல்பு எனலாம்.

தொடர்முறை

முதல் தொடருக்கு [Principal cause] முன்னர் துணைத் தொடர் [Subordinate] வருவது முறையாக உளது.

அவன் நன்கு படித்தால் தேர்ச்சி அடைவான்.

'எல்லாம் முட்டில் ஏழரைக் காணம்
தண்டப்படுவிது'' [மலையாளம்]

கூற்றுத் தொடர் முதலிலும் பிறகு 'என்று' எனும் இணைப்பும் அடுத்து முதல் தொடரும் வரும்.

''அரந்தை அடிக்கும் தொழிஞ்ஞோம்'
என்று கல் எழுதி — மலையாளம்
அரந்தை சேர்ப்பதை விட்டு விட்டோம்
என்று கல் எழுதி — தமிழ்

செயப்பாட்டு வினையாக மாற்றும் முறை அருகிக் காணப் படுகிறது.

வினாத்தொடர் அமைக்கும் முறை எளிதாக உளது.

இணைப்பு விகுதிகள் [Conjunction]

இரண்டு தொடர்களோ, சொற்களோ ஒரு பயனிலை கொண்டால் அவை இணைப்பு விகுதிகளால் இணைக்கப்படும்.

தமிழ்	உம்	[மற்று]
தெலுங்கு	வ்	பரியு
கன்னடம்	ஊ	மட்டு, ஹாகு
மலையாளம்	உம்	—

Koviloor Digital Library

34343

என்று இணைப்பு விகுதிகள் வருவதாக விளக்குவர் *

கமலாவும் ராதையும் சென்றார்கள்.
ரங்கடு ரெட்டி வச்சாரு [தெலுங்கு]
[ரங்கனும் ரெட்டியும் வந்தார்கள்]
ரங்கனூரெட்டியூ பந்தரு [கன்னடம்]
ராமனும் கோபாலனும் வந்து (மலையாளம்)
''Rama came and ate''

என்று ஆங்கிலத்தில் இணையும் தொடர்கள் திராவிடமொழிகளில் எச்சத்தால் இணையும்.

''இராமன் வந்து உண்டான்'' சிலவிடங்களில் ''இராமன் வந்தான் உண்டான்'' என்று வரும். அப்போது 'வந்தான்' என்பது முற்றெச்சம் என்று கூறப்படும்.

இணைப்பு வினை [Copular Verb]

பயனிலையாக வினை மட்டுமன்றிப் பெயரும் வரலாம். அங்ஙனம் பெயர் பயனிலையாக வரும் தொடரில் வினையே இடம் பெறாது.

''அவன் அமைச்சன்''

ஆயின் ஆங்கில இலக்கணப்படி இவ்வாறு பெயர் பயனிலையாக வந்தால் இணைப்புவினை ஒன்று வரும்.

''He is a Minister''

தமிழில் புதைதொடரில் இணைப்புவினை இருந்தாலும் புறத்தொடரில் இணைப்புவினை இல்லை என்பார் தெ.பொ.மீ.எனினும் ஆந, இரு, ஆகஇரு ஆகியவை இணைப்பு வினையாக வருமென்பார் திரு. கோதண்டராமன். மால்டோ, துளுவிலும் இணைப்பு வினை காணப்படவில்லை.

''ஆ யெ மனுஸ்யெ'' [அவன் மனிதன்] } —துளு
''இ கட்டகெ'' [நீ கெட்டிக்காரன்] }
''எங்கி நமி தெப'' என் பெயர் தெப''—மால்டோ.

எனவே இணைப்புவினை இல்லாமலிருப்பதே திராவிட மொழி இயல்பெனலாம்.

---

* The Conjunctive Particle in Literary Dravidian Third Seminar on Dravidian Linguistics — P 337

Koviloor Digital Library

பிழைதிருத்தம்

பக்கம்	வரி	உள்ளது	திருத்தம்
7	21	ஆவர்	ஆகும்
15	26	வடிவங்கள்	ஒலிவடிவங்கள்
15	29	மாற்ருெலிகள்	மாற்ருெலி
19	5	அவ	அவ்
19	6	தமிழ்	தமிழில்
22	17	என்றும்கூறுதல்	என்றுகூறுதலும்
32	15	தமிழ் மலையாளத்தில் மாருமல் உளது	நீக்குக
32	[illegible]	தனிக்குறில்	தனிமெய்
34	இறுதி	ந்த	ந்த்
37	19	இக்	இச்
40	4	பென்னீண்டது	பொன்னீண்டது
40	இறுதி	வைசாசி	வைசாகி
42	17	அடைப்பிலா	நீக்குக
48	16	காமறு	காமரு
48	22	பதவியியல்	பதவியல்
50	3	எனப்	என்றும்
53	8	ணகா.	ணகர
53	11	கபச	கசப
54	22	சிறுமி	நீக்கி மேல் வரியில் சேர்க்க
62	4	எரு	ஒடு
63	19	உணர்த்தின	உணர்த்தியது
68	12	ர்	நீக்குக
69	1	ஏண்	எண்
74	4	இ	இர்
79	23	மூலதிரா	மூலவடதிரா
85	22	என்று	என்ற
86	13	என்பது	என்பன
89	20	இனை	இணை
92	16	இய்	இவ்
93	8	(b)	(d)
110	9	கா	கர்
111	31	செய்	செய

வளர் தமிழ் நூலகம் காரைக்குடி